# சிறுவர்களின்

## ஈமானிய வினாக்கள்



அப்துல்லாஹ் பின் ஹமத் அர்ரக்ப்

ح جمعية الدعوة والإرشاد وتوعية الجاليات بالربوة ، ١٤٤٣هـ

*فهرسة مكتبة الملك فهد الوطنية أثناء النشر*

الركف ، عبدالله حمد عبدالعزيز
أسئلة الطفل الإيمانية باللغة التاميلية. / عبدالله حمد عبدالعزيز الركف - ط١. . - الرياض ، ١٤٤٣هـ
١٤٠ ص ، ٢٣ X ١٦ سم
ردمك: ٢-٢١-٨٣٥٢-٦٠٣-٩٧٨

١- الاسلام - اسئلة و اجوبة أ.العنوان
ديوي ٢١٠.٧٦ ١٤٤٣/٤٣٥٠

رقم الإيداع : ١٤٤٣/٤٣٥٠
ردمك: ٢-٢١-٨٣٥٢-٦٠٣-٩٧٨

OsoulCenter
www.osoulcenter.com

This book has been conceived, prepared and designed by the Osoul Centre. All photos used in the book belong to the Osoul Centre. The Centre hereby permits all Sunni Muslims to reprint and publish the book in any method and format on condition that 1) acknowledgement of the Osoul Centre is clearly stated on all editions; and 2) no alteration or amendment of the text is introduced without reference to the Osoul Centre. In the case of reprinting this book, the Centre strongly recommends maintaining high quality.

+966 11 445 4900
+966 11 497 0126
P.O.BOX 29465 Riyadh 11457
www.osoulcenter.com

OsoulCenter
www.osoulcenter.com

This book has been conceived, prepared and designed by the Osoul Centre. All photos used in the book belong to the Osoul Centre. The Centre hereby permits all Sunni Muslims to reprint and publish the book in any method and format on condition that 1) acknowledgement of the Osoul Centre is clearly stated on all editions; and 2) no alteration or amendment of the text is introduced without reference to the Osoul Centre. In the case of reprinting this book, the Centre strongly recommends maintaining high quality.

+966 11 445 4900
+966 11 497 0126
P.O.BOX 29465 Riyadh 11457
www.osoulcenter.com

بسم الله الرحمن الرحيم

அளவற்ற அருளாளன், நிகரற்ற அன்புடையோன்
அல்லாஹ்வின் பெயரால் ஆரம்பிக்கிறேன்



# முன்னுரை

புகழ் அனைத்தும் அகிலத்தாரைப் படைத்துப் பரிபாலிக்கும் அல்லாஹ்வுக்கே! ஸலவாத்தும் ஸலாமும் இறைத் தூதர்களில் சிறந்தவர் எங்கள் நபி முஹம்மத் (ஸல்) அவர்கள் மீதும், அவர்களின் குடும்பத்தார், தோழர்கள் மீதும் உண்டாவதாக!

பிரபஞ்சத்தைப் பற்றிய சரியான கண்ணோட்டத்தை குழந்தைகளிடம் உருவாக்குவதில் அவர்களின் ஆரம்பப் பருவத்திற்கு அதிக முக்கியத்துவம் உள்ளது. இப்பருவத்தில் குழந்தையின் மனதில் விதைக்கப்படும் கருத்துக்கள் தான் மனித ஆளுமையை அதன் அனைத்து அங்கங்களையும் உருவாக்கும் அடிப்படைத் தொகுதியாகக் கணிக்கப்படுகின்றன. அத்துடன் அவை குழந்தையின் உளவியல், சமூக, ஆன்மீகத் தேவைகளுக்கு ஏற்ற விதத்திலும் இருப்பது அவசியமாகும். வாழ்க்கை நடுவே உறுதியுடன் பயணிக்கவும், அதன் பாதைகளில் திடமான, உற்பத்தித்திறன், துணிவுமிக்க ஒரு மனிதனாகச் செல்லவும் உதவக்கூடிய வகையில் முழுமையான ஒரு குழந்தையாக உருவாக்க அக்கருத்துக்கள் தான் அவசியமாகின்றன. தான் கேட்பவற்றையும், பார்ப்பவற்றையும் வைத்துத் தான் ஒரு குழந்தை இவ்வுலகைப் பற்றி தனக்கென ஒரு மாதிரி வடிவத்தை உருவாக்கிக் கொள்கின்றது. அதற்குப் பின்னால், அவன் கடந்து செல்லும் நிலைகளுக்கேற்ப இந்த அடிப்படை (மாதிரி)க் கண்ணோட்டத்தை திருத்துவதும், மேம்படுத்துவதும் தான் அவனது வாழ்க்கையில் எஞ்சியுள்ளது.

இப்பருவத்தில் குழந்தை தாங்கி நிற்கும் அறிவியல் மூலாதாரம் தனது பெற்றோர் தான். இதனால் தான் பிள்ளைகளின் சீர்திருத்தத்தின் பிறப்பிடமாக பெற்றோரின் சரியான கல்வி முறை திகழ்கின்றது. தமது பிள்ளைகளுக்கு கற்றுக் கொடுப்பது அவர்களது பொறுப்பாகும். அதனால் தான் நபி (ஸல்) அவர்கள் “நீங்கள் ஒவ்வொருவரும் பொறுப்பாளிகள், உங்கள் ஒவ்வொருவரிடமும் தமது பொறுப்புப் பற்றி வினவப்படும்” என்று கூறினார்கள். (புஹாரி 2558, முஸ்லிம்

1829) இப்பொறுப்பானது கற்பித்தல் நடவடிக்கையில் பாரிய முயற்சியையும், கரிசனையையும் வேண்டி நிற்கின்றது.

ஆசைகளும், குழப்பங்களும் மலிந்துள்ள ஒரு காலத்தில் நாம் வாழ்கின்றோம் என்ற வகையில் பிள்ளைகளைப் பண்படுத்துவதில் உண்மை, அக்கறை, சிறந்ததைச் செய்தல் போன்றன உள்ளடங்கிய பாரிய ஒரு முயற்சியை மேற்கொள்வது பெற்றோர் மீது கடமையாகும்.

பிள்ளைகளின் மனதில் பெற்றோர் விதைத்த எத்தனையோ விதைகள் அவர்கள் இவ்வுலகை விட்டும் பிரிந்து சென்றதற்குப் பின்னும் தொடர்ந்து நிலைக்கக் கூடிய நற்செயல்களை உருவாக்கியுள்ளன. எனவே குழந்தையும் மரணத்திற்குப் பின் நிலைத்திருக்கும் வருமானமாக ஆகிவிடுகின்றது. நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் : ஒரு மனிதன் மரணித்தால் அவனது அனைத்துச் செயல்களும் நின்றுவிடும். மூன்றைத் தவிர. நிலைத்து நிற்கும் தர்மம், பயனுள்ள கல்வி, தனக்காகப் பிரார்த்திக்கும் பிள்ளை. (முஸ்லிம் 1631)

அல்லாஹ் பெற்றோருக்குச் செய்த உபதேசங்களில் பிள்ளைகளும் உள்ளடங்குவர். அவன் கூறுகின்றான் : அல்லாஹ் உங்களது பிள்ளைகள் விடயத்தில் உங்களுக்கு உபதேசிக்கின்றான். (அல்குர்ஆன் - 4:11) அதாவது, பெற்றோர்களே! உங்களது பிள்ளைகள் உங்களிடம் அமானிதமாக ஒப்படைக்கப்பட்டவர்கள். அவர்களது ஈருலக தேவைகளை மேற்கொள்ளும் படி அவன் உபதேசிக்கின்றான். அவர்களுக்கு கல்வி கற்பித்து ஒழுக்கமூட்டி கெடுதிகளிலிருந்து அவர்களைப் பாதுகாப்பதுடன் அல்லாஹ்விற்கு எப்போதும் அஞ்சி வழிப்படும் படியும் ஏவ வேண்டும். அல்லாஹ் கூறுகின்றான் : மு.்.மின்களே! உங்களையும், உங்கள் குடும்பத்தாரையும் (நரக) நெருப்பை விட்டுக் காப்பாற்றிக் கொள்ளுங்கள். அதன் எரிபொருள் மனிதர்களும், கல்லுமேயாகும். அதில் கடுமையான பலசாலிகளான மலக்குகள் (காவல்) இருக்கின்றனர். அல்லாஹ் அவர்களை ஏவிய எதிலும் அவர்கள் மாறு செய்யமாட்டார்கள். தாங்கள் ஏவப்பட்டபடியே அவர்கள் செய்து வருவார்கள். (அல்குர்ஆன் - 66:6) எனவே பிள்ளைகள் அவர்களது பெற்றோரிடம் உபதேசிக்கப்பட்டவர்கள். ஒன்றோ அவர்கள் அவ்வுபதேசத்தை சரிவர அமுல்படுத்த வேண்டும். அல்லது பாழ்ப்படுத்த வேண்டும். அப்போது அவர்கள் வேதனைக்குட்படுவார்கள் இது அல்லாஹ் பெற்றோரை விட தனது அடியார்கள் மீது அதிக இரக்கமுள்ளவன் என்பதை உணர்த்துகின்றது. எனவே தான் பெற்றோர்களுக்கு அவர்கள் பிள்ளைகளுடன் முழுப் பாசத்துடன் இருந்தும் அல்லாஹ் இவ்விடயத்தில் உபதேசித்துள்ளான்.

எனவே குடும்பத்தினுள்ளே குழந்தை வளர்ப்பு நல்ல அமைப்பில் இருந்தால் அக்குழந்தை வெளியுலகிலும் முன்னுதாரணமாக செயற்படலாம். குழந்தை வளர்ப்பிலும், அக்குழந்தையை சரியான ஈமானிய அடிப்படையில் வளர்ப்பதிலும் எந்தக் குடும்பத்தனின் பங்கில்லையோ அது நல்ல குணங்களை இழந்த குழந்தைகள் உருவாகத் தான் வழிவகுக்கும்.

பண்படுத்தல் என்பது தவறுகளைத் திருத்துவது மாத்திரமல்ல. மாறாக மார்க்கத்தின் அடிப்படைகள், மற்றும் சட்டதிட்டங்களை சொல்லிக் கொடுத்தல், போதித்தல், எடுத்துக்காட்டுதல், அவை உள்ளத்தில் வேரூன்றி நிலைத்திருக்க முன்மாதிரியாக இருத்தல், உபதேசம், கதை, நிகழ்வுகள் போன்ற பலதரப்பட்ட வழிமுறைகளைப் பயன்படுத்துவதும் தர்பியா எனும் பண்படுத்தலில் உள்ளடங்குகின்றன. இவையனைத்திலிருந்தும் வாழ்க்கையிலும், சமூகத்திலும் நற்பண்புள்ள துணிவுமிக்க ஆளுமையை வெளியாக்கலாம்.

இந்நூலானது இரு பகுதிகளைக் கொண்டது. முதலாவது பகுதி : ஈமானியக் கல்வி பற்றியது. இது பெற்றோர் தமது பிள்ளைகளைப் பண்படுத்த உதவும் அடிப்படைகள் மற்றும் கொள்கைகளை உள்ளடக்கியுள்ளது. இரண்டாவது பகுதி : சிறார்களின் ஈமானியக் கேள்விகளுக்கு பதிலளிப்பதற்கான நடைமுறை மாதிரிகள் பற்றியது. இது சிறார்களில் பலதரப்பட்ட வயதுகளில் அவர்களுக்கு மத்தியில் பரவலாகக் காணப்படும் அதிகமான கேள்விகளை ஒன்று சேர்ப்பதாகும். குறிப்பாக ஈமானின் ஆறு விடயங்கள் பற்றியும் அவ்வாறான கேள்விகளைக் கையாளும் முறை பற்றியும் தெளிவூட்டல் உள்ளது.


அல்லாஹ்வே அனுகூலம் புரிபவன். அவனே நேர்வழி காட்டுபவன்.

எழுத்து : அப்துல்லாஹ் பின் ஹமத் அர்ரக்ப்

தமிழில் : எம். அஹ்மத் (அப்பாஸி)

# உள்ளடக்கம்


10 ஈமானியக் கல்வி....





சிறார்களுக்கான ஈமானியக் கல்வி 26

50 ஈமானியக் கல்வியின் தூண்கள்







பதில்களுக்கான

நுழைவாயில்

72

90

சிறார்களின்

ஈமானிய

வினாக்களுக்கு

பதிலளிப்பதற்கான

சில

எடுத்துக்காட்டுகள்



முதலாவது பகுதி

# ஈமானியக் கல்வி...






மனித

மனித உருவாக்கத்தின் அடிப்படைத் தேவையில் கல்வி இன்றியமையாத ஒன்று. ஒரு குழந்தையை வாழ்க்கையின் எல்லாத் துறைகளிலும் திறன்பட உருவாக்கும் சாதனம் கல்வியே. இக்கல்வி தான் குழந்தையின் சமூகவியல், அறிவியல், உளவியல், ஆரோக்கியம் அனைத்திலும் சிறந்த ஆளுமையை உருவாக்குகின்றது. ஈமானியக் கல்வியையும் அதன் அவசியத்தையும் பற்றிப் பேச முன் கல்வி என்றால் என்ன நாடப்படுகின்றது, கல்வியாளர்கள் அதிலிருந்து என்ன எதிர்பார்க்கின்றார்கள் போன்றன பற்றி அறிந்து கொள்வது சாலச் சிறந்தது.

# தர்பியா[1]



## (கல்வி / பயிற்சி) என்றால் என்ன?

தர்பியா என்பது வழிகாட்டல், பயிற்சி, போதனை, பண்படுத்தல் மூலம் நல்ல பழக்க வழக்கங்களை உருவாக்குவதை நோக்கமாகக் கொண்ட விதிகள் மற்றும் சட்டங்களால் நிர்வகிக்கப்படும் முன்னேற்றகரமான வழிகாட்டல் நடவடிக்கையாகும். இளம் சிறார்களின் உள்ளுணர்வைப் பாதுகாத்து வளர்ப்பதிலும், அவர்களுடைய திறமைகளை மேம்படுத்துவதிலும் அக்கறை செலுத்துகின்றது.

மேலும், பூமியை நிர்வகிக்கப் பொருத்தமான நல்ல மனிதனை உருவாக்குவதற்கும் இந்தத் தர்பியா உதவுகின்றது. எனவே தர்பியா என்பது வாழ்க்கையின் எல்லாத் துறைகளிலும் தலைவர்களை உருவாக்கும் கருவியாக உள்ளது.

*1) தர்பியா என்ற சொல் பல கருத்துக்களில் பயன்படுத்தப்படுகின்றது. கல்வி, பயிற்சி, வளர்ப்பு, பண்படுத்தல் போன்றன அவற்றுள் சில. இந்நூலில் வசனங்களுக்கேற்ற வகையில் நான்கு அர்த்தங்களிலும் பயன்படுத்தப்படுள்ளது என்பதை கவனித்துக் கொள்ளுங்கள்.*

# ஈமானியக் கல்வியின் அவசியம்



விசுவாசம் (ஈமான்) மனித இருப்பின் பேருண்மையாகவும், பெரும் விவகாரமாகவும் உள்ளது. அது உலக வாழ்க்கையில் மனிதன் செல்லும் பாதையில் பல கிளைகளைக் கொண்டது. “அவர்களில் விசுவாசம் கொண்டோரும் உள்ளனர். நிராகரித்தோரும் உள்ளனர்.” (அல்குர்ஆன் - 2:253) அந்த விசுவாசத்தின் அடிப்படையில் தான் அவர்களுடைய செயற் பாடுகள் நோக்கப்படுகின்றன. மறுமை வாழ்வில் அவர்களது இறுதியிடத்தைத் தீர்மானிப்பதும் இந்த விசுவாசம் தான். மனித வாழ்வில் உறுதி மிக்க பருவம் சிறுபிராயமாகும். ஏனெனில் இப்பருவத்தில் குழந்தையின் உள்ளத்தில் விதைக்கப்படும் நம்பிக்கைகள், நற்பண்புகள், பழக்க வழக்கங்கள், சிந்தனைகளை அழிப்பது ஒரு புறமிருக்க அவற்றை மாற்றுவதே பெரும் சிரமமாகின்றது. அதிலேயே பிடிவாதம் பிடிக்கும் நிலையும் ஏற்படுகின்றது. சிலவேளை அதன் தாக்கங்கள் வாழ்நாள் முழுவதும் நிலைத்திருக்கவும் செய்கின்றது. இதனால் தான் சிறுபிராய ஈமானியக் கல்வியானது இவ்வுலகில் மனித வாழ்வில் ஆயுள் முழுவதும் நிலைத்திருக்கும் ஒரு பருவமாகத் திகழ்கின்றது.

கல்வி என்பது முழுக்க முழுக்க அக்கறை செலுத்துவதும் கவனமெடுப்பதும் தான். எனவே அக்கறையின்றி கல்வியில்லை. அவ்வாறு நாம் செலுத்தும் அக்கறையில் மிகச் சிறந்தது குழந்தைகளின் உள்ளங்களில் ஈமானை விதைப்பதில்

எடுக்கும் அக்கறைதான். இறைநம்பிக்கை, ஆன்மீகப் பக்கத்தைப் புறக்கணித்து விட்டு உளவியல் பக்கத்தைப் பயன்படுத்துவதில் அதிக ஆய்வாளர்களின் கவனம் திரும்பியிருக்கும் ஒரு காலத்தில்தான் நாம் வாழ்கின்றோம். அவர்கள் தமது ஆய்வுக் கட்டுரைகளில் மறுமை வெற்றிக்கு இட்டுச் செல்லும் சீர்திருத்தத்தில் கவனம் செலுத்தாததால் உடல் தரங்களை வைத்து இவ்வுலகில் அடையும் வெற்றிகளின் பக்கமே வழிகாட்டுகின்றனர். இது எமது கல்வித் தோற்றத்தை அவர்களை விட்டும் மிகவும் வித்தியாசமாக்குகின்றது.

ஈமானியக் கல்வி என்பது இஸ்லாத்தில் நபித்துவ சகாப்தத்தில் கல்விக் கட்டமைப்பு உருவான அடிப்படைத் தூண்களில் ஒன்று என்பது யாருக்கும் மறையாத விடயம்.

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் : நீங்கள் ஒவ்வொருவரும் பொறுப்பாளிகள். உங்களது பொறுப்புக்களைப் பற்றி நீங்கள் ஒவ்வொருவரும் வினவப்படுவீர். ஒரு தலைவர் பொறுப்பாளி. அவர் தனது (பிரஜைகள் விடயத்தில்) பொறுப்பைப் பற்றி வினவப்படுவார். ஒரு பெண் தனது கணவனின் வீட்டில் பொறுப்பாளி. அவளும் தனது பொறுப்புப் பற்றி வினவப்படுவாள். (அறிவிப்பவர் : அப்துல்லாஹ் இப்னு உமர் (றழி). ஆதாரம் : புஹாரி 2558, முஸ்லிம் 1829). நம் ஒவ்வொருவர் மீதும் சுமத்தப்பட்டுள்ள பொறுப்புக்களின் மகத்துவத்தை நபியவர்கள் உணர்த்தியுள்ளார்கள். எமது பொறுப்புக்குக் கீழ் உள்ளவர்களுக்கு நாம் என்ன செய்தோம் என்பது பற்றி சந்தேகமின்றி வினவப்படுவோம். மேலும் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் : யாருக்கு அல்லாஹ் அதிகாரத்தைக் கொடுத்து, அவர் தனது பிரஜைகளுக்கு நலவு நாடி, உபதேசிக்க வில்லையெனில் சுவர்க்கத்தின் வாடையைக் கூட நுகர மாட்டார். (புஹாரி 7150) இதில் உண்மையுடனும், நம்பிக்கையுடனும் உபதேசிப்பதன் அவசியம் சுட்டிக்காட்டப்படுள்ளது. இது உபதேசிக்கப்படுபவரின் எல்லாப் பகுதி நலவுகளையும் உள்ளடக்கிய பரிபூரணமான



உபதேசமாக இருக்க வேண்டும். இது பற்றி இப்னு உமர் (றழி) அவர்களின் கூற்றொன்றும் அறிவிக்கப்படுகின்றது. “உனது குழந்தைக்கு ஒழுக்கத்தைக் கற்றுக் கொடு. அவனைப் பற்றி என்ன ஒழுக்கத்ததைக் கற்பித்தாய்? எதனைப் போதித்தாய்? என உன்னிடம் வினவப்படும். உனக்குக் கட்டுப்பட்டு, உபகாரம் செய்ததைப் பற்றி அவனிடம் வினவப்படும் எனக் கூறினார்கள். (இமாம் பைஹகியின் (ஃஅபுல் ஈமான் 8141). பொறுப்பு என்பது முதலில் பெற்றோர் மீது தான் உள்ளது என்பதை இப்னு உமர் (றழி) அவர்கள் இங்கு உறுதிப்படுத்துகின்றார்கள். அவ்விருவரும் தான் ஒழுக்கமூட்டல், கற்பித்தலில் முதல் மூலாதாரம். கல்வி தர்மத்தை விடச் சிறந்ததெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. ஒரு மனிதன் தனது குழந்தைக்கு ஒழுக்கத்தைக் கற்பிப்பது ஒரு ஸாஉ (4 கைப்பிடியளவு) தர்மம் செய்வதை விடச் சிறந்தது எனக் கூறப்பட்டுள்ளது. (திர்மிதி 1951[1]) பிள்ளைக்கு நற்குணத்தைப் போதிப்பது அவனுக்கு வழங்கும் அனைத்து நன்கொடைகளை விடவும் சிறந்ததென சில அறிவிப்புக்கள் வந்துள்ளன.

1. இது பலவீனமானதென அல்பானீ (ரஹ்) கூறியுள்ளார்கள். அஸ்ஸில்ஸிலா அழ்ழஈபா (1887).

ஒரு தந்தை தனது பிள்ளைக்கு நல்லொழுக்கத்தை விட சிறந்த எதனையும் கொடுத்திட முடியாது எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட கூற்றுக்கள் அனைத்தும் ஒழுக்கம், கல்வியைப் போதிப்பதில் கவனம் செலுத்துவது தான் பெற்றோர் தமது பிள்ளைகளுக்குச் செய்யும் சேவைகளில் மிக முக்கியமானதும் உண்மையான துமாகும் என்பதையே பறைசாற்றுகின்றன.


கடந்த காலத்தில் நாம் மூடிய, இறுக்கமான ஒரு சூழலில் தான் வளர்க்கப்பட்டோம். ஆனால் இன்று எமது வீடுகள், யன்னல்கள் எல்லாம் முழு உலகத்திற்குமாகத் திறந்து வைக்கப்பட்டுள்ளன. இதில் சாதக, பாதகங்கள் இரண்டும் உள்ளன. எம்மைச் சூழ நடப்பவற்றை சரியாக நாம் விளங்கி விழித்துக் கொள்ளா விட்டால் சாதகங்களைப் பாதகங்கள் மிகைத்து விடும். எம்மைச் சூழ ஏற்படும் வேகமான திருப்பங்களில்



தொடர்ந்து எம்மால் கவனம் செலுத்தி, அதனை ஒரு நல்ல கல்வி கலாசாரத்தின் கண்ணோட்டத்தில் எம்மால் வாசிக்க முடியுமென்றால் அதில் ஏற்படும் மாற்றங்களை எம்மால் புரிந்து கொள்ள முடியும். கல்வியலாளர்கள் இந்தப் பகுதியில் கரிசணை எடுப்பதானது சிறார்களை உருவாக்க துணை புரியும் குடும்பச் சூழல் மூலமும் இதில் அக்கறை செலுத்தும் மழலையர் பள்ளிகள், பாடசாலைகளைத் தெரிவு செய்வதன் மூலமும் அவர்களின் உள்ளங்களில் விசுவாசத்தின் அர்த்தங்களை வலுப்படுத்துவ தற்கான முயற்சியினை மேற்கொள்ள ஆணையிடுகின்றன. எம்மைச் சூழ நடப்பவற்றை கவனியாமலிருப்பது ஈடு செய்ய முடியாத இழப்புக்கள் உருவாகின்றன என்று பொருளாகும். எனினும் தொடர்ச்சியான கல்விப் பணி மற்றும் தொடர்ச்சியான பொறுமை மூலம் அல்லாஹ்வின் உதவியால் சிறந்த முடிவுகளைப் பெறலாம். கல்வியில் நிலையற்ற வழிகாட்டுதல் போதாது. மாறாக பின் தொடர்தல், நிலையான வழிகாட்டுதல் தேவை.



# ஈமானியக் கல்வி அத்தியாவசியமானது





இன்றைய இளைஞர்கள் உளவியல் மாற்றம், கலாச்சார மாற்றம், பரந்த மனநிலை போன்றவற்றுடன் தான் வாழ்கின்றனர். எல்லாத் திசைகளில் இருந்தும் அவர்களைச் சூழ்ந்து கொள்ளும் கவர்ச்சிகளைக் குறைத்து மதிப்பிடுவது மிகவும் ஆபத்தானது. நாம் மனித இருப்பிலேயே மிகவும் கடினமான பணியைத் தான் மேற்கொள்கின்றோம். அது தான் கல்வி. மக்களுக்கு இறை நம்பிக்கையைப் போதிப்பதில் அக்கறை செலுத்துவதானது –குறிப்பாக சிறார்களுக்கு- நபிமார்கள், அவர்களுக்குப் பின்னர் வந்த சீர்திருத்தவாதிகள் கடைபிடித்த முறை என்பது, சிறார்களுக்கு ஈமானியக் கல்வி அவசியமானது, இச்சமூகம் அதன்பால் அதிக தேவையுடையது என்பதைத் தெளிவாக எடுத்துக் காட்டுகின்றது. அதற்கான எடுத்துக்காட்டுகள் சில :

நபி நூஹ் (அலை) தனது மகனை சத்தியத்தின்பால் அழைத்து வழிகேடர்களுடன் செல்வதை எச்சரித்தது பற்றி அல்குர்ஆன் பின்வருமாறு கூறுகின்றது : “எனது அருமை மகனே! எங்களுடன் (கப்பலில்) ஏறிக்கொள். நிராகரிப்பாளர்களுடன் நீ ஆகிவிடாதே” (அல்குர்ஆன் - 12:42)

நபி இப்றாஹீம் (அலை) அவர்கள் தனது புதல்வர்களுக்கு செய்த உபதேசத்தைப் பின்வருமாறு கூறுகின்றது : “இதையே இப்றாஹீம் தம் பிள்ளைகளுக்கு வஸ ிய்யத் (உபதேசம்) செய்தார். ய.்.கூ.்.பும் (இவ்வாறே செய்தார்). அவர் கூறினார்: “என் பிள்ளைகளே! அல்லாஹ் உங்களுக்குச் சன்மார்க்கத்தை (இஸ்லாமை) தேர்ந்தெடுத்துள்ளான். நீங்கள் முஸ்லிம்களாக அன்றி மரணிக்காதீர்கள்” (அல்குர்ஆன் - 2:132)

லுக்மான் (அலை) அவர்கள் தனது மகனுக்குச் செய்த உபதேசங்களில் முதலில் இணைவைப்பைத் தான் எச்சரித்தார்கள். “எனது அருமை மகனே! நீ அல்லாஹ்விற்கு (ஒரு போதும் எதனையும்) இணை வைத்துவிடாதே! நிச்சயமாக இணை வைப்பு பாரிய அநீதியாகும். (அல்குர்ஆன் - 31:13)

இதோ எமது நபி (ஸல்) அவர்கள் இப்னு அப்பாஸ் (றழி) அவர்களுக்கு பின்வருமாறு

உபதேசிக்கிறார்கள் : “சிறுவனே! உனக்கு நான் சில வார்த்தைகளை கற்றுத் தருகிறேன். நீ அல்லாஹ்வை மனதில் கொள், அவன் உன்னைப் பாதுகாப்பான். நீ அல்லாஹ்வை மனதில் கொள், நீ அவனை உன் முன் கண்டு கொள்வாய். நீ (ஏதாவது) கேட்பதாயின் அல்லாஹ்விடமே கேள். நீ உதவி தேடுவதாயின் அல்லாஹ்விடமே உதவி தேடு. (திர்மிதி – 2516) இதில் ஈமானியக் கல்விக்கு ஆர்வமூட்டப்பட்டுள்ளது.

ஈமானியக் கல்வி அவசியமென்பதற்கான மற்றுமொரு காரணம்: ஈமானைப் போதிப்பது தான் அறிவியலின் தலையாயது என்பதை அறிந்து கொள்ள வேண்டும். ஒரு குழந்தை ஈமானைக் கற்று, நபித்துவத்தின் அணுகுமுறைப்படி அவனது உள்ளத்தில் அது விதைக்கப்பட்டால் வணக்க வழிபாடுகள், மற்றும் ஏனைய இதர மார்க்க விடயங்கள் அதனைத் தொடர்ந்தே வந்து விடுகின்றன. அதில் அக்கறை எடுப்பது அல்லாஹ்வின் உதவியால் நேர்வழிக்கான காரணமாக அமைகின்றது. ஏனெனில் அதிக விடயங்கள் அல்லாஹ்வையும் மறுமை நாளையும் விசுவாசிப்பதில் தான் பொருத்தப்பட்டுள்ளன. எப்போது ஈமான் வலிமையுடன் இருக்குமோ அப்போது தடுக்கப்பட்ட பாதையில் செல்வதை விட்டும் மனிதனை அது தடுத்து நிறுத்திவிடும்.

அதேபோன்று தான் தமது பிள்ளைகள் சிறார்கள் என்று காரணம் கூறி ஈமானிய விடயங்களைப் போதிப்பதைப் புறக்கணிப்பதும் ஈமானியக் கல்வியின் அவசியத்தை வலியுறுத்துகின்றது. அப்பிள்ளைகள் வளர்ந்த பின் போதிக்க முடியாமல் சிரமப்படுகின்றனர். யார் தனது பிள்ளைக்குப் பயனளிப்பவற்றை உரிய நேரத்தில் போதிப்பதைப் புறக்கணித்து அவனை வீணாக விட்டால் அவர் பாரிய அநீதியைச் செய்து விட்டதாகவே கருதப்படுகின்றார். அதிகமான பிள்ளைகள் சீர்கெட்டுப் போவது அவர்களது பெற்றோர் அவர்களைப் புறக்கணித்து மார்க்கத்தின் கடமையான, மற்றும் உபரியானவற்றைப் போதிக்காததன் விளைவாகவே. எனவே அப்பிள்ளைகளை சிறார்களாக இருக்கும் போது வீணடித்தார்கள். அவர்கள் தமக்கு நலவு செய்து கொள்ளவுமில்லை. வளர்ந்த பின் அவர்களது பெற்றோருக்குப் பயனளிக்கவுமில்லை.

குழந்தைகளைக் குறிவைத்து அடிக்கடி நடத்தப்படும் ஊடக நிகழ்ச்சிகளும் (வீடியோ, ஆடியோ, எழுத்து சம்பந்தமானவை ஆகிய அனைத்தும் உள்ளடங்கும்) ஈமானியக் கல்வியின் அவசியத்தை வலியுறுத்துகின்றன. அவை சிறார்களின் உள்ளங்களை சிதைக்கும் பல தவறான கருத்துக்களை ஊக்குவிக்கின்றன. எனவே இந்த ஊடக அலைக்கு முகம் கொடுக்கும் ஈமானியக் கல்வி அங்கே அவசியமாகின்றது. ஈமானியக் கல்வி என்பது மார்க்கம் அனுமதித்த காரணிகளை வைத்து மேற்கொள்ளும் ஒரு நடவடிக்கை. அது குழந்தையை பல அறிவியல் சிக்கல்களிலிருந்து அவை நிகழ முன்னரே தடுக்கும் ஒரு தடுப்பு நடவடிக்கை. அது நிகழ்ந்தால் அதனைத் தீர்ப்பதிலும் பங்காற்றுகின்றது. இது (ஈமானியக் கல்வி) பெற்றோர்களிடமிருந்து பிள்ளைகளுக்குக் கிடைக்க வேண்டிய உரிமைகளுள் ஒன்று. அல்லாஹ்வின் உதவியால் இவ்வுலக வெற்றிக்கும் மறுமை விமோசனத்திற்குமான வழி. அந்நாளில் மக்களில் பல வேறுபாடுகள் உருவாகுவதும் இந்த ஈமானை வைத்துத் தான்.

இறுதியாக ஈமானியக் கல்வியானது சிறார்களுக்கு ஆன்மீக ஸ்திரத்தன்மை மற்றும் உளவியல் பாதுகாப்பை வழங்குகின்றது. ஏனெனில் அது வாழ்க்கையில் பல பாரிய வினாக்களுக்கெல்லாம் பதில்களை வழங்குகின்றது. இது அல்லாஹ்வின் வேதத்திலிருந்தும், ஸுன்னாவின் ஒளியிலிருந்தும் பெறப்பட்டது மட்டுமே. அவை தூய்மையான ஊற்று, தெளிவான வழிமுறை, தெய்வீக நோக்கங்கள் போன்றவற்றால் தனித்து நிற்கின்றன. குழந்தையின் தனித்துவம் முழுமையடைய அதன் தேவைகளை அறிந்து, அதன் யதார்த்தம் மற்றும் கல்வியின் யதார்த்தம் பற்றிய விழிப்புணர்வுடன் ஈமானியக் கல்வியானது அனைத்திற்கும் பதிலளிக்கின்றது.

# ஈமானியக் கல்வியின் நோக்கங்கள்





கல்வியின் பிரதான நோக்கம் அல்லாஹ்விற்கு மாத்திரம் முழு அடிமைத்தனத்தையும் வெளிப்படுத்தலாகும். இந்தப் பிரதான இலக்கு பல துணை இலக்குகளை அடைவதை வேண்டி நிற்கின்றது. அவை :

**01.** அல்லாஹ்வைத் தெளிவுடனும், நேர்வழியுடன் வணங்கும் நல்ல மனிதனை உருவாக்குவதற்காக முஸ்லிம் சிறார்களிடம் தூய்மையான கொள்கையை உருவாக்குதல்.

**02.** முஸ்லிம் சமூகத்தவர்கள் நற்குணங்களைக் கொண்டிருத்தல். “நீர் மகத்தான நற்குணத்தில் இருக்கின்றீர்” (அல்குர்ஆன் - 68:4) என்று அல்லாஹ்வே சிலாகித்துக் கூறிய அந்த நபி (ஸல்) அவர்களை நற்குணங்களில் முன்மாதிரியாக எடுத்து, “நான் அனுப்பப்பட்டிருப்பது நற்குணங்களைப் பூரணப்படுத்தத் தான்” (அஹ்மத் : 8939) என்ற அந்த நபியின் வார்த்தைக்கும் செயல் வடிவம் கொடுத்தல்.

**03.** முஸ்லிம் சமூகத்தினுள் சமூக உணர்வை வளர்த்தல். தனது சமூகத்துடன் சார்ந்திருந்து, அதன் தேவைகளில் அக்கறை செலுத்தும் உணர்வு வேரூன்ற வேண்டும். “நிச்சயமாக விசுவாசிகள் அனைவரும் சகோதரர்களே” (அல்குர்ஆன் - 49:10) என்ற வசனத்திற்கும், “ஒரு விசுவாசி மற்ற விசுவாசிக்கு ஒன்றோடொன்று பிணைந்திருக்கும் கட்டிடத்தைப் போன்றதாகும்” (புஹாரி : 6026) ஒருவருக்கொருவர் கருணை புரிவதிலும் அன்பு செலுத்துவதிலும், இரக்கம் காட்டுவதிலும் விசுவாசிகளை ஓர் உடலைப் போன்று நீர் காண்பாய். (உடலில்) ஓர் உறுப்பு சுகயீனமடைந்தால் அதனுடன் சேர்ந்து மற்ற உறுப்புக்களும் உறங்காமல் விழித்துக் கொள்கின்றன. அத்துடன் உடல் முழுதும் காய்ச்சலும் கண்டு விடுகின்றது. (புஹாரி : 6011) போன்ற நபிமொழிகளுக்கும் செயல் வடிவம் கொடுப்பதற்காக சமூக உணர்வை வளர்த்தல். இதன் மூலம் முஸ்லிம் சமூகத்தவரிடையே உண்மையான ஈமானிய சகோதரத்துவம் வலுப் பெறுகின்றது.

**04.** உளவியல் மற்றும் உணர்ச்சி ரீதியாக சீரான மனிதரை உருவாக்குதல். அது தனது சமூகத்திற்குப் பயனுள்ள, செயற்திறன் மிக்க மனிதனை உருவாக்கத் துணை நிற்கும். மேலும் பூமியைப் பராமரித்தல் அதன் பொருட்களை முதலீடு செய்வதில் தனது பங்களிப்பையும் கடமையையும் செய்ய ஆற்றல் பெறுவதுடன் அல்லாஹ் அவனை இப்பூமியில் பிரதிநிதியாக வைத்துள்ளான் என்ற ரீதியில் அதன் பணிகளைச் சுமந்து செயலாற்றவும் சக்தி பெறுகின்றான். இங்கிருந்து தான் ஈமானியக் கல்வியை அதன் சரியான அர்த்தத்தில் ஆரம்பிக்க வேண்டிய தேவை தோன்றுகின்றது. ஆன்மீக சக்தியை உருவாக்கவும், சுய உந்துதலை வளர்க்கவும், பாவங்களை விட்டுத் தடுக்கும் மனசாட்சியை பலப்படுத்தவும், சொல், செயல்களில் உயிரோட்டத்தைப் பரத்தவும் தொடர்ந்து செயல்படக்கூடிய ஈமானியக் கல்வியின் அவசியம் தோன்றுகின்றது. அதன் பின்னர் உளவியல் மற்றும் உடலியல் கல்வியின் இலக்குகளை அடைவதற்குத் தேவையான வேலைகளைச் செய்ய அந்த மனிதனிற்கு இலகுவாகின்றது.

# கல்வியின் அடித்தளங்கள்



கல்விக் கட்டமைப்பு சார்ந்திருக்கும் சில அடித்தளங்கள் உள்ளன. அவற்றை பிரதான இரு அடித்தளங்களில் வரையறுக்கலாம்.

## 01. அறிவுத் தளம். 02. நடைமுறை

1. அறிவுத் தளத்தை இரண்டாக வகுக்கலாம். 01. அறிவியல், 02. இறைநம்பிக்கை (ஈமான்)

### முதலாவது பகுதி : அறிவியல்

அது தான் ஒன்றைப் புரிந்து கொள்ளவும் நன்நடத்தை உந்துதல்களை உருவாக்கவும் பாரிய திறவுகோலாக இருக்கின்றது. அல்லாஹ் கூறுகின்றான் : "எவர் மறுமையை அஞ்சி தன் இறைவனுடைய ரஹ்மத்தை ஆதரவு வைத்து இராக்காலங்களில் ஸஜூது செய்தவராகவும், நிலையில் நின்றவராகவும் வணங்குகிறாரோ அவர் (நிராகரிப்பவரைப் போல்) ஆவாரா? (நபியே) நீர் கூறும் : அறிந்தோரும் அறியாதோரும் சமமாவார்களா? நிச்சயமாக (இக்குர்ஆனைக் கொண்டு) நல்லுபதேசம் பெறுவோர் அறிவுடையவர்கள் தாம்" (அல்குர்ஆன் - 39:09).

நபி (ஸல்) அவர்களும் தனது தோழர்களுக்கு பயனுள்ள கல்வியைப் போதிக்க ஆசைப்பட்டார்கள். பயனற்ற கல்வியை விட்டும் அல்லாஹ்விடம் பாதுகாப்புத் தேடுமாறும் போதித்தார்கள். "இறைவா! பயனற்ற கல்வி, மற்றும் (உன்னை) அஞ்சாத உள்ளம் ஆகியவற்றை விட்டும் உன்னிடம் பாதுகாவல் தேடுகின்றேன்" (முஸ்லிம் : 2722)

### இரண்டாவது பகுதி : இறைநம்பிக்கை

அது தான் பிள்ளைகளின் உள்ளங்களில் நிலைத்திருக்கும் ஈமானின் ஆறு விடயங்களாகும். அது வாழ்க்கையையும் அதற்கு அப்பாலும் சுற்றியுள்ள ஒரு முழுமையான பொருளைக் கொண்டது. நபி (ஸல்) அவர்கள் நேரான சரியான ஈமானியக் கொள்கையை தனது சமூகத்து சிறார்களின் உள்ளங்களில் விதைக்க ஆசைப் பட்டார்கள்.



02. நடைமுறை : இதனை மூன்றாக வகுக்கலாம். 01. வணக்க வழிபாடு. 02. நடைமுறைப் பயன்பாடு. 03. நெறிமுறைகள்.

## முதலாவது பகுதி : வணக்க வழிபாடு

நிறைவான கல்விக்கு நேர்மையான உள் அமைப்பும், பிள்ளைகளின் சுய கட்டமைப்பிற்கு வலுவூட்டும் தனித்துவமான அகநிலைக் குணங்களும் அவசியமாகும். பின் தனது வாழ்க்கையை உளத்தூய்மையுடனும் சதாவும் அல்லாஹ்வுடனான தொடர்புடனும் சந்திக்கின்றான். எனவே அவனது நடத்தைகளும் சிந்தனைகளும் சீராகின்றன. ஏன், அவனது எதிர்பார்ப்புக்கள், அபிலாசைகள் கூட சீராகின்றன.

இதோ! நபி (ஸல்) அவர்கள் முஆத் (றழி) அவர்களைப் பார்த்து “அல்லாஹ்வின் மீது சத்தியமாக உம்மை நான் நேசிக்கின்றேன். ஒவ்வொரு தொழுகைக்குப் பின்னாலும் “அல்லாஹும்ம அஇன்னீ அலா திக்ரிக வஷுக்ரிக வஹுஸ்னி இபாததிக” என்று கூறுவதை விட்டுவிடாதீர்” (அபூ தாவூத் : 1522) (பொருள் : இறைவா! உன்னை நினைவுகூர்வதற்கும், உனக்கு நன்றி செலுத்தவும் உன்னை அழகான முறையில் வணங்கவும் எனக்குத் துணை புரிவாயாக!) வணக்கம் என்பது அல்லாஹ்வின் அருள். அது மனித முயற்சி சம்பந்தப்பட்டது மாத்திரமின்றி இறை அனுகூலமும் சேர்ந்தது என்பதை நபியவர்கள் அவர்களுக்குப் போதிக்கின்றார்கள். அதே போன்று வணக்கம் செய்ய எப்போதும் அல்லாஹ்வின் உதவி தேவை என்பதையும் போதிக்கின்றார்கள். இதன் மூலம் ஒரு விசுவாசி தனது இறைவனை வணங்கும் போது அவனிடம் அதற்காக உதவி தேடி, அவனிடம் பொறுப்புச் சாட்டுவது அவசியமாகும் என்ற விடயம் அவனது உள்ளத்தில் நிலைநிறுத்தப்படுகின்றது. ஏனெனில் அல்லாஹ் தான் அவனுக்கு வழிப்படவும் அருள் புரிபவன்.

## இரண்டாவது பகுதி : நடைமுறைப் பயன்பாடு

எனவே செயன்முறையின்றி அறிவில் பயனில்லை. செயன்முறை தான் மறுமையில் மக்களுக்கு மத்தியில் தராதரம் பிரிக்கும் சாதனம். “எனவே, எவர் ஓர் அணுவளவு நன்மை செய்திருந்தாலும் அத(ற்குரிய பல)னை அவர் கண்டு கொள்வார். அன்றியும், எவன் ஓர் அணுவளவு தீமை செய்திருந்தாலும், அத(ற்குரிய பல)னையும் அவன் கண்டு கொள்வான;” (அல்குர்ஆன் - 99:7-8)

## மூன்றாவது பகுதி : நெறிமுறைகள்

இஸ்லாத்தின் வழிமுறையானது அழகிய நற்குணமுள்ள மனிதனை உருவாக்குகின்றது. நபியவர்கள் கூட தனது தூதுத்துவம் ஒரே பொருளில் தான் வடிவமைவதாகக் கருதுகிறார்கள். அது தான் நற்குணமும் அதனைப் போதிப்பதுமாகும். “நான் அனுப்பப்பட்டிருப்பது நற்குணங்களைப் பூரணப்படுத்தத் தான்” (அஹ்மத் : 8939) என நபியவர்கள் கூறினார்கள். மேலும் நற்குணத்தின் பால் அவர்களை உந்தக் கூடியவர்களாக இருந்தார்கள். “உங்களில் எனக்கு மிக விருப்பமானவரும், மறுமையில் எனக்கு மிக நெருக்கமாக அமருபவரும் உங்களில் சிறந்த குணமுடையவரே.” (திர்மதி : 2018) எனவே நெறிமுறைகள் என்பது ஈமானியக் கல்வியின் வெளிப்படையான பிரதிபலனாகும்.

# கல்வியின் சில மாதிரிகள்



செயன்முறை உதாரணங்கள் கூறுவது அடிப்படைகளையும், நற்பண்புகளையும் உறுதிப்படுத்த மிகவும் துணை புரியக்கூடியது. நபி (ஸல்) அவர்களும், தோழர்களும் சிறார்களிடம் ஈமானியக் கட்டமைப்பை உருவாக்க எவ்வாறான வழிமுறைகளைக் கையாண்டார்கள் என்பதைத் தெளிவு படுத்தும் சில உதாரணங்களை இங்கே சுருக்கமாக முன் வைக்கின்றோம்.

1. நபி (ஸல்) அவர்கள் ஹஸன் (றழி) மற்றும் ஹஸைன் (றழி) ஆகியோருக்காக அல்லாஹ்விடம் பாதுகாப்புக் கோரி வந்தார்கள். “அல்லாஹ்வின் முழுமையான (குணமளிக்கும்) சொற்களைக் கொண்டு ஒவ்வொரு ஷைத்தானிடமிருந்தும், நச்சுப் பிராணியிடமிருந்தும், தீய எண்ணத்துடன் தீண்டும் (பொறாமைக்) கண்ணிலிருந்தும் அவனிடம் பாதுகாப்புக் கோருகிறேன்” எனும் இச்சொற்கள் மூலம் உங்களிருவரின் தந்தை இப்றாஹீம் (அலை) (தம் மகன்களான) இஸ்மாஈல் (அலை) மற்றும் இஸ்ஹாக் (அலை) ஆகியோருக்காகப் பாதுகாப்புக் கோரி வந்தார்கள் என்று கூறுவார்கள். (அறிவிப்பவர் : இப்னு அப்பாஸ் (றழி), ஆதாரம் : புஹாரி – 3371)



2. நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் : எல்லாக் குழந்தைகளுமே இயற்கையான (மார்க்கத்)திலேயே பிறக்கின்றன. பெற்றோர்கள் தான் குழந்தைகளை (இயற்கையான மார்க்கத்தை விட்டும் திருப்பி) யூதர்களாகவோ, கிறிஸ்தவர்களாகவோ, நெருப்பு வணங்கிகளாகவோ ஆக்கிவிடுகின்றனர். (அறிவிப்பவர்: அபூ ஹுரைரா (றழி), ஆதாரம் : புஹாரி – 1358)



3. உமர் இப்னு அபீ ஸலமா (றழி) கூறுகின்றார்கள் : நான் இறைத்தூதர் (ஸல்) அவர்களின் மடியில் வளர்ந்து வந்த சிறுவனாக இருந்தேன். ஒரு முறை என் கை உணவுத் தட்டில் (அங்கும் இங்குமாக) அலைந்து கொண்டிருந்தது. அப்போது இறைத்தூதர் (ஸல்) அவர்கள் என்னிடம் சிறுவனே! அல்லாஹ்வின் பெயரைச் சொல், உன் வலக் கரத்தால் சாப்பிடு, உனது கைக்கு அருகிலிருப்பதில் இருந்து எடுத்துச் சாப்பிடு என்று கூறினார்கள். (ஆதாரம் : புஹாரி – 5376, முஸ்லிம் - 2022)

4. இப்னு அப்பாஸ் (றழி) அவர்கள் கூறுகின்றார்கள்: நான் ஒரு நாள் நபி (ஸல்) அவர்களுக்குப் பின்னால் அமர்ந்து பயணம் செய்து கொண்டிருந்தேன். அப்போது அவர்கள் பின்வருமாறு கூறினார்கள் : "சிறுவனே! உனக்கு சில வார்த்தைகளைக் கற்றுத் தருகின்றேன். நீ அல்லாஹ்வை மனதில் கொள், அவன் உன்னைப் பாதுகாப்பான். நீ அல்லாஹ்வை மனதில் கொள், அவனை உன் முன் கண்டு கொள்வாய். நீ (ஏதாவது) கேட்பதாயின் அல்லாஹ்விடமே கேள். நீ உதவி தேடுவதாயின் அல்லாஹ்விடமே உதவி தேடு. இச்சமூகத்தவர் அனைவரும் உனக்கு ஏதாவது நலவு செய்ய ஒன்று சேர்ந்தாலும் அல்லாஹ் உனக்கென எழுதியதைத் தவிர வேறெதனைக் கொண்டும் அவர்கள் உனக்குப் பயனளிக்க முடியாது. (திர்மிதி – 2516)

**5.** ஹஸன் இப்னு அலீ (றழி) அவர்கள் கூறுகின்றார்கள் : நபி (ஸல்) அவர்கள் எனக்கு வித்ர் குனூதில் ஓதக் கூடிய சில வார்த்தைகளைக் கற்றுத் தந்தார்கள். அல்லாஹும்மஹ்தினீ ∴பீமன் ஹதைத. வஆ∴பினீ ∴பீமன் ஆ∴பைத. வதவல்லனீ ∴பீமன் தவல்லைத. வபாரிக் லீ ∴பீ மா அ∴தைத. வகினீ ஷர்ர மா கழைத. ∴ப இன்னக தக்ழீ வலா யுக்ழா அலைக. இன்னஹு லா யதில்லு மன் வாலைத. தபாரக்த ரப்பனா வதஆலைத.

பொருள் : இறைவா! நீ நேர்வழி காட்டியவர்களுடன் எனக்கும் நேர்வழி காட்டுவாயாக. நீ ஆரோக்கியம் அளித்தவர்களுடன் எனக்கும் ஆரோக்கியம் அளிப்பாயாக. நீ பொறுப்பேற்றுக் கொண்டவர்களுடன் என்னையும் பொறுப்பேற்பாயாக. மேலும் எனக்கு நீ அளித்துள்ள செல்வத்தில் அபிவிருத்தி செய்வாயாக. மேலும் நீ அளித்த தீர்ப்பின் தீங்கிலிருந்து என்னைக் காப்பாற்றுவாயாக. ஏனெனில் நீயே தீர்ப்பளிக்கிறாய். உனக்கு மாற்றமாக தீர்ப்பளிக்கப்படுவதில்லை. நீ யாருக்கு நேசனாகி விட்டாயோ அவன் ஒருபோதும் இழிவடைவ தில்லை. எங்கள் இரட்சகனே! நீ அருட்பாக்கியம் உடையவனாகி விட்டாய். உயர்வு உடையவனாகி விட்டாய். (ஆதாரம் : அபூதாவூத் - 1425)

**6.** அனஸ் இப்னு மாலிக் (றழி) அவர்கள் கூறுகின்றார்கள் : நபி (ஸல்) அவர்கள் என்னிடம், என் அருமை மகனே! நீ உனது குடும்பத்தாரிடம் செல்லும் போது அவர்களுக்கு ஸலாம் சொல். அது உனக்கும் உனது குடும்பத்தவர்க்கும் அருட்பாக்கியமாக ஆகிவிடும். (ஆதாரம் : திர்மிதி – 2698)

**7.** ஜுன்துப் அல்பஜலீ (றழி) அவர்கள் கூறுகின்றார்கள் : நாங்கள் திடமான வாலிப வயதில் நபியவர்களுடன் இருந்தோம். நாங்கள் குர்ஆனைக் கற்பதற்கு முன்னால் விசுவாசத்தைக் கற்றோம். பின்னர் குர்ஆனைக் கற்றோம். எனவே விசுவாசத்தை அதிகரித்துக் கொண்டோம். (ஆதாரம் : இப்னு மாஜா – 61)

**8.** அனஸ் (றழி) அவர்கள் தாய்ப்பால் அருந்தும் குழந்தையாக இருக்கும் போதே அவர்களது தாயார் அர்ருமைஸா எனப்படும் உம்முஸுலைம் (றழி) இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டார்கள். அன்னையவர்கள் அனஸ் (றழி) அவர்களுக்கு “லாஇலாஹ இல்லல்லாஹ்” என்று கூறுங்கள். “அஷ்ஹது அன்ன முஹம்மதன் ரஸூலுல்லாஹ்” என்று கூறுங்கள் எனச் சொல்லிக் கொடுப்பார்கள். அவர்களும் அவ்வாறே சொல்வார்கள். (நூல் : ஸியரு அ∴லாமிந் நுபலா∴ – 305∴2)

9. இப்றாஹீம் அத்தைமீ (ரஹ்) கூறுகின்றார்கள் : சிறு பிள்ளைகள் பேச ஆரம்பிக்கும் போதே லாஇலாஹ இல்லல்லாஹ் என்ற கலிமாவை 7 தடவைகள் கற்றுக் கொடுப்பதை மக்கள் விரும்பக் கூடியவர்களாக இருந்தார்கள். அதன் மூலம் அச்சிறார்கள் முதலில் கலிமாவைத் தான் பேசியவர்களாகி விடுவார்கள். (ஆதாரம் : முஸன்னப் அப்துர் ரஸ்ஸாக் - 7977)



# சிறார்களுக்கான ஈமானியக் கல்வி





## உள்ளடக்கத்தின்

உள்ளடக்கத்தின் அடிப்படையில் கல்வியின் மிக முக்கியமான தலைப்புக்களில் சிறார்களுக்கான ஈமானியக் கல்வி பிரதானமானது. ஏனெனில் நல்ல பழக்க வழக்கங்களை உருவாக்குதல், சரியான அகீதாவை உள்ளத்திலும், சிந்தனையிலும் நிலைநாட்டி, அதனைப் பலப்படுத்துதல், நல்ல நெறிமுறைகளின் பால் வழிகாட்டுதல், அனைத்து செயல்களிலும் அதனை செயற்படுத்துதல் போன்ற அனைத்தையும் அடிப்படையாகக் கொண்டதே ஈமானியக் கல்வியாகும்.

இந்தப் பருவத்தில்தான் குழந்தை உலகம் பற்றிய தனது கணிப்பீட்டை உருவாக்கிக் கொள்கின்றது. அதிலிருந்துதான் தனது நடத்தைகள், நெறிமுறைகள், நடவடிக்கைகளை உருவாக்குகின்றது. இவை அக்குழந்தையின் நடைமுறையில் பிரதிபலிப்பதற்கமையத் தான் இவ்வுலக மகிழ்ச்சியும் மறுமையின் வெற்றியும் அமையும். இது பெற்றோர்களின் பொறுப்பென்பதால் அவர்களைக் குறிப்பிட்டு அல்குர்ஆன் கூறுகின்றது : அல்லாஹ் உங்களது பிள்ளைகள் விடயத்தில் உங்களுக்கு உபதேசிக்கின்றான். (அல்குர்ஆன் - 4:11) மாறாக நபியவர்கள் இதனை வெளிப்படையாகவே கூறியுள்ளார்கள்

: எல்லாக் குழந்தைகளுமே இயற்கையான மார்க்கத்திலேயே பிறக்கின்றன. பெற்றோர்கள் தாம் (குழந்தைகளை இயற்கையை விட்டும் திருப்பி) யூதர்களாகவோ கிறிஸ்தவர்களாகவோ நெருப்பு வணங்கிகளாகவோ ஆக்கி விடுகின்றனர். (புஹாரி – 1359) இந்நபிமொழி பல விடயங்களைக் குறிக்கின்றது.

1. இறை நம்பிக்கைதான் மனிதனின் இயற்கை. பிற மனிதர்களின் தாக்கங்களினாலேயே இதனை விட்டும் திசை திரும்பக் கூடியவர்கள் திரும்புகின்றனர்.
2. கல்வியில் பெற்றோருடைய பொறுப்பையும் அவர்களது பங்களிப்பையும் இந்நபிமொழி தெளிவுபடுத்துகின்றது.
3. கல்வியில் சூழலின் தாக்கத்தைச் சுட்டிக் காட்டியுள்ளது.

மனிதன் வளர ஆரம்பிக்கும் போதே எந்தவொரு ஆதாரங்களுமின்றி அல்லாஹ்வை ஏற்றுக் கொள்வதற்காக உள்ளத்தை விரிவாக்கியது அவன் மனிதனுக்குச் செய்த பேரருளாகும்.


அதன்படி இப்பொறுப்பைச் சரியாகச் செய்வது பெற்றோர் மீது கடமையாகும். இவ்வியற்கை உணர்வைத் தூய்மைப்படுத்தி, அல்குர்ஆன், ஸுன்னாவின் அடிப்படையில் அமையப் பெற்ற சரியான மார்க்கத்தில் தமது குழந்தைகளை வளர்ப்பதும் அவசியமாகும். சுற்றுச்சூழலை அடிப்படையாகக் கொண்டு பெறப்படும் கல்வியைச் சாராமலிருப்பதும் அப்பெற்றோர் மீது கடமையாகும். எனவே (சரியான ஈமானியக் கல்வியில்லாத) பாரம்பரிய இஸ்லாம் கட்டுப்பாடற்ற, வெளிப்படையான, மற்றும் சகல வசதிகளையும் கொண்ட ஒன்றிணைந்த இவ் உலகில் வழிதவறுவதை விட்டும் பாதுகாக்கமாட்டாது. தனிப்பட்ட பலவீனம், தனி அடையாளத்தை இழத்தல் போன்றவற்றை விட்டும் தடுக்கவும் மாட்டாது.

குழந்தையின் தூய உள்ளம் படங்களோ, வேலைப்பாடுகளோ பொறிக்கப்படாத விலை மதிப்பற்ற கல்லாகும். அது அனைத்து வேலைப்பாடுகளையும் ஏற்கக் கூடியது. நல்லதைப் போதித்து அதன்படி பழக்கப்பட்டால் அதிலேயே வளர்ந்து ஈருலகிலும் வெற்றி பெறும். அக்குழந்தையின் நன்மையில் பெற்றோர், ஆசிரியர், போதகர் அனைவரும் பங்கெடுப்பர். தீயதைப் பழக்கப்பட்டு, மிருகங்களைப் போல் புறக்கணிக்கப்பட்டால் துர்ப்பாக்கியவனாகி விடும். அக்குழந்தையைப் பொறுப் பெடுத்து வளர்த்தவர்கள் மீதும் குற்றம் சேரும். ஏனெனில் சரியான நெறிப்படுத்தல் சிறு வயதிலேயே சாத்தியப் படுகின்றது. ஒரு பிள்ளையை அதன் போக்கிலேயே விடப்பட்டு அவ்வாறே பழக்கப்பட்டால் அப்பிள்ளையை சரியான பாதைக்குத் திருப்பவது சிரமமாகி விடும்.

பலமான ஈமானுள்ள, இஸ்லாமிய போதனைகளை சரியாகப் பற்றிப் பிடிக்கும் ஒரு குடும்பத்தில் வளரும் குழந்தை அனைத்திலும் தனது பெற்றோர்களையே பின்பற்றுகின்றது. தனது சொந்தக் கருத்துக்களைக் கூட பெற்றோரைப் பார்த்துத் தான் உருவாக்கிக் கொள்கின்றது. பிள்ளைகளை எதிர்மறையான முடிவிற்கு இட்டுச் செல்லும் விதத்தில் கடுமையான கண்டிப்பான தொனியில் மார்க்கப் போதனைகளை முன்வைக்கும் பெற்றோர்களையும் காண்கிறோம். அதே போன்று தான் ஒரு பிள்ளை வளரும் போது பெற்றோர் மார்க்கப் பற்று இல்லாமல் இருப்பதைக் கண்டால் எதிர்காலத்தில் அப்பிள்ளை மார்க்கத்தின் பால் ஈர்க்கப்படுவது சிரமமாகி விடும். ஏனெனில் அப்பிள்ளை சிறு பிராயத்தில் மார்க்கத்தின் சாயல்களைக் காணவில்லை. எனவே அவனிடம் எவ்வித மதப் போக்குகளும் உருவாக மாட்டாது.



## சிறார்களிடம் காணப்படும்
# மார்க்க வளர்ச்சி



குழந்தையிடம் மார்க்கம் ஒரேயொரு சிந்தனையிலிருந்து தான் ஆரம்பிக்கின்றது. அது தான் அல்லாஹ் இருக்கின்றான் என்ற சிந்தனை. பின்னர் படைப்பியல், மறுமை, வானவர்கள், ஷைத்தான்கள் போன்ற வேறு சிந்தனைகள் விரைவாக தோன்ற ஆரம்பிக்கின்றன. குழந்தைப் பருவத்தில் மத வளர்ச்சியின் வெளிப்பாடு பின்வரும் 4 அம்சங்களால் வகைப்படுத்தப் படுகின்றன.

அ யதார்த்தம் : மத வளர்ச்சி குழந்தைக்கு தனது மதக் கருத்துக்களில் ஒரு யதார்த்தத்தை அளிக்கின்றது. அக்குழந்தை வளர வளர படிப்படியாக அக்கருத்துக்களைத் தனிமைப்படுத்தி ஒருமுகப்படுத்தி உண்மையை அறிந்து கொள்கின்றது. இதனை இளமைப் பருவத்தில் அதற்கேற்ற ஏற்கத்தக்க விதத்தில் வைக்கின்றது.

ஆ வெளித் தோற்றம் : அதாவது சிறார்கள் வளர்ந்தோரை அவர்களது வணக்க வழிபாடுகளிலும், பிரார்த்தனைகளிலும் அவற்றின் அர்த்தங்களை அறியாமல் அல்லது அதன் உயிரோட்டமிக்க உயர்வை உணராமல் வெளிப்படையாகப் பின்பற்றுகின்றனர். இஸ்லாத்தின் தூண்கள், அதன் நெறிமுறைகள், ஈமானின் தூண்கள், அதன் மாற்றங்கள் போன்றவற்றை சிறார்களிடம் பழக்கப்படுத்த

இப்பருவத்தில் அவர்களிடம் காணப்படும் ஈர்ப்பை கல்வியலாளர்கள் பயன்படுத்திக் கொள்வது மிக முக்கியமானது.

இ உபயோகம் : தான் மேற்கொள்ளும் சில வணக்க வழிபா டுகளைப் பார்த்து தனது பெற்றோரும், ஆசிரியர்களும், சுற்றுச் சூழலில் உள்ளவர்களும் மகிழ்வதைச் சிறார்கள் உணரும் சூழ்நிலைகளே இந்த வெளிப்பாடு. அவர்களுடைய அன்பைப் பெறவும் அவரின் சில பயன்பாடுகளை அடைவதற்கும் வரவிருக்கும் சில தண்டனைகளைத் தடுப்பதற்கும் இதனைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

ஈ பிடிவாதக் குணம் : ஒன்றின் பக்கம் சார்ந்திருக்க வேண்டுமென்ற இயற்கையான உள்ளுணர்வால் தூண்டப்பட்டு குழந்தை தான் சார்ந்திருக்கும் மார்க்கத்தில் பிடிவாதமாக, சகிப்புத் தன்மையில்லாமல் இருக்கின்றது. இதில் மிக உயர்ந்தது அல்லாஹ்வைச் சார்ந்திருப்பதில் பிடிவாதமாக இருப்பதாகும்.

முன்னர் கூறிய விடயங்களிலிருந்து ஈமானியக் கல்வியில் கவனமெடுப்பதன் அவசியத்தை உணர்கின்றோம். வளர்ந்து வரும் சிறார்களுக்கு ஈமானை நெருக்கமாக்கி வைக்க கடினமாக உழைப்பது பெற்றோர்கள், கல்வியலாளர்கள் மீது கடமையாகும். குறிப்பாக குழப்பங்கள், திசை திருப்பக் கூடியவை மற்றும் கவனச் சிதறல்கள் பல வடிவங்களில் அதிகரித்துள்ள இக்காலத்தில் கடினமாக உழைப்பது அவசியமாகும். பெற்றோர் மேற்கொள்ள வேண்டிய பிரதான விடயங்கள் இரண்டு :

01. ஓரிறைக் கொள்கையை (தௌஹீத்) சிறார்களுக்குக் கற்பிப்பதன் மூலம் இயற்கை மார்க்கத்தை விழிப்புணர்வு ஊட்டுதல்.

02. அல்லாஹ்வையும் அவனது தூதர் (ஸல்) அவர்களையும் நேசித்தல், அல்குர்ஆனைக் கற்பித்தல் போன்றவற்றை அடிப்படையாகக் கொண்ட ஈமானின் ஆறு விடயங்கள் மூலம் சிறார்களின் இறை நம்பிக்கையைப் பலப்படுத்தல்.

உள்ளங்களில் பதுங்கியிருக்கும் மத இயல்பறிவின் இருப்பானது பெற்றோர் தமது கல்விப் பொறுப்பை சரியாக நிறைவேற்றத் துணை நிற்கின்றது. இயல்பறிவானது மத உள்ளுணர்வைத் தூண்டுகின்றது. இந்த உள்ளுணர்வு ஏனைய உணர்வுகளைப் போன்று மாறுவதையோ மாற்றுவதையோ ஏற்காது. மாறாக வழிகாட்டுதலையும் மேம்படுத்தலையும் தான் ஏற்கும். இவ்வியல்பறிவு படைக்கப்பட்ட நோக்கமல்லாமல் வெவ்வேறு நோக்கங்களுக்காகவும் பயன்படுத்த முடியும். அதே நேரம் இஸ்லாம் அந்த இயல்பறிவை அது படைக்கப்பட்ட நோக்கத்தின் பால் வழிகாட்டவே அழைக்கின்றது.

ஒரு முஸ்லிம் குழந்தை வளர்க்கப்பட வேண்டிய முக்கியமான விடயங்கள் ஈமானின் 6 அடிப்படைகளாகும். அதிலும் முக்கியமானது அல்லாஹ்வை நம்புவதாகும். அல்லாஹ்வை நம்பி அவனை நேசிப்பது தான் ஈமானின் ஏனைய விடயங்களையும் வழங்குகின்றது. அல்லாஹ் தன்னை ஏற்று அவனுக்கு அடிபணிவதன் வலுவான வரையறையாக அவனை நேசிப்பதை வைத்துள்ளான். அதாவது அவனுக்கு கீழ்ப் படியவும், அவனது எதிரிகளை எதிர்க்கவும் அல்லாஹ்வின் மீதான நேசம்

அவசியமாகும். இந்நேசம் உலகின் எல்லாப் பொருட்களை விட மிகைத்திருக்க வேண்டுமென அவன் கட்டளையிட்டுள்ளான். “(நபியே!) நீர் கூறும் : உங்களுடைய தந்தைமார்களும், உங்களுடைய பிள்ளைகளும், உங்களுடைய சகோதரர்களும், உங்களுடைய மனைவிமார்களும், உங்களுடைய குடும்பத்தார்களும், நீங்கள் திரட்டிய செல்வங்களும், நட்டம் (எங்கே) ஏற்பட்டு விடுமோ என்று நீங்கள் அஞ்சுகின்ற (உங்கள்) வியாபாரமும், நீங்கள் விருப்பத்துடன் வசிக்கும் வீடுகளும், அல்லாஹ்வையும் அவன் தூதரையும், அவனுடைய வழியில் அறப்போர் புரிவதையும் விட உங்களுக்கு பிரியமானவையாக இருக்குமானால், அல்லாஹ் அவனுடைய கட்டளையை (வேதனையை)க் கொண்டு வருவதை எதிர்பார்த்து இருங்கள். அல்லாஹ் பாவிகளை நேர்வழியில் செலுத்துவதில்லை”. (அல்குர்ஆன் - 9:24)

அல்லாஹ் பொருந்திக் கொள்ளும் அடியார்களின் முதல் பண்பாக அவர்கள் அவனை நேசிப்பதையே ஆக்கியுள்ளான். “மு.ஃ.மின்களே! உங்களில் எவரேனும் தன் மார்க்கத்தைவிட்டு மாறிவிட்டால் (அல்லாஹ்வுக்கு அதனால் நட்டமில்லை) அப்பொழுது அல்லாஹ் வேறு ஒரு கூட்டத்தாரைக் கொண்டு வருவான். அவன் அவர்களை நேசிப்பான். அவனை அவர்களும் நேசிப்பார்கள். அவர்கள் மு.ஃ.மின்களிடம் பணிவாக நடந்து கொள்வார்கள். கா.ஃ.பிர்களிடம் கடுமையாக இருப்பார்கள். அல்லாஹ்வின் பாதையில் போர் செய்வார்கள். நிந்தனை செய்வோரின் நிந்தனைக்கு அஞ்சமாட்டார்கள் இது அல்லாஹ்வின் அருட்கொடையாகும். இதை அவன் நாடியவருக்குக் கொடுக்கின்றான். அல்லாஹ் மிகவும் விசாலமானவனும் (எல்லாம்) நன்கறிந்தவனுமாக இருக்கின்றான்”. (அல்குர்ஆன் - 5:54) உண்மையான ஓரிறைக் கொள்கை முழுமையான நேசத்தை அவனுக்கு மாத்திரம் செலுத்துவதாலேயே உருவாகும் என தெளிவுபடுத்தியுள்ளான். “அல்லாஹ் அல்லாதவர்களை அவனுக்கு இணையாக வைத்துக் கொண்டு, அவர்களை அல்லாஹ்வை நேசிப்பதற்கொப்ப நேசிப்போரும் மனிதர்களில் இருக்கிறார்கள். ஆனால் நம்பிக்கை கொண்டவர்கள் அல்லாஹ்வை நேசிப்பதில் உறுதியான நிலையுள்ளவர்கள். இன்னும் (இணை வைக்கும்) அக்கிரமக்காரர்களுக்குப் பார்க்க முடியுமானால், (அல்லாஹ் தரவிருக்கும்) வேதனை எப்படியிருக்கும் என்பதைக் கண்டு கொள்வார்கள். அனைத்து வல்லமையும் அல்லாஹ்வுக்கே சொந்தமானது. நிச்சயமாக தண்டனை கொடுப்பதில் அல்லாஹ் மிகவும் கடுமையானவன் (என்பதையும் கண்டு கொள்வார்கள்). (அல்குர்ஆன் - 2:165) அல்லாஹ் எம்மைப் படைத்த நோக்கமாகிய வணக்கம் தான் நேசத்தின் அதியுயர்ந்த படித்தரமாகும். ஓரிறைக் கொள்கையின் அடிப்படையும் உயிர்நாடியும் அல்லாஹ்வை மாத்திரம் முழுமையாக நேசிப்பதாகும். அது தான் வணக்கத்தின் அடிப்படை என்பதையும் தாண்டி அது தான் வணக்கத்தின் யதார்த்தம் என்றாலும் மிகையாகாது. அல்லாஹ்வுடனான அடியானின் நேசம் ஏனைய அனைத்து நேசங்களையும் மிகைக்கும் வரை ஓரிறைக் கொள்கை பூரணமாகாது. ஓர் அடியானின் மகிழ்ச்சியும், வெற்றியும் தங்கியிருக்கக்கூடிய இந்த இறை நேசத்தைத் துயர்ந்ததாகத் தான் அவனது ஏனைய நேசங்கள் அமைய வேண்டும்.

ஈமானின் அடிப்படையில் உருவாக்கப்பட்ட இந்த இறை நேசம் தான் குழந்தைகளின் நடத்தைகளை சீர்திருத்தவும், அவர்களை இஸ்லாத்திலும், அல்லாஹ் மற்றும் அவனது தூதருக்கும் வழிப்படுவதிலும் உறுதிப்படுத்தவும் மிகப் பிரதான வழியாக

உள்ளது. யாருடைய உள்ளத்தில் அல்லாஹ் மற்றும் அவனது தூதரின் நேசம் விதைக்கப்படுகின்றதோ. அவன் தனது கொள்கை, வணக்கம், நெறிமுறைகளில் நிலையாக நிற்பான். சிற்சில மார்க்கப் பிரச்சினைகளில் திசை திரும்பினாலும், எது மறந்தாலும், விடுபட்டாலும் உள்ளத்தில் ஆழமாகப் பதிந்திருக்கும் இறை நேசம் நிச்சயம் அவனை சரியான கொள்கையின் பக்கம் அல்லாஹ்வின் உதவியால் திருப்பி விடும். ஏனெனில் நேசத்திற்கு வெளிநோக்கங்கள் மாத்திரமின்றி உள்நோக்கங்களும் உள்ளன.

பிரபஞ்சம் பற்றி இஸ்லாமியக் கொள்கை முன்வைக்கும் கண்ணோட்டம் மனிதனின் இயல்பறிவுக்கு நேர்பாடாகவும், ஆரோக்கியமான பகுத்தறிவுடன் முரண்படாமல் ஒன்று சேரக்கூடியதாவும் இருப்பது கொண்டு தனித்துவமாக விளங்குகின்றது. சிந்தனை, கொள்கை, பண்பாடு, சட்டவியல் விதிமுறைகள் அனைத்தும் இக்கொள்கையில் ஒருங்கிணைந்துள்ளன என்ற வகையில் பிற கொள்கைகளில் காணப்படாத சிறப்பம்சங்கள் மூலம் இஸ்லாமிய கொள்கை தனித்து நிற்கின்றது. சிந்தனை மற்றும் கொள்கை சார் அமைப்பாக இது இருப்பதால் இப்பிரபஞ்சத்தின் தோற்றம், முடிவு, இடையில் இருக்கும் யதார்த்தங்கள், அதன் பின்னாலுள்ளவை பற்றிய முழுமையான விளக்கத்தை முன்வைக்கின்றது. அத்துடன் மனித வாழ்க்கையின் தோற்றம், முடிவு பற்றிய விளக்கத்தையும் தெளிவுபடுத்துகின்றது. பின்னர் பிரபஞ்சம் படைக்கப்பட்ட நோக்கம், மனிதன் படைக்கப்பட்ட நோக்கம் ஆகியவற்றையும் வரையறுக்கின்றது. இதன் மூலம் இக்கொள்கை மனிதனின் மன இயல்பு காரணமாக அவனிடம் தோன்றுகின்ற மனித வாழ்வியல் கேள்விகள் அனைத்திற்கும் இக்கொள்கை பதிலளிக்கின்றது. இது போன்ற கேள்விகளுக்கு திருப்தியான போதியளவு பதில் கிடைக்காமல் மனிதனால் ஓய்வெடுக்கவோ, அமைதியுறவோ முடியாது. அவ்வாறில்லையெனில் அவன் நிரந்தர குழப்பத்திலும் நிலையான கவலையிலும் தான் வாழ்வான். ஏனெனில் இவ்வாழ்க்கையின் சரியான அர்த்தம் அவனுக்குக் கிடைக்கவில்லை.



## ஈமானியக் கல்வியின்

# பயன்பாடுகள்



ஈமானியக் கல்வியை சரியான முறையில் கற்றவர் அடையும் செய்யும் பயன்பாடுகள் சில உள்ளன. அவற்றுள் சில :

1 நல்ல காரியங்கள் செய்வதில் முனைப்புடன் செயற்படுதல். அல்லாஹ்வின் பொருத்தத்தையும், கருணையையும் பெற்றுத் தரும் எந்த வழியையும் அவன் தேடுவான்.

2 பாவங்களை விட்டுத் தடுக்கும் மனசாட்சியைப் பலப்படுத்தல். உயிரோட்டமான இறை நம்பிக்கைதான் மனிதனின் நடத்தைகளை மட்டுப்படுத்துகின்றது.

3 உலக பற்றற்றிருத்தல். அவரது நடத்தைகள் இவ்வுலகை மையமாகக் கொண்டதாக இருக்கும் விதத்தில் அவரது உள்ளம் அதனுடனேயே ஒட்டிக் கொண்டிருக்க மாட்டாது.

4 தெய்வீக ஆதரவு. அதாவது அல்லாஹ் தன்னை விசுவாசிக்கும் அடியானின் யதார்த்தமான தேவைகளை நிறைவேற்றி ஈருலக வெற்றிக்கு அழைத்துச் செல்வதன் மூலம் அவனது விடயங்களைப் பொறுப்பெடுக்கின்றான்.


5 அல்லாஹ்வை சந்திக்கும் ஆசை. இறை நம்பிக்கை அதிகரிக்கும் போதெல்லாம் அல்லாஹ்வின் மீதுள்ள அடியானின் நம்பிக்கையும், அவனை சந்திக்கும் ஆர்வமும் படைப்பினங்களிலிருந்து விலகியிருப்பதும் அதிகரித்துக் கொண்டே செல்லும்.

6 தனி நபர்களுக்கு மத்தியில் எதிர்மறை நிகழ்வுகள் மறைந்து, பிரச்சினைகள் குறைதல். உள்ளங்களில் ஈமான் அதிகரிக்கும போதெல்லாம் அதன் மீதான மனோஇச்சையின் தாக்கம் குறைகின்றது. விருப்பங்கள் வலுப்பெற்று சம்பந்தப்பட்டவர்களை உயர்வான நல்ல நெறிமுறையின் பால் தூண்டுகின்றது.

7 மக்களுக்கு மத்தியில் நேர்மையான தாக்கம் செலுத்துதல். பலமான விசுவாசி தன்னையும் சீர்திருத்தி, தனக்கு சூழாலிருப்பவர்களையும் சீர்திருத்த முனைவான்.

8 நிம்மதி, அமைதியை உணர்தல். இந்த இறை நம்பிக்கை எந்தளவு உள்ளத்தில் குடிகொண்டுள்ளதோ அந்தளவு மக்களை அச்சுறுத்தும் தீய செயல்கள் அவனிடமிருந்து வெளியேறிவிடும்.

# ஈமானியக் கல்வியின் மையங்கள்



பொற்றோர்கள் தமது பிள்ளைகளுக்கு அவர்களது இறை நம்பிக்கையை நிலைநாட்டக்கூடிய, நடத்தைகள் மற்றும் நெறிமுறைகளை செம்மைப்படுத்துதல். முஹம்மத் (ஸல்) அவர்களுடைய சமூகத்தைச் சார்ந்திருக்கும் உணர்வை வலுப்படுத்தல் ஆகியவற்றைப் போதிப்பது அவசியமாகும். இவற்றில் முன்னிலை பெறும் விடயங்கள் வருமாறு :

1. ஈமானின் ஆறு விடயங்களையும் போதித்தல். அத்துடன் இஸ்லாமிய சட்ட திட்டங்கள், முழுமையானதும் இயல்பறிவு, மனித இயல்பிற்கு பொறுத்தமானது எனப் பொதுவாக ஈமான் கொள்வதையும் போதித்தல் வேண்டும். இச்சந்தர்ப்பத்தில் ஈமானின் உயிரோட்டத்தை இழக்கும் விதத்தில் வெளிப்படையாக மனனமிட வைப்பதைத் தவிர்த்து உள்ளங்களுக்கு விழிப்பூட்டக்கூடிய, அறிவைத் தூண்டக்கூடிய நடத்தை ஒழுங்கமைக்கக் கூடிய செயன்முறை மூலம் அமைந்திருத்தல் வேண்டும்.

2. நபி (ஸல்) அவர்களையும், அவர்களது குடும்பத்தார், மனைவியர், தோழர்களையும் அளவு கடந்து செல்லாமல் தரக் குறைவில்லாமல் நேசிப்பதற்கு பிள்ளைகளைப் பயிற்றுவித்தல்.

3. மார்க்கத்தையும், அதன் அடையாளச் சின்னங்கள், வெளிப்பாடுகளையும் கண்ணியப்படுத்தக் கற்றுக் கொடுத்தல். அத்துடன் அவற்றை அவமதிப்பதையும், இழிவாகக் கருதுவதையும் அவர்களுக்கு எச்சரிக்கை செய்ய வேண்டும்.

4. அவசியமான இறைநம்பிக்கை நற்செயல்களின்றி பூரணமாகமாட்டாது. நன்மையின் மூலம் அது அதிகரிக்கும். பாவத்தின் மூலம் குறையும் என்பதை அவர்களுக்குக் கற்பிக்க வேண்டும். சரியான ஈமானியக்



கல்வி அதன் பலாபலன்கள், நெறிமுறைகள், நடத்தை, வணக்கம் அனைத்திலும் பிரதிபலிப்பதற்காக அவசியமானதாகும்.

5. மறுமை பற்றிய நம்பிக்கையை அவர்களது உள்ளங்களில் ஸ்திரப்படுத்தி, கண்ணியப்படுத்தல், அதில் வழங்கப்படும் கூலியை இவ்வுலகில் அடியார்கள் செய்யும் நற்காரியங்களுடன் தொடர்புபடுத்தல், நலவு செய்தவருக்கு சுவனமும் கெடுதி செய்தவருக்கு நரகமும் உண்டு எனப் போதித்தல் வேண்டும்.

6. அல்லாஹ் அடியார்களை கண்காணித்துக் கொண்டிருப்பதை உறுதிப்படுத்தல். அவன் அவர்களைப் பார்க்கின்றான், கேட்கின்றான், அவர்களுடைய எந்த நிலையும் அவனை விட்டும் மறையாது.

7. பிள்ளையிடம் அவன் சத்தியத்தில் தான் இருக்கின்றான் என்ற உணர்வை ஆழமாகப் பதியவைத்தல். இது அவன் தனது மார்க்கத்தை கண்ணியத்துடன் பலமாகப் பற்றிப் பிடிக்கத் தூண்டும்.



# ஈமானை விதைப்பதற்கான பயிற்சி முறைகள்

இந்தப் பயிற்சி முறைகளை இரு வழிகளாகப் பிரிக்கலாம். 01. பிரித்தறியும் வயதுக்கு முன் 02. பிரித்தறியம் வயதுக்குப் பின். பிரித்தறியும் வயதுக்கு முன் ஈமானை ஸ்திரப்படுத்துவதற்குத் துணை நிற்கும் சில விடயங்கள்:

1. சுற்றுச் சூழலில் குழந்தை செவிமடுக்கும் அடிமைத்தனம் தொடர்பான அப்துல்லாஹ், அப்துர் ரஹ்மான், அப்துல் கரீம் போன்ற பெயர்களின் கருத்துக்களைச் சுருக்கமாகத் தெளிவுபடுத்த முயற்சித்தல். அதான் சப்தத்தைக் கேட்பதில் கவனமெடுத்தல், நாளாந்த திக்ருகள், பிரார்த்தனைகளைக் கற்பித்து, அவற்றை நாளாந்தம் பிள்ளைகளுக்கு முன்னால் நாங்களும் ஓதுதல், அல்லாஹ்வுடைய அருட்கொடைகளை நினைவூட்டுதல், குறிப்பாக உணவு உட்கொள்ளும் போது அதன் ஆரம்பத்தில் பிஸ்மில்லாஹ் சொல்வதையும், இறுதியில் அல்ஹம்துலிலாஹ் என்று சொல்வதையும் கற்றுக் கொடுத்தல்.

2. அல்குர்ஆனின் சில ஸூராக்களை –அவை அல்லாஹ்வின் பேச்சு என்பதைத் தெளிவுபடுத்துவதுடன்- மனனமிட வைத்தல், முதலில் ஸூரா பாத்திஹா, அல்இ∴லாஸ், அல்பலக், அந்நாஸ் ஆகிய ஸூராக்களைக் கற்றுக் கொடுக்க வேண்டும். அதே போன்று ஈமானின் சரியான அர்த்தத்தைப் போதிக்கும் சில நல்ல கவிதைகள், பாடல்களையும் மனனமிட வைக்கலாம்.

3. மகிழ்ச்சிகரமான, விரும்பத்தக்க தருணங்களில் அல்லாஹ்வின் பெயரை நினைவு கூறுவதில் கவனம் செலுத்துதல், சிறு பிராயத்தில் அல்லாஹ்வின் கடுமை, தண்டனை பற்றிக் கூறாமலிருப்பது அவசியம். அல்லாஹ்வின் கோபம், தண்டனை, நரகம் போன்றவற்றை அதிகம் குழந்தையிடம் கூறக்கூடாது.

4. ஒற்றுமை, நற்குணங்கள், பலம் ஆகியவற்றிலுள்ள அழகை எடுத்துக்காட்ட வேண்டும். (படைத்தவனின் வல்லமை, சக்தியை உணர்வதற்காக) அல்லாஹ்வை நேசிக்க வேண்டும். ஏனெனில் அல்லாஹ் அவனை நேசித்து, ஏனைய வஸ்துக்களை அவனுக்கு வசப்படுத்திக் கொடுக்கின்றான்.

5. குழந்தையை நல்ல பண்பாட்டிற்குப் பயிற்றுவித்து, இரக்கம், பரஸ்பர ஒத்துழைப்பு, பேச்சு, செவிமடுத்தலின் ஒழுக்கங்கள் ஆகியவற்றைப் பழக்குதல். அழகிய முன்மாதிரி மூலம் இஸ்லாமிய முன்னுதாரணத்தை விதைத்தல். அவனை நல்லொழுக்கமுள்ள சூழலில் வாழச் செய்வதன் மூலம் தன்னைச் சூழ இருப்பவர்களிடமிருந்து நல்லவற்றை எடுத்துக் கொள்வான்.

பிரித்தறியும் வயதைத் தாண்டிய பின் மேற்கண்ட பயிற்சி முறைகளுடன் சிந்தனையைத் தூண்டும் பயிற்சி முறைகளையும் சேர்த்துக் கொள்ளல் வேண்டும். அவற்றுள் சில:

1. இப்பிரபஞ்சத்தின் பிரமாண்டத்தையும் அது உருவாக்கப்பட்டுள்ள நுட்பத்தையும், அது எவ்வாறு உறுதியாக அமைக்கப்பட்டுள்ளது என்பதையும் பிள்ளைக்குக் கற்றுக் கொடுக்க வேண்டும். அதன் மூலம் அவன் அல்லாஹ்வை மகத்துவப்படுத்தி,



கண்ணியப்படுத்த முடியும். அல்லாஹ் கூறுகின்றான் : “ஒவ்வொரு பொருளையும் உறுதியாக்கிய அல்லாஹ்வின் செயல் திறனாலேயே (அவ்வாறு நிகழும்)”. (அல்குர்ஆன் - 27:88)

**2.** அல்லாஹ்வுடைய செயற்பாடுகள், படைப்பினங்களிலுள்ள தாத்பரியங்களை பிள்ளைக்கு நினைவூட்டல், அதன் மூலம் அவன் அல்லாஹ்வை நேசித்து அவனைப் புகழலாம். இரவு, பகல், சூரியன், சந்திரன், செவிப்புலன், பார்வை, நாவு போன்ற புலன்கள் ஆகியவற்றைப் படைத்ததன் தாத்பரியங்களை சிந்திக்க வைக்க வேண்டும். அல்லாஹ் கூறுகின்றான் : “வானங்கள், பூமி மற்றும் அவையிரண்டுக்கும் இடைப் பட்டவற்றை உண்மையான முறையிலும் குறித்த தவணைக்குமேயன்றி அல்லாஹ் படைக்கவில்லை என்பதை அவர்கள் தமக்குள் சிந்தித்துப் பார்க்க வேண்டாமா?”. (அல்குர்ஆன் - 30:08)

**3.** பிள்ளையை நல்லவற்றை விரும்பச் செய்யவும், தீயதை வெறுக்க வைக்கவும் அவ்வப்போது நிகழக்கூடிய சில சம்பவங்களை நல்லதொரு வாய்ப்பாகப் பயன்படுத்திக் கொள்ளல். உதாரணமாக : பிள்ளை நோய்வாய்ப்பட்டால் அவனுடைய உள்ளத்தை அல்லாஹ்வுடன் தொடர்புபடுத்தி வைத்து, அதற்குரிய பிரார்த்தனைகளைக் கற்பித்து அவன் மீது நல்லெண்ணம் வைக்குமாறு போதிக்க வேண்டும். நாம் அவன் விரும்பக்கூடிய ஏதாவது பழங்கள், இனிப்புப் பண்டங்கள் வழங்கினால் அவை அல்லாஹ்விடமிருந்து கிடைக்கப் பெற்றதெனக் கூறி இந்த அருட்கொடைக்காக அல்லாஹ்விற்கு நன்றி செலுத்த வேண்டிக்கொள்ள வேண்டும். குழந்தைக்கு அதிர்ச்சிகரமான ஏதாவது நிகழும் போது ஈமானியக் கருத்துக்களைப் போதிப்பதைப் பெற்றோர் தவிர்த்துக் கொள்ள வேண்டும். ஏனெனில் அவற்றை வேறுபிரித்துப் பார்க்கும் அளவு திறனும் விழிப்புணர்வும் அப்பிள்ளையிடம் இல்லை.

**4.** நாம் தேடும் இஸ்லாமியப் பழக்கவழக்கங்களை குழந்தைகள் பழகுவதற்கான செயன்முறைப் பயிற்சிகளும் அவசியமாகும். அதனால் பின்பற்றத் தகுந்த முறையில் அழகிய முன்மாதிரியான நடத்தையை விரித்துரைப்பது கல்விமான்களுக்கு உகந்தது. மார்க்கத்திற்கும் நெறிமுறை களுக்கும் மத்தியில் நடத்தை, செயன்முறை மூலமாக தொடர்பை ஏற்படுத்துவது எமது கல்விப் பணியை வெறுமனே கோட்பாடுகள் மாத்திரம் என்ற நிலையிலிருந்து வெளியேற்றி உணமையான பயிற்சியாக, பண்படுத்தலாக மாற்றி விடும்.

**5.** குழந்தைகள் விரும்பியதை வழங்குவதற்காக வடிவமைக்கப் பட்டிருக்கும் கதைகள் மூலம் பயன் பெறுதல். கதை உள்ளடக்கியுள்ள கருத்துக்கள், நெறிமுறைகளை வெளிக்காட்டு வதுடன் தாக்கம் செலுத்தும் வகையில் நாடக அமைப்பில் அல்லது உயர்ந்த பண்புகள், நல்ல குணங்களை விதைக்கும் பாடல்கள் அமைப்பில் கதையைக் காண்பிப்பது அவசியமாகும். நபி (ஸல்) அவர்களை நேசித்து அவர்களுக்குக் கட்டுப்படுவதற்காக அவர்களது வாழ்க்கை வரலாற்றை –குறிப்பாக சிறு பிராயத்தை- குழந்தைகளுக்கு சொல்லிக் கொடுக்கலாம். அன்னார் சிறார்களுடன் மென்மையாக நடந்த விதம், அவர்களுடைய உயர்ந்த

குணங்கள், அங்க அமைப்புக்கள் போன்றவற்றையும் சொல்லிக் கொடுக்கலாம். அதே போன்று தான் அவர்களின் மனைவியர், தோழர்களின் சரித்திரங்களையும் சிறார்களுக்கு சொல்லிக் கொடுக்கலாம்.

**6.** குழந்தைகளுக்கு மார்க்கக் கல்வியைப் போதிப்பதில் நடுநிலை தேவை. அவர்களது சக்தியை மீறி எதனையும் அவர்களுக்கு சுமத்தக் கூடாது. விளையாட்டும் கலகலப்பும் தான் சிறார்களின் உண்மையான உலகம் என்பதை நாம் மறந்து விடலாகாது. எனவே அவர்களுடைய இயற்கை மற்றும் உளவியல் வளர்ச்சிக்கு எதிராக அவர்களுக்கு அதிக வேலைகளைக் கொடுத்து சோர்வடையச் செய்து விடக்கூடாது. குழந்தைப் பருவத்தின் அடிப்படைத் தேவைகளைத் தடுக்கும் வகையில் பல சுமைகளைக் கொடுப்பதன் மூலமோ அளவுக்கதிகமான கட்டுப்பாடுகள், தடைகளைப் போடுவதன் மூலமோ அவர்களைச் சோர்வடையச் செய்யக் கூடியது. ஏனெனில் அதில் அளவு கடந்து சென்று அதிக விமர்சனம் செய்யும் போது எதிர்மறை முடிவுகளுக்கும், குற்ற உணர்ச்சிக்கும் வழிவகுக்கும். இது பெரும்பாலும் நிகழ்வது குடும்பத்தின் முதல் குழந்தைக்குத் தான். காரணம் சில பெற்றோர் தமது முதல் குழந்தையை முழுமையாக முன்மாதிரியாக மாற்றுவதில் உற்சாகமாக உள்ளனர்.

**7.** பெரியோரின் தொடர்ச்சியான தலையீடின்றி குழந்தையை அதன் இயல்பிலேயே விட்டுவிடுதல் அவசியமாகும். தனது ஆற்றலும் தன்னைச் சுற்றியுள்ள சூழல் பற்றிய குழந்தையின் அறிவுக்கும் ஏற்ற வகையில் சுயமாக ஆராய அனுமதிக்கும் நடவடிக்கைகளை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். அதன் மூலம் அவனிடத்தில் ஆர்வத்தை வளர்த்து ஆற்றல்களை எழுச்சியடையச் செய்யலாம்.

**8.** பிள்ளைகளை உற்சாகப்படுத்துவது அவர்களுடைய உள்ளங்களில் நல்ல மாற்றத்தை ஏற்படுத்தும். தான் விரும்பும் காரியத்தில் முழு மூச்சுடன் செயற்படத் தூண்டும். பிள்ளையின் நடத்தைக் கட்டுப்பாடும், வழிகாட்டலும் நேசம், வெகுமதிகளுடன் அமையும் போது சிறந்த முறையில் சரியான நடத்தைகளைப்



பெற வழிவகுக்கும். பிள்ளைகளின் உரிமைகளை அறிய அவர்களுக்குத் துணை புரிவது அவசியமாகும். அதன் மூலம் தனது உரிமைகள், கடமைகள், தான் செய்ய முடியுமானது, செய்ய முடியாதது போன்ற அனைத்தையும் அறிந்து கொள்ளும். ஆடம்பரத்திலிருந்து விலக நல்ல கட்டுப்பாட்டுடன் இணைந்து பிள்ளையின் கண்ணியத்தையும், கௌரவத்தையும் உணர்த்துவதுடன் மேற்கண்டவாறு அவர்களுக்குத் துணை புரிய வேண்டும்.

**9.** அல்குர்ஆனின் புனிதத்துவத்தை உணர்ந்து அதன் கட்டளைகளை பற்றிப் பிடிப்பதற்காக எளிதான, கவர்ச்சிகரமான நடையில் அல்குர்ஆனின் கண்ணியத்தை குழந்தையின் உள்ளத்தில் விதைக்க வேண்டும். அதன் மூலம் தான் அதனைத் திறன்பட ஓதினால் வானவர்களின் தரத்தை அடையலாம் என்பதை அக்குழந்தை அறியும். அல்குர்ஆன் ஓதும் போது அஊது, பிஸ்மிலுடன் ஆரம்பித்தல், அதனை கண்ணியப்படுத்துதல், அழகாகச் செவிசாய்த்தல் போன்ற ஓதல் ஒழுங்குகளைக் கடைபிடிக்கப் பழகிக் கொள்வான். அல்குர்ஆன் வசனங்களை செவிமடுக்க சிறார்களை நாம் பழக்கப்படுத்திக் கொள்ள வேண்டும். அது அக்குழந்தையின் மொழியாற்றலை அதிகரிப்பதுடன், அதனை ஓதுவதற்கும் ஊக்குவிக்கும். ஸூரா பாதிஹா, இ்.லாஸ், அல்பலக், அந்நாஸ் போன்ற அக்குழந்தை மனனமிட்டுள்ள ஸூராக்களிலுள்ள அடிப்படைக் கொள்கைகளில் சிலதையும் விளக்கலாம். அதேபோன்று எளிதாகப் புரிந்து கொள்ளக் கூடிய முறையில் அடிக்கடி வெவ்வேறு விதத்தில் அல்குர்ஆனிலுள்ள சம்பவங்களையும் அதிகமாகக் கூற வேண்டும்.

**10.** கேள்வி – பதில் முறையையும் பயன்படுத்தலாம். நாம் பிள்ளைகளுக்கு வழங்க விரும்பும் தகவல்களை உள்ளடக்கியதாக கேள்வி அமைவதும், அதற்கான விடை மிகவும் சுருக்கமாக இருப்பதும் கவனத்திற் கொள்ள வேண்டும். அத்துடன் அக்குழந்தையின் வயதிற்கும், அறிவு மட்டத்திற்கும் பொருந்தக் கூடியதாகவும் இருக்க வேண்டும். குழந்தைக்கு நல்ல பண்பாடுகள், நெறிமுறைகளைக் கொடுப்பதிலும் நடத்தைகளை மாற்றியமைப்பதிலும் இந்த கேள்வி – பதில் முறைக்கு பாரிய தாக்கமுள்ளது.

**11.** படங்களை நிறந் தீட்டும் முறையையும் கற்பிக்கலாம். ஒவ்வொரு முறையும் நிறந்தீட்டத் தெரிவு செய்யும் படத்தில் ஈமானியக் கருத்துக்கள் பொதிந்திருத்தல் சிறந்தது. போட்டியடிப்படையில் கற்பிக்கலாம். போட்டிக்கான பல வழிகள் விசாலமாக உள்ளன. குறிப்பிட்ட ஒரே இடமின்றி இயங்கக்கூடிய போட்டியாக இருப்பது சாலச் சிறந்தது. ஏனெனில் பிள்ளைகள் அதனை விரும்புவதுடன் அதனுடன் ஒன்றிப் போகின்றனர்.

**12.** பிள்ளைக்கு அடிப்படைக் கொள்கை தொடர்பான சில நபிமொழிகளை அவன் புரிந்து கொள்ளக் கூடிய முறையில் சுருக்கமாக, எளிய நடையில் விளக்க வேண்டும். ஈமானை அதிகரிக்கும் சில வசனங்களை உள்ளத்தில் பதிய வைப்பதற்காக திருப்பித் திருப்பிக் கற்பிக்க முடியும். பின்னர் அப்பிள்ளை தானாகவே அதனைப் பயன்படுத்த ஆரம்பிக்கும். உதாரணம் : "அல்லாஹ்வின் நாட்டத்தின் படி தான் எல்லாம் நடக்கின்றன", "அல்லாஹ்விடம் பொறுப்புச் சாட்டுங்கள்", "அல்லாஹ் அனைத்தின் மீதும் ஆற்றலுள்ளவன்" போன்ற வார்த்தைகளைக் குறிப்பிடலாம்.

அதேபோன்று பெற்றோர் அல்லது ஆசிரியரின் துணையுடன் வகுப்பறை, தூங்கும் அறை போன்ற இடங்களை அழகான ஈமானிய வார்த்தைகள் மூலம் அலங்கரிக்கச் செய்யலாம். உதாரணமாக : "நான் ஒரு முஸ்லிம்", நான் எனது இரட்சகனை நேசிக்கிறேன்", ஈமானின் ஆறு தூண்கள் போன்றன. இது அடிக்கடி பார்ப்பதன் மூலம் மனதில் பதிய வைக்கும் கற்பித்தல் முறையாகும்

**13.** சோதனைகள் யாரையும் விட்டுவைக்காது, இவ்வுலகில் அல்லாஹ் அனைத்து மக்களையும் சில சோதனைகளைக் கொடுத்து சோதிப்பான் என்பதை பிள்ளைக்குக் கற்றுக் கொடுக்க வேண்டும். அல்லாஹ் எந்தவொரு விடயத்தையும் நிறைவான தாத்பரியத்திற்காகவே நிர்ணயிக்கிறான் என்பதைப் போதிக்க வேண்டும். நலவைக் கொண்டு வருபவனும், கெடுதியைத் தடுப்பவனும் அல்லாஹ் தான். அவனது இரக்கம் அவனது கோபத்தை மிகைத்து விட்டது என்பதையும் மனதில் நிலைநாட்ட வேண்டும். சிரமங்களுக்குப் பின்னர் தான் எப்போதும் விடிவு வரும். இது தான் நடைமுறை விதி என்பதையும் விளக்கிக் கூற வேண்டும். அல்லாஹ்வைப் பற்றி நல்லெண்ணம் வைப்பதை மகத்துவப்படுத்திக் கூற வேண்டும். ஏனெனில் அதுவே தனியொரு வணக்கமாக உள்ளது. நாம் எமக்குத் தெரிவு செய்ததை விட அல்லாஹ் எமக்காகத் தெரிவு செய்துள்ளது தான் சிறந்தது என்பதை உறுதிப்படுத்த வேண்டும். இது போன்ற சோதனைகளின் போது பொறுமையாக இருந்து, மார்க்கம் அனுமதித்த காரணிகளை வைத்து அதற்கு கொடுப்பதுடன் அல்லாஹ்வின் ஏற்பாட்டைப் பொருந்திக் கொண்டு அவனிடம் நன்மையை எதிர்பார்ப்பது தான் மனிதனின் கடமையாகும். இறுதியாக சதாவும் பிரார்த்தனையைப் பற்றிப் பிடித்துக் கொள்ளுமாறு போதிக்க வேண்டும். அது தான் ஓர் அடியானுக்கு எப்போதும் இலாபமீட்டித் தரும் வியாபாரம்.



# பயிற்றுவிப்பு முறைமைகள்



பிள்ளைகளின் மனதில் ஈமானை விதைக்கத் துணை புரியும் பிரதான பயிற்றுவிப்பு முறைமைகள் வருமாறு :

1. அழகிய முன்மாதிரி : இது தான் குழந்தையின் மனதில் மிகப் பெரிய மற்றும் ஆழமான தாக்கம் செலுத்தும் முறைமையாகும். குழந்தையின் வாழ்க்கையில் முன்மாதிரியாக இருப்பதன் அவசியத்தை நபி (ஸல்) அவர்களும் உணர்த்தியுள்ளார்கள். அப்துல்லாஹ் இப்னு ஆமிர் (றழி) அவர்கள் கூறுகின்றார்கள்: நபி (ஸல்) அவர்கள் எம்முடன் இருக்கும் போது எனது தாய் “அப்துல்லாஹ் உமக்கு (ஒரு பொருள்) தருகிறேன் வாருங்கள்” என்று என்னை அழைத்தார்கள். அப்போது நபியவர்கள் (உண்மையிலே) நீர் அவருக்குக் கொடுக்க நாடவில்லை தானே என்று கேட்டார்கள். அதற்கு “நான் ஒரு பேரீத்தம் பழத்தைக் கொடுக்க விரும்பினேன்” என்று (எனது தாய்) கூறினார்கள். அப்போது நபியவர்கள் : “நீங்கள் அப்பிள்ளைக்கு ஒன்றும் கொடுக்காவிட்டால் நீர் பொய் பேசியதாக எழுதப்படும்” என்று கூறினார்கள். (அபூதாவூத் 4991). இதே நபிமொழியின் மற்றுமொரு அறிவிப்பில் : “யார் ஒரு சிறு பிள்ளையை (ஏதாவது தருவதாகக் கூறி) அழைத்து விட்டு பின்பு ஒன்றும் கொடுக்காவிட்டால் அது பொய்யாகி விடும்” என்று இடம்பெற்றுள்ளது. (அஹ்மத் 9624). முன்மாதரி என்பது பயனுள்ள ஒரு நடைமுறையாகும். இந்நபிமொழியில் குறிப்பாக சிறார்களுடன் உண்மை பேசுவதன் அவசியம் பற்றிக் கூறப்பட்டுள்ளது.

2. உண்மையான உபதேசம் : உபதேசம் பல வடிவங்களில் முன்வைக்கலாம். வழக்கமான நேரடி முறை, உதாரணம் கூறிக் காட்டல், ஒரு சம்பவத்தைக் கூறல், உரையாடல் முறை போன்றவற்றைக் கடைபிடிக்கலாம். பிள்ளை சோர்வடையா மலிருக்க விட்டுவிட்டு இடைக்கிடையே தான் உபதேசிக்க வேண்டும்.



3. ஆர்வமூட்டல் மற்றும் எச்சரித்தல் : வெகுமதி, தண்டனை முறை என்றும் இதற்குக் கூறலாம். இந்த முறைமை உணர்வுபூர்வமானதாகப் பார்க்கப்படுகின்றது. ஏனெனில் இது அல்லாஹ் படைத்துள்ள மனிதனின் இயற்கை உணர்வை நேரடியாகத் தொடுகின்றது. அது தான் நலவுகளை நேசித்து அதனை எடுத்துக் கொள்ளல், கெடுதிகளை வெறுத்து அதனைத் தடுத்து விடுவதாகும். இது மிகைப்படுத்தலோ, உதாசீனமோ இன்றி உண்மையாகவும், நடுநிலையாகவும் இருக்க வேண்டும். குழந்தை வெளிப்படையான இலகிய மனதைக் கொண்டது. அதனை மிரட்டுவதோ, அச்சுறுத்துவதோ கூடாது. ஏனெனில் மனது நேர்மாறாகப் பாதிக்கப்படுகின்றது. இங்கு ஆர்வமூட்டல் பகுதியைத் தான் மிகைப்படுத்த வேண்டும். குழந்தை இப்பருவத்தில் அச்சுறுத்தலை விட ஆர்வமூட்டலின் பால் தான் அதிக தேவையுடையது.

4. பயிற்றுவித்தல் மற்றும் பழக்கப்படுத்தல் : அல்லாஹ்வின் திருப்பொருத்தம், அவனுக்கு அஞ்சுதல், அவனுக்கு மாறு செய்ய வெட்கப்படுதல், சதாவும் அவனையே சார்ந்திருத்தல், அனைத்தும் அல்லாஹ்வின் கையில் தான் உள்ளது போன்ற போதனைகளில் கவனமெடுக்க சிறார்களைப் பழக்கப்படுத்து வதானது அனைத்துவித சோதனைகளுக்கும் முன்னால் உறுதியாக, பலமாக, திடகாத்திரத்துடன் நிற்க வழிவகுக்கின்றது. தனது உள்ளம் அமைதியடைந்து மகிழ்ச்சியடைவதற்கான உறுதியையும், திருப்தியையும் கொடுக்கின்றது.

5. பல தடவை மீண்டும் மீண்டும் செய்தல் : பயிற்று வித்தலிலும், மனதில் அறிவைப் பதிய வைப்பதிலும் இதன் பயன்பாட்டை நவீன அறிவியலும், அனுபவங்களும் உறுதிப்படுத்துகின்றன.

6. கலந்துரையாடல் : பிள்ளையுடன் கலந்துரையாடுவதானது அதன் புலன்களை விரிவுபடுத்தி அறிவின் எல்லைகளைத் திறந்து கொடுக்கின்றது. எனினும் பிள்ளையையும் அதன் கருத்துக்களையும் மதிப்பதுடன் அழகாக செவிசாய்ப்பதும், அமைதியாகக் கலந்துரையாடுவதும் அவசியமாகும். பிள்ளையுடன் வெற்றிகரமான மற்றும் பயனுள்ள உரையாடலை அடையவும், அதன் மூலம் பிள்ளைகளுக்குப் பயிற்சியளித்து வழிகாட்டவும் மேற்கண்ட முறையில் உரையாடல் அமைய வேண்டும்.

7. புத்தகம் : குழந்தையின் கல்வி, கலாச்சார, ஈமானியத் தேவைகளுக்குப் பொருத்தமாகத் தயார்படுத்தப்பட்ட ஒரு நூலகம் இருப்பது மிக முக்கியமாகும். அதில் ஒலி ∴ ஒளி ∴ டிஜிட்டல் முறை போன்ற பலதரப்பட்ட விடயங்களை உள்ளடக்கியிருப்பது சிறந்தது. இந்நூலகத்தில் கதைப் புத்தகங்களும் இருப்பது மிக முக்கியமானது. ஏனெனில் கதை, சம்பவங்கள் பயனுள்ள முக்கியமான பயிற்சி முறையாகும். நபி (ஸல்) மற்றும் தோழர்களின் வரலாற்றில் பல அர்த்தமுள்ள கதைகள் உள்ளன.

**8.** நவீன தொழில் நுட்பம் மற்றும் கற்பித்தல் முறைமைகள் : இவை கருத்துக்களை குழந்தைகளிடம் கொண்டு செல்லவும், பதியச் செய்யவும் பாரிய பங்களிப்புச் செய்யும் சாதனமாகத் திகழ்கின்றன. அக்கருத்துக்களை விளங்கவும், அதன் அரத்தங்களைப் புரிந்து கொள்ளவும் இவை அவசியமாகும். இந்த சிந்தனைகளும், அடிப்படைகளும் குழந்தையை இழுக்கக்கூடிய அவற்றை ஏற்றுக் கொள்ளும் மன நிலைக்கு மாற்றக் கூடிய வகையில் கவர்ச்சியான நிறங்களில் காண்பிக்கப்படல் வேண்டும்.

**9.** இயற்கை உந்துதல்கள் : குழந்தையிடம் பயன்படுத்த முடியுமான பல உள்ளார்ந்த உந்துதல்கள் உள்ளன. விளையாட்டு, ஒத்துழைப்பு, பார்த்துப் பின்பற்றுதல் போன்றன அவற்றுள் சில. விளையாட்டினூடாக குழந்தை தன்னைச் சுற்றியுள்ள உலகைக் கண்டறிந்து, அவனது கருத்துக்களையும் உணர்வையும் வெளிப்படுத்த முடியும். இச்சந்தர்ப்பத்தை வாழ்க்கை, பிரபஞ்சம் பற்றிய சரியான கருத்துக்களைத் தெளிவுபடுத்தவும் நல்ல ஒழுக்க விழுமியங்களை பிள்ளையின் உள்ளத்தில் விதைக்கவும் பயன்படுத்தலாம். (அது இலகுவான பொருத்தமான முறையில் அமைய வேண்டும். கவனிப்பு, அனுகுமுறைகள், மற்றும் நிகழ்வுகளை வழிகாட்டல் மற்றும் உணர்த்துவதற்கு சரியான முறையில் பயன்படுத்தினால் அது குழந்தையின் உள்ளத்தில் பலமான மாற்றத்தை விட்டுச் செல்லும்.)

**10.** பிரார்த்தனை : ஓர் அடியான் தனது இறைவனிடம் தேவையுள்ளவன், அவனுடைய அருட்கொடைகளை எதிர்பார்த்திருப்பவன் என்பதற்குரிய ஆதாரமே பிரார்த்தனை. அல்லாஹ் தனது அடியார்களுக்கு இதனைத் தூண்டி, தான் பதிலளிப்பதாகவும் வாக்களித்துள்ளான். “என்னையே அழையுங்கள், உங்களுக்கு நான் பதில் அளிக்கிறேன் என்று உங்கள் இரட்சகன் கூறினான்” (அல்குர்ஆன் - 40:60) கல்வியின் இலக்கை அடைந்து கொள்வதற்கான ஆசிரியரின் பிரதான வழிமுறை பிரார்த்தனையாகும். இது சிறந்த ஆசான்கள் பயன்படுத்திய சாதனமாகும். அவர்கள் தான் நபிமார்கள். இறை நம்பிக்கையிலும், ஓரிறைக் கொள்கையிலும் உறுதியாக இருப்பதற்காக அவர்கள் இப்பிரார்த்தனையைப் பயன்படுத்தியுள்ளார்கள். “நினைவு கூறுங்கள்! என் இறைவனே! இந்த ஊரை

(மக்காவை சமாதானமுள்ளதாய்) அச்சந்தீர்ந்ததாய் ஆக்குவாயாக! என்னையும், என் மக்களையும் சிலைகளை நாங்கள் வணங்குவதிலிருந்து காப்பாற்றுவாயாக!" என்று இப்ராஹீம் கூறியதை (நபியே! நீர் அவர்களுக்கு நினைவு கூறும;" (அல்குர்ஆன் - 14:35). பிள்ளைக்காகப் பிரார்த்திப்பது அவனை வளர்ப்பதில் உள்ள பிரதான உபகாரத்தின் வெளிப்பாடுகளில் ஒன்றாகும்.

**11.** செயல் காட்சியும் அதனைப் பார்த்துப் பின்பற்றுதலும் : குழந்தை இயல்பிலேயே ஒன்றைப் பார்த்துப் பின்பற்றுவதை விரும்பக்கூடியது. எனவே பள்ளி இமாம் போன்று செயல்பட்டு, அல்குர்ஆன் ஓதி தொழுகை நடத்தவோ அல்லது பிரசங்கம் நிகழ்த்தவோ அல்லது ஓர் ஆசிரியரின் பாத்திரத்தை வகித்து பாடம் போதிக்கவோ வாய்ப்புக் கொடுத்துப் பார்க்க வேண்டும். இது அவனிடம் அதன் அர்த்தங்களை உறுதிப்படுத்தக் கூடியதும், இவ்வாறான உயர்ந்த இடங்களுக்கான மதிப்பை வைத்திருக்கவும் வாய்ப்பாக இருக்கும்.



# ஆசிரியரின்
# சிறப்பியல்புகள்



**1.** இரக்கம், மென்மை : சிறார்களின் உள்ளங்களை இரக்கத்தின் மூலம் ஈர்ப்பதற்காக மென்மையான குணத்துடன் பயிற்றுவிப்பு ஒன்றிணையாவிடின் அதன் சரியான பலாபலன் கிடைக்க மாட்டாது. ஹஸன் (றழி) மற்றும் ஹுஸைன் (றழி) ஆகியோரை நபியவர்கள் முத்தமிடுவதை அக்ர.: இப்னு ஹாபிஸ் (றழி) அவர்கள் கண்டுவிட்டு, என்னிடம் 10 பிள்ளைகள் இருக்கின்றார்கள். அவர்களில் ஒருவரையேனும் நான் முத்தமிட்டதில்லை என்கிறார். அப்போது நபியவர்கள் யார் இரக்கம் காட்டவில்லையோ அவர் இரக்கம் காட்டப் படமாட்டார் என்று கூறினார்கள். (புஹாரி – 5997) மேலும் நபியவர்கள் கூறினார்கள் : இரக்கம் காட்டுவோருக்கு அல்லாஹ்வும் இரக்கம் காட்டுவான். பூமியிலுள்ளோருக்கு நீங்கள் இரக்கம் காட்டுங்கள். வானிலுள்ளவன் உங்களுக்கு இரக்கம் காட்டுவான். (அபூதாவூத் 4941)

**2.** சகிப்புத் தன்மை, மன்னித்தல் : நபி (ஸல்) அவர்கள் இரக்கக் குணத்தின் உச்சத்திற்கே சென்றார்கள். அனஸ் இப்னு மாலிக் (றழி) கூறுகின்றார்கள் : நபி (ஸல்) அவர்கள் தடித்த விளிம்புடைய நஜ்ரான் தேசத்து சால்வையொன்றைப் போர்த்தியிருக்க நான் அவர்களுடன் நடந்து சென்று கொண்டிருந்தேன். அப்போது அவர்களை கிராமவாசியொருவர் கண்டு அவர்களின் சால்வையால் அவர்களைக் கடுமையாக இழுத்தார். எந்தளவுக்கென்றால், அவர் கடுமையாக இழுத்த காரணத்தால் சால்வை விளிம்பின் அடையாளம் நபி (ஸல்) அவர்களின் தோளின் ஒரு பக்கத்தில் பதிந்திருப்பதைக் கண்டேன். பிறகு அந்தக் கிராமவாசி, முஹம்மதே! உங்களிடமிருக்கும் இறைவனின் செல்வத்திலிருந்து எனக்கும் கொடுக்கும் படி கட்டளையிடுங்கள் என்றார். நபி (ஸல்) அவர்கள் அவர் பக்கம் திரும்பிச் சிரித்து விட்டு அவருக்குக் கொடுக்கும் படி உத்தரவிட்டார்கள் (புஹாரி – 5809)

சகிப்புத் தன்மையுடன் தொடர்புடையது தான் மன்னித்தலும். அல்லாஹ் கூறுகின்றான் : “எனினும் (நபியே) மன்னிப்பைக் கைக் கொள்வீராக! நன்மையைக் கடைபிடிக்குமாறு (மக்களை) ஏவுவீராக மேலும் அறிவீனர்களைப் புறக்கணித்து விடும்.” (அல்குர்ஆன் - 7:199). சகிப்புத் தன்மை முழுமையாக நிறைவேற நபியவர்கள் கோபப்படாமலிருக்கத் தூண்டினார்கள். அதனைத் தடுத்தும் உள்ளார்கள். நபி (ஸல்) அவர்களிடம் ஒரு மனிதர் தனக்கு உபதேசிக்கும் படி கேட்ட நேரத்தில் “கோபப்படாதே” என்றார்கள். அவர் திரும்பத் திரும்பக் கேட்ட போதும் “கோபப்படாதே” என்றே பதிலளித்தார்கள். (புஹாரி 6116.)



**3.** பொறுமை : பிள்ளைகளுக்குக் கற்பிக்கும் போதும், அவர்களை வளர்க்கும் போதும் அவசரப்படாமல் பொறுமையாக இருப்பது அவசியமாகும். பிரதிபலன் உடனே கிடைக்க வேண்டுமென்றோ, நோக்கம் நிறைவேற வேண்டுமென்றோ ஆசிரியர் அவசரப்படலாகாது. அதனைத் தொடர்ந்து உள்ளத்தில் நிராசையும், தோல்வி மனப்பான்மையும் ஏற்பட்டு விடுகின்றது. பொறுமையில்லாத ஆசான் தேவைப் பொருளின்றி பயணிக்கும் பிரயாணியைப் போலாவான்.

**4.** நேர்மை : தெளிவான காரணமின்றி இருவருக்கிடையில் பாகுபாடு காட்டினால் பிரதிபலிப்புக் குறைந்து, ஆசிரியர்களுடனான இணக்கப்பாடும் நீங்கிவிடும். அநீதி எங்கிருக்குமோ அங்கே குறையேற்படுத்திவிடும்.

**5.** அமானிதம் : தன்னிடம் கற்பவருடனான நடத்தையில் உண்மையாளராகவும், நம்பிக்கையாளராகவும் இருப்பது ஆசிரியருக்குக் கடமையாகும். அமானிதம் இம்மார்க்கத்தை எத்திவைத்த இறைத் தூதர்களுடைய பண்புகளிலுள்ளதாகும். ஒரு வேலையைத் திறன்படச் செய்யவும் அதன் முடிவு வரை செல்லவும் அமானிதம் அவசியத் தேவையாகும்.

**6.** இறையச்சம் : ஏனெனில் இறையச்சமுள்ளவர்க்கு அவன் நினையாத புறத்தில் அல்லாஹ் நற்பயனளிக்கின்றான். எனவே இறையச்சமானது நற்பயன், வெற்றி, சீர்திருத்தம், ஈருலக ஈடேற்றம் அனைத்தினதும் கூட்டிணைப்பாகும்.

**7.** உளத்தூய்மை : அல்லாஹ்வுக்காக செய்யப்படாத அனைத்து செயல்களும் நிராகரிக்கபடக் கூடியது. அச்செயலால் அவருக்கு சிரமமும் தீமையும் தான் கிடைக்கின்றது.

**8.** அறிவு : அறிவாளி, ஒன்றின் தற்போதைய நிலமை, அதன் முடிவு பற்றி தெரிந்து வைத்திருப்பான். ஆனால் அறிவிலி தற்போதைய நிலமையையும் தவறவிட்டு, முடிவிலும் தவறிழைத்து விடுவான்.

**9.** அறிவு நுட்பம் : ஆசிரியர் ஒவ்வொரு பொருளையும் அதற்குரிய இடத்தில் வைக்கும் போது தான் ஒவ்வொரு விடயமும் அதன் பலாபலனைக் கொடுக்கும். பயிற்றுவிப்பும் அதன் பலனைக் கொடுக்கும். இதயத்திற்குள்ளே ஊடுருவி பிள்ளைக்கு வழிகாட்டி பயிற்றுவிப்பது தான் ஆசிரியருடைய பாரிய பொறுப்பாகும்.

**10.** கல்விப் பணியை நம்பிக்கையுடன் மேற்கொள்ளல்: பயிற்சி என்பது ஆன்மீக மற்றும் ஆத்மார்த்தமான ஒரு கொடையாகும். கல்விப் பணியை நம்பிக்கை கொள்ளாதவர் இத்தகைய கொடையை முன்வைக்க முடியாது.


**11.** மேம்பாடு : ஆசிரியர் தனது கல்விப் பணியில் நல்ல நிலையை அடைய தனது திறமைகளையும், சக்திகளையும் மேம்படுத்திக் கொள்ள வேண்டும்.







# ஈமானியக் கல்வியின் தூண்கள்



முதலாவது :

அல்லாஹ்வை நம்புதல்

இரண்டாவது :

வானவர்களை நம்புதல்

மூன்றாவது :

வேதங்களை நம்புதல்

நான்காவது :

இறைத் தூதர்களை நம்புதல்.

ஐந்தாவது :

இறுதிநாளை நம்புதல்

ஆறாவது :

விதியை நம்புதல்.

# முதலாவது :
# அல்லாஹ்வை நம்புதல்



இயல்பறிவு, பகுத்தறிவு, மார்க்கம் அனைத்தும் அல்லாஹ் ஒருவன் இருக்கிறான் என்பதை அறிவிக்கின்றது. அனைத்து படைப்பினங்களும் தனது படைப்பாளனை ஏற்றுக் கொள்ளும் சுபாவத்திலேயே சிருஷ்டிக்கப்பட்டுள்ளன. இந்த அனைத்துப் படைப்பினங்களையும் உருவாக்குபவன் ஒருவன் இருக்கத் தான் வேண்டும் என்பதை பகுத்தறிவும் ஏற்கின்றது. இறைவனால் அருளப்பட்ட அனைத்து மதங்களும் படைப்பாளன் ஒருவன் இருப்பதை உறுதி செய்கின்றன. அல்லாஹ்வை நம்புதல் 4 விடயங்களை உள்ளடக்குகின்றது.

01. அல்லாஹ் இருக்கிறான் என்பதை ஏற்றல்.

02. அவனது பரிபாலனைக் கோட்பாட்டை ஏற்றல். அவன் தான் தயாள இரட்சகன், படைப்பாளன், வாழ்வாதாரம் அளிப்பவன், நிர்வகிப்பவன்.

03. அவனது இறைமையை ஏற்று, அவனுக்கு இணை யாருமில்லையென ஒருமைப்படுத்துதல்.

04. அல்லாஹ்வின் பரிபூரணத்துவத்தை உறுதிப்படுத்தும் அவனது பெயர், பண்புகளை ஏற்றல்.

இந்த நான்கு விடயங்களையும் குழந்தைக்குக் கற்பித்தல் வேண்டும். அப்போது அல்லாஹ்வை அறிந்து, அவனை கண்ணியப்படுத்தி, நேசிப்பதன் அடிப்படையிலேயே குழந்தை வளரும். இந்த கடமைதான் ஏனைய அனைத்துக் கடமைகளினதும் அடிப்படையாகும்.

### ஏன் சிறார்களுக்கு அல்லாஹ்வின் நேசத்தைப் போதிக்க வேண்டும்?

1. அல்லாஹ்தான் எம்மை இல்லாமையிலிருந்து உருவாக்கி, ஒழுங்குற அமைத்து, அவன் படைத்த பலவற்றை விடவும் எம்மை மேம்படுத்தியுள்ளான். மிகச் சிறந்த அருட்கொடையான இஸ்லாத்தை எமக்களித்துள்ளான். பின் நமது தகுதிக்கு மீறிய பல அருட்கொடைகளைத் தந்தான். அவனது கருணையினாலேயே நாம் செய்த செயல்களுக்கு கூலியாக சுவனத்தை வாக்களிக்கின்றான். என்றுமே அவன் தான் தயாளன்.

2. நேசத்திலிருந்துதான் இரகசியத்திலும் வெளிப்படையிலும் அல்லாஹ்வை கண்ணியப்படுத்தி மதிக்கும் குணம் உருவாகின்றது. அல்லாஹ்வுடனான எமது பிள்ளைகளின் தொடர்பு வெறுமனே அவனது நரகையும் தண்டனையையும் மாத்திரம் அஞ்சுவதை விட அவனை மதித்து கௌரவப் படுத்துதற்காக இருப்பதுதான் எமது பிளளைக்கான தற்போதைய தேவையாகும். அப்போது அவர்களது வணக்கங்கள்

இன்பகரமான, உயிரோட்டமானதாக இருப்பதுடன் அதனுடனேயே வாழ்வார்கள். சறுக்குதல்களில் இருந்து அவர்களை அது பாதுகாக்கும்.

3. அல்லாஹ்தான் என்றும் மரணிக்காமல் உயிருடன் நிலைத்திருப்பவன். சிறு தூக்கமோ பெருந்தூக்கமோ அவனை ஆடகொள்ள மாட்டாது. அவர்கள் எங்கிருந்தாலும் அவன் அவர்களை கவனித்துக் கொண்டே இருக்கின்றான். பெற்றோர்களை விட அவர்களை அதிகம் பாதுகாத்துக் கவனிப்பவன் அவன்தான். எனவே அவர்களுக்குப் பக்க பலமான தூணாக அல்லாஹ் ஒருவன் இருக்கின்றான் என்பதை அறியும் பொருட்டு அவனை அவர்கள் நேசிப்பதும், அவனுடன் தொடர்பாக இருப்பதும் இன்றியமையாததாகும்.

4. சிறார்கள் அல்லாஹ்வை நேசித்தால் அல்குர்ஆனையும் நேசிப்பார்கள். தொழுகையில் ஆர்வமாக இருப்பார்கள். அல்லாஹ் அழகாவன், அழகையே விரும்புகின்றான் என்பதை அறிந்தால் அனைத்து அழகான விடயங்களையும் செய்வார்கள். மன்னிப்புத் தேடுவோர், தூய்மையாக இருப்போர், நன்மை செய்வோர், தர்மம் செய்வோர், பொறுமையாளர்கள், அவனிடம் பொறுப்புச் சாட்டுவோர், இறையச்சமுள்ளோர் அனைவரையும் அல்லாஹ் நேசிக்கின்றான் என்பதை அவர்கள் அறிந்தால் அவனின் பொருத்தத்தையும், நேசத்தையும் வேண்டி, அவனது உதவியையும் பாதுகாப்பையும் பெற்றுக் கொள்வதற்காக மேற்கண்ட அனைத்துப் பண்புகளையும் தமக்கிடையே கொண்டு வர முயற்சிப்பார்கள். துரோகிகள், நிராகரிப்பாளர்கள், பெருமையடிப்போர், எல்லை மீறுவோர், அநியாயக்காரர்கள், குழப்பவாதிகள் யாரையும் அல்லாஹ் நேசிக்க மாட்டான் என்பதை அவர்கள் அறிந்தால் அவனின் நேசத்தையும், பொருத்தத்தையும் பெறுவதற்காக மேற்கண்ட அனைத்து மோசமான பண்புகளையும் இயன்றளவு தவிர்ந்து கொள்வார்கள்.

5. அல்லாஹ்வை நேசிப்பதானது அவன் எம்முடன் இருப்பதை உணர்ந்து, கவலை, சோகமின்றி ஆறுதல், அமைதி மற்றும் மன உறுதியை ஏற்படுத்துகின்றது. பின் ஆன்மாவும் உடலும் உளவியல் மற்றும் சரீர நோய்களிலிருந்து பாதுகாக்கப் படுகின்றது. அதனை விட முக்கியமாக பாவங்களை விட்டும் பாதுகாப்புக் கிடைக்கின்றது.

### சிறார்களுக்கு அல்லாஹ்வின் நேசத்தை எவ்வாறு போதிக்கலாம்?

1. ஈமானிய அம்சங்களை சிறார்களின் உள்ளங்களில் விதைக்க ஒரேயொரு வழியாக உணர்வு வழிதான் பார்க்கப்படுகின்றது. அதாவது குழந்தையிடம் தனது படைப்பாளன் பற்றிய நம்பிக்கையைப் பலப்படுத்த புலனுறுப்புகளையே சார்ந்திருக்க வேண்டியுள்ளது. குழந்தையைச் சூழவுள்ள சூரியன், மழை, காற்று போன்ற இயற்கை வெளிப்பாடுகளினூடாக இப்பிரபஞ்சத்தை நிர்வகிக்கும் ஒருவன் இருக்கின்றான் என்பதைப் போதிக்க முடியும். அவர்களையும் கேள்வி கேட்கத் தூண்ட வேண்டும். குழந்தைகளின் பார்வையில் ஒரு நம்பிக்கை ஊகத்தை வைக்க முயற்சிக்க வேண்டும். அதன் மூலம் அல்லாஹ் இருப்பதற்கான அத்தாட்சியை ஒவ்வொரு பொருளிலும் கண்டு, அதனை பகுப்பாய்வு செய்து, அறிவியல்

எல்லைகளில் படிக்க முடியும். அத்துடன் அல்லாஹ்வின் அதிசய சக்தியையும், அற்புதமான படைப்பாற்றலையும் முன்னிலைப்படுத்த ஆர்வங்கொள்வோம். மனித படைப்பின் தோற்றத்தை அவதானிக்குமாறு வந்துள்ள இறை வழிகாட்டலும் அதிலுள்ளவை தான். அல்லாஹ் கூறுகின்றான் : "மனிதன், தான் எதிலிருந்து படைக்கப்பட்டான் என்பதைப் பார்க்கட்டும்" (அல்குர்ஆன் - 86:5), "உங்களுக்குள்ளேயும் (அல்லாஹ்வின் அத்தாட்சிகள்) இருக்கின்றன. நீங்கள் (சிந்தித்துப்) பார்க்க மாட்டீர்களா?" (அல்குர்ஆன் - 51:21). அதேபோன்று தான் மனிதனின் உணவையும் அதனை அல்லாஹ் எவ்வாறு தோற்றுவித்தான். அது தாண்டி வந்த கட்டங்களை தெளிவு படுத்தியுள்ளான் என்பதையும் அவதானிக்க வேண்டும். "எனவே மனிதன் தனது உணவைக் கவனித்துப் பார்க்கட்டும். (அல்குர்ஆன் - 80:24). அதே போன்று தான் அல்லாஹ்வின் வல்லமையை எடுத்துக்காட்டும் அவனது படைப்புக்களை அவதானிப்பதன் மூலமும் அவனது சக்தியை வெளிப்படுத்துதல். "(நபியே!) ஒட்டகத்தை அவர்கள் கவனிக்க வேண்டாமா? அது எவ்வாறு படைக்கப்பட்டிருக்கிறது என்று-, மேலும் வானத்தை அது எவ்வாறு உயர்த்தப்பட்டிருக்கிறது? என்றும், இன்னும் மலைகளையும் அவை எப்படி நாட்டப்பட்டிருக்கின்றன? என்றும், இன்னும் பூமி அது எப்படி விரிக்கப்பட்டிருக்கிறது? (என்றும் அவர்கள் கவனிக்க வேண்டாமா?)" (அல்குர்ஆன் - 20-88:17) சிறார்களின் பலதரப்பட்ட வயது வேறுபாட்டிற்கமைய பல விதமான விளக்க முறைகள் மற்றும் நவீன தொழில் நுட்பங்களை பயன்படுத்தி அல்லாஹ்வின் படைப்பாற்றல், அதன் மகத்துவம் போன்ற பாரிய கருத்துக்களை சிறார்களின் உள்ளங்களில் பதியவைக்க முடியும்.

2. அல்லாஹ்வின் பரிபூரணத்துவத்தையும் அழகையும் பறைசாற்றும் அவனது அழகான பெயர்கள், பண்புகளை சிறார்களுக்குக் கற்றுக் கொடுத்தல் வேண்டும். எனவே அல்லாஹ் எல்லாவற்றையும் மிகைத்த கருணைக்குச் சொந்தக்காரன். அவன் அளவற்ற அருளாளன் நிகரற்ற அன்புடையோன். அவன் தவறுகளை மன்னிக்கும் மன்னிப்பாளன். மன்னித்தலுடன் சேர்த்து தவறுகளை மறைக்கும் கனவான். எவ்விதக் காரணமுமின்றி கேட்காமலே அள்ளிக் கொடுக்கும் தயாளன். அனைத்து நல்ல விடயங்களின் பக்கமும் தனது அடியார்களுக்கு வழிகாட்டுபவன். அவன் நேசிக்கும், நேசிக்கப்படும் இரக்கமுள்ளவன். இது போன்ற தகவல்கள் எவ்வித சந்தேகமுமின்றி அல்லாஹ்வை நேசிக்க உதவும்.

3. "எனது பேச்சைக் கேட்காவிட்டால் அல்லாஹ் உன்னைத் தண்டிப்பான்" என்று பிள்ளைக்குக் கூறுவதைத் தவிர்க்க வேண்டும். அல்லாஹ்வுக்கு மாறு செய்தவர்களை அவன் தண்டிப்பான் என்று போதிப்பதற்கும், அவனது தண்டனையை எனக்குக் கட்டுப்படுவதிலும் எப்போதும் முடிச்சுப் போட்டு பிள்ளையை அச்சுறுத்துவதற்கும் பாரிய வேறுபாடுண்டு. நாம் இவ்வாறு செய்வது அல்லாஹ்வின் வல்லமை, மகத்துவம் பற்றி பிள்ளைகள் ஆழமாக சிந்திப்பதை விட்டும் அவர்களைத் தடுக்கும். பிள்ளை வளர்ப்பில் அல்லாஹ்வை வைத்து பயமுறுத்துவதிலேயே எந்நேரமும் சார்ந்திருக்கக் கூடாது. மாறாக அல்லாஹ்வை நேசித்தல், கண்ணியப்படுத்தல் போன்றவற்றைத் தான் போதிக்க

வேண்டும். பிள்ளையின் கண்ணோட்டத்தில் தாக்கம் செலுத்தும் அனைத்தையும் அல்லாஹ்வின் பால் சேர்க்கக் கூடாது.

4. பெற்றோர் தொழுகை அல்லது வேறு கடமையை நிறை வேற்றும்போதோ அல்லது பாவங்களில் ஒன்றைத் தவிர்ந்து கொள்வதைக் கண்டாலோ அதற்கான காரணத்தை பிள்ளைகள் அதிகமாகக் கேட்பர். அப்போது கொடுக்கும் பதில் அல்லாஹ்வின் நேசம், அவனுக்குக் கட்டுப்படல் போன்றவற்றை உள்ளடக்கியதாக இருக்க வேண்டும். அதன் மூலம் அல்லாஹ்வை நேசிப்பதற்கான ஓர் எடுத்துக்காட்டாக இருக்கலாம். ஏனெனில் பிள்ளை தனது பெற்றோரைத் தான் துயரும். சுவனத்தைப் பற்றியும் அதில் அல்லாஹ் நல்லோருக்குத் தயாரித்து வைத்திருக்கும் நிரந்தர இன்பங்களைப் பற்றியும் சிறார்களிடம் பேசுவதாலும் அல்லாஹ்வின் நேசத்தை உள்ளங்களில் விதைக்கலாம்.

5. கடமையானவற்றை விளங்கும் பருவத்தை குழந்தை அடையும் போது அல்லாஹ்வை நேசிப்பது கடமையென்பதைப் போதிக்க வேண்டும். ஏனெனில் அல்லாஹ்தான் எம்மைப் படைத்து, ஒழுங்குற அமைத்து, வாழ்வாதாரமளித்து, அவனுடைய படைப்புக்களைக் காண எம்மை மேம்படுத்தியுள்ளான். இஸ்லாம் எனும் அரும்பாக்கியத்தை அருளினான். அவனைச் சூழவுள்ள அனைத்து அருட்கொடைகளும் அல்லாஹ்விடமிருந்து தான் என்று குழந்தைக்குப் போதிக்க வேண்டும். அல்லாஹ்வைப் புகழ்ந்து, அவனுக்கு நன்றி செலுத்தி, அருட்கொடைகளை அவனிடம் எவ்வாறு அதிகப்படுத்திக் கேட்பது? என்பதை அவர்களுக்குக் கற்றுக் கொடுக்க வேண்டும். இந்தப் போதனை அல்லாஹ்வின் நேசத்தைத் தூண்டக் கூடியது.


6. அல்லாஹ் மற்றும் அவனது தூதருடனான நேசத்தை வரவழைக்கத் துணை புரியும் சொல், செயல், நிலமைகளை சிறார்களுக்குப் போதிக்க வேண்டும்.



# இரண்டாவது :

# வானவர்களை நம்புதல்





வானவர்களை நம்புதல் என்பது அவர்களது இருப்பை உண்மைப்படுத்துதல், பெயர் அறியப்பட்டவர்களை அவர்களது பெயர்களுடன் நம்புதல், அவர்கள் பற்றி வந்துள்ள உறுதியான செய்திகளை நம்புதல், அவர்களை நேசித்தல் அனைத்தையும் உள்ளடக்குகின்றது.

வானவர்கள் (மலக்குகள்) பற்றி சிறார்களின் உள்ளங்களில் பதியவைக்க வேண்டிய பிரதான அறிவியல் கருத்துக்கள் வருமாறு :

1. அவர்கள் ஒளியினால் படைக்கப்பட்டவர்கள் என்பதைக் கற்றுக் கொடுத்தல். நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் : வானவர்கள் ஒளியினால் படைக்கப்பட்டார்கள். ஜின்கள் நெருப்புக் கொழுந்திலிருந்து படைக்கப்பட்டார்கள். ஆதம் உங்களுக்கு வர்ணிக்கப்பட்டுள்ளதால் (மண்ணினால்) படைக்கப்பட்டார்கள். (அறிவிப்பவர் : ஆஇஷா (றழி), ஆதாரம் : முஸ்லிம் 2996) வானவர்களின் படைப்பு பற்றியும் அதன் இயல்பு பற்றியும் ஆழமாகச் சொல்லாமல் மேலோட்டமாக வர்ணித்தால் போதுமானது.

2. வானவர்களில் பெயர் கூறப்பட்டுள்ளவர்களின் பெயர் களைக் கற்றுக் கொடுத்தல். உதாரணமாக : ஜிப்ரீல் (அலை), அவர்தான் வானவர்களின் நம்பிக்கையாளரும் தலைவருமாக இருப்பதுடன் அல்லாஹ்விடமிருந்து அல்குர்ஆனை இறக்கியவராகவும் திகழ்கின்றார். மழைக்குப் பொறுப்பான மீகாஈல் (அலை), ஸூர் ஊதும் பொறுப்பான இஸ்ராபீல் (அலை) ஆகியோரும் வானவர்களில் உள்ளவர்களாகும். மேலும் அல்லாஹ்வின் அர்ஷைச் சுமந்திருப்போர், பதியக்கூடியோர், பாதுகாவலர்கள் என பல பொறுப்புக்களில் வானவர்கள் உள்ளனர்.

3. அவர்கள் அதிக எண்ணிக்கை கொண்டவர்கள். மொத்த எண்ணிக்கையை அல்லாஹ்வைத் தவிர யாரும் அறிய மாட்டார்கள். அல்லாஹ்வை வழிப்படவும், கட்டளைகளை அமுல்படுத்தவும் என்றே படைக்கப்பட்டவர்கள். ஒவ்வொரு வானவரும் நிறைவேற்றவென பொறுப்புக்கள் சுமத்தப் பட்டவர்கள் என்பதைத் தெளிவுபடுத்த வேண்டும்.

4. அவர்கள் தவறுகளை விட்டும் பாதுகாக்கப்பட்டவர்கள். எனவே அல்லாஹ்வை சதாவும் வணங்கிக் கொண்டே இருக்கின்றார்கள். அவர்கள் சடைவடையமாட்டார்கள். சோர்வடைய மாட்டார்கள். பெருமையடிக்க மாட்டார்கள். அவர்கள் விசுவாசிகளை நேசிக்கின்றார்கள். அவர்களுக்கு உதவுகின்றார்கள். அவர்களுக்காகப் பிரார்த்திக்கின்றார்கள். பாதுகாக்கின்றார்கள். அல்லாஹ்வை நினைவுகூறும் இடங்களைத் தேடிச் சென்று உட்காருவார்கள்.

5. வானவர்களின் நல்ல இயல்பையும் விசுவாசிகளின் பால் அவர்கள் கொண்டிருக்கும் அக்கறையையும் உணர்த்துவதன் மூலம் சிறார்களிடம் அவர்கள் பற்றிய நேசத்தை உருவாக்குதல். அது பறகத் செய்யப்பட்ட இந்த நல்ல படைப்பினை நேசிக்கத் தூண்டுகின்றது. ஏனெனில் அவர்கள் அல்லாஹ்வைத் துதித்துக் கொண்டும் விசுவாசிகளுக்காகப் பாவமன்னிப்புத் தேடி, பிரார்த்தனை புரிந்து கொண்டுமிருப்பதுடன், மார்க்கத்தில் நிலையான விசுவாசத்துடன் நற்செயல்கள் புரிவோருக்கு இன்பகரமான சுவனத்தைக் கொண்டு நற்செய்தியும் கூறிக் கொண்டிருக்கின்றனர். அத்துடன் அவர்களுக்காக ஸலவாத்துக் கூறி உதவியும் செய்கின்றார்கள். மேலும் அடியார்களையும் அவர்களது செயல்களையும் பாதுகாப்பதற்காக அல்லாஹ் அவர்களை அனுப்பியுள்ளான். அல்லாஹ் கூறுகின்றான் : (மனிதனாகிய) அவனுக்கு முன்னும் பின்னும் தொடர்ந்து வரக்கூடிய (வான)வர்கள் உள்ளனர். அவர்கள் அல்லாஹ்வின் கட்டளைப்படி அவனைப் பாதுகாக்கின்றனர். (அல்குர்ஆன் - 13:11)

6. ரவிக்க வலியுறுத்துகின்றது. அவர்கள் கண்ணியமான அடியார்கள், அல்லாஹ் அவர்களுக்கு ஏவிய விடயத்தில் அவனுக்கு மாறு செய்யமாட்டார்கள். ஏவப்பட்டதை செய்வார்கள். அவர்களது கௌரவத்தைக் குறைக்கும் பண்புகளை விட்டும் அவர்களைத் தூய்மைப்படுத்த வேண்டும்.


7. தனிப்பட்ட தூய்மையை ஆர்வமூட்டுதல். ஏனெனில் மனிதர்கள் நோவினை பெறக் கூடியவற்றில் இருந்து வானவர்களும் நோவினைக்குள்ளாகின்றனர். நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் : யார் வெங்காயம், பூண்டு, லீக்ஸ் போன்ற இலைகளைச் சாப்பிட்டாரோ அவர் எமது மஸ்ஜிதை நெருங்க வேண்டாம். ஏனெனில் மனிதர்கள் நோவினை பெறக்கூடியவற்றில் இருந்து வானவர்களும் நோவினைக்கு உள்ளாகின்றார்கள். (அறிவிப்பவர் : ஜாபிர் (றழி), ஆதாரம் : முஸ்லிம் 564)

8. வானவர்கள் இருப்பதிலும், அவர்களை நம்புவதிலும் பல அறிவு நுட்பங்கள் உள்ளன. அல்லாஹ்வின் அறிவுத் திறன், பக்தியின் மகத்துவம், அறிவுநுட்பத்தின் திறன் ஆகியவற்றை மனிதன் அறிந்து கொள்ளல், அல்லாஹ்வின் கட்டளைப்படி முஸ்லிமைப் பாதுகாத்து உதவி செய்யும் ஒரு கூட்டம் உள்ளதென்பதை அறிவதால் பாதுகாப்பை உணர்தல் ஆகியன அவற்றுள் சிலவாகும்.

9. உருவாக்கம், படைப்பு மற்றும் கவனிப்பு ஆகியவற்றில் எங்களுடனான வானவர்களின் தொடர்பானது மனிதனது முக்கியத்துவத்தையும், மதிப்பையும் அறிவிக்கின்றது. அவன் அற்பமானவன், இழிவானவன் என்று கூறும் சிந்தனையை இல்லாமல் செய்கின்றது. அதன் மூலம் தன்னைத் தானே மதிப்பிட்டு, அவன் மேற்கொள்ள வேண்டிய பாரிய பணியைத் திறன்படச் செய்வதற்கு முயற்சிப்பான்.

# மூன்றாவது :

# வேதங்களை நம்புதல்



வேதங்களை நம்புவது பின்வரும் விடயங்களை உள்ளடக்குகின்றது.

1. அல்லாஹ்விடமிருந்து வேதங்கள் இறங்கியுள்ளன என்பதை நம்புதல். இது அல்லாஹ் தனது அடியார்கள் மீது கொண்ட அதீத கருணையாகும். ஒவ்வொரு சமூகத்திற்கும் அவற்றுக்குப் பொருத்தமான சட்டதிட்டங்களைக் கொண்ட வேதங்களை இறக்கியுள்ளான். இவ்வாறு வேதங்கள் அருளப்படுவது பாரிய அருட்கொடை என்பதை சிறார்களுக்குத் தெளிவுபடுத்த வேண்டும். ஏனெனில் எமக்கு அல்லாஹ்வைப் பற்றியும், மறுமை மற்றும் நலவு கெடுதிகளைப் பற்றியும் அறிவித்துத் தந்தது இவ்வேதங்கள் தாம்.

2. அவ்வேதங்களில் நாம் அறிந்துள்ள பெயர்களுடன் சேர்த்து நம்புதல். இப்றாஹீம் (அலை) அவர்களுக்கு அருளப்பட்ட ஏடு, மூஸா (அலை) அவர்களுக்கு இறங்கிய தவ்ராத், தாவூத் (அலை) அவர்களுக்கு இறங்கிய ஸபூர், ஈஸா (அலை) அவர்களுக்கு இறங்கிய இன்ஜீல், முஹம்மத் (ஸல்) அவர்களுக்கு இறங்கிய அல்குர்ஆன் ஆகியன அவற்றுள் சிலவாகும்.

3. இவ்வேதங்களுள் ஒன்று மற்றதை உண்மைப்படுத்துமே தவிர பொய்ப்படுத்த மாட்டாது. அவற்றிற்கிடையே எவ்வித முரண்பாடும் இல்லை. அல்லாஹ் கூறுகின்றான் : “(இது) தனக்கு முன்னுள்ள வேதத்தை உண்மைப்படுத்தக்



கூடியதாக உள்ளது" (அல்குர்ஆன் - 5:48)

4. இவ்வேதங்களிலுள்ள ஆதாரபூர்வமான செய்திகளை உண்மைப்படுத்துதல். முன்னைய வேதங்களில் பலவிதமான மாற்றங்களும் திரிபுகளும் நீண்ட நாட்களாக இடம் பெற்றுள்ளன. ஏனெனில் அவை குறிப்பிட்ட ஒரு சமூகத்திற்காக, வரையறுக்கப்பட்ட காலகட்டத்தில் அருளப் பட்டவை. அவற்றைப் பாதுகாப்பதாக அல்லாஹ் பொறுப் பெடுக்கவும் இல்லை என்பதை அச்சிறார்களுக்குப் போதிக்க வேண்டும்.

5. அல்குர்ஆன், அதற்கு முன்னுள்ள அனைத்து வேதங்களையும் மாற்றி, காலாவதியாக்கி விட்டது என்பதை நம்புதல். அல்குர்ஆனின் சட்டதிட்டங்களை அமுல்படுத்துவதுதான் மறுமை வரை கட்டாயக் கடமையானது. எனவே அதன் ஏவல்களை எடுத்து நடத்தல், விலக்கல்களை தவிர்ந்து கொள்ளல், அது தடுத்தவற்றை ஹராமாக எடுத்துக் கொள்ளல், அனுமதித்தவற்றை ஹலாலாக எடுத்துக் கொள்ளல், அதன் தெளிவான வசனங்களை அமுல்படுத்தல், பல கருத்துக்களுக்கு இடம்பாடான வசனங்களை அல்லாஹ்விடம் பொறுப்புச் சாட்டிவிட்டு ஏற்றுக் கொள்ளல், அதன் வரையறை போதனைகளுடன் நின்றுகொள்ளல் (ஆகியன அல்குர்ஆனைப் பின்பற்றுவதில் உள்ளடங்குகின்றன).

வேதங்களை நம்புவதில் உள்ளடங்கும் மற்றுமொரு பிரதான அம்சம் சிறார்களுக்கு சிறு பிராயத்திலேயே அல்குர்ஆனை மனனமிட வைத்தலாகும். சிறார்களிடம் அறிவு விருத்தியடைவதற்கான முக்கிய உந்து சக்தியாக அல்குர்ஆனை மனனமிடுதல் கணிக்கப்படுகின்றது. இது நன்றாகக் கையாளப்பட்டு, சிறார்களின் உள்ளங்களில் இறை வசனங்களின் சூழ்நிலையை உயிர்ப்பிக்க ஆசிரியரால் முடியுமென்றால் அந்தக் குர்ஆன் வசன்கள் பூமி படைக்கப்பட்ட முறை, மனித படைப்பு, எம்மைச் சூழவுள்ள படைப்புக்கள் ஆகியவற்றைப் பற்றி சிந்திக்க எம்மை அழைக்கின்றது. அதன் மூலம் எமது ஈமானை அதிகரிக்கவும், அறிவும் செயன்முறையும் ஒன்றரக் கலக்கவும் (இவ்வாறு சிந்திக்க) அழைக்கின்றது. அல்குர்ஆனை மனனமிடுதல், அதன் அர்த்தங்களை விளங்குதல் ஆகியன மனிதனை புத்திக் கூர்மையில் மேம்பட்ட நிலைக்குக்



கொண்டு செல்கின்றன. அதேபோன்று சிறார்களின் நாவுகளை தூய மொழி நடைக்குப் பழக்குகின்றது. அது அல்குர்ஆன் ஓதுவதன் மூலம் நாவை செம்மைப்படுத்தி, சீர்திருத்துவதன் ஊடாகவே தூய மொழி நடையைப் பழக்குகின்றது. மேலும் இறையச்சம், உள்ளச்சம், ஆசை, மதிப்பச்சம், இதயங்கள் மற்றும் உணர்வுகளுக்காக இறங்குதல் போன்ற இறைவன் விரும்பும் உணர்வுகளை அல்குர்ஆன் வளர்த்து விடுகின்றது. அன்றாட வாழ்க்கையின் எல்லாத் துறைகளிலும் அல்குர்ஆனின் போதனைகள், மற்றும் ஒழுக்கங்களை அமுல்படுத்த சிறார்களைப் பயிற்றுவிக்கின்றது. அத்துடன் நேரான வாழ்க்கை மற்றும் நல்ல நெறிமுறைகளை சிறார்களிடம் வளர்க்கின்றது. அல்குர்ஆன் மனன வகுப்புக்களில் ஒன்றுசேர்வதன் மூலம் அல்லாஹ்விடமிருந்து மகத்தான கூலி பாரிய அருள் கிடைப்பதும் அல்குர்ஆனின் மூலம் கிடைக்கும் பயன்களில் உள்ளதாகும்.



## அல்குர்ஆனை மனனமிடத் தூண்டுவது எவ்வாறு?

**1.** அல்குர்ஆனின் சிறப்புக்கள், அதனை மனனமிடுதல், ஓதுதல், போதித்தல், அமுல்படுத்தல் ஆகியவற்றின் சிறப்புக்களைத் தெளிவுபடுத்தல். நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் : "நீங்கள் அல்குர்ஆனை ஓதுங்கள். அது மறுமையில் சிபார்சு செய்யக்கூடியதாக வரும்" (முஸ்லிம் - 804), "அல்குர்ஆனுடையவருக்கு நீர் ஓதும். (அதன் மூலம்) உயர்ந்து கொண்டே செல்லும். உலகில் திறமையாக ஓதியதைப் போன்று ஓதும். ஏனெனில் உமது அந்தஸ்து நீர் இறுதியாக நிறுத்தும் வசனத்தில் தான் உள்ளது" (திர்மிதி – 2914), மேலும் கூறினார்கள் : "குர்ஆனை ஓதும் விசுவாசியின் நிலையானது நாரத்தைப் பழம் போன்றதாகும். அதன் மணமும் நன்று. சுவையும் நன்று. குர்ஆனை ஓதாத விசுவாசியின் நிலையானது பேரீத்தம் பழத்தைப் போன்றது. அதற்கு மணம் கிடையாது. ஆனால் சுவை இனிமையானது. குர்ஆனை ஓதுகின்ற நயவஞ்சகனின் நிலையானது துளசிச் செடியைப் போன்றது. அதன் மணம் நன்று. அதன் சுவையோ கசப்பானது. குர்ஆனை ஓதாத நயவஞ்சகனின் நிலையானது குமட்டிக்காயைப் போன்றது. அதற்கு மணம் கிடையாது. அதன் சுவையோ கசப்பானது" (புஹாரி – 5427). மேலும் கூறினார்கள் : "அல்குர்ஆனைத் தானும் கற்று, பிறருக்கும் கற்பிப்பவரே உங்களில் சிறந்தவர் ஆகும்" (புஹாரி – 5027). அத்துடன் முன்சென்ற நல்லோர் அல்குர்ஆனுக்குக் கொடுத்த முக்கியத்துவத்திற்கான சில எடுத்துக்காட்டுகளையும் அவர்களுக்குக் கூற வேண்டும். அது அவர்களை ஊக்கப்படுத்துவதற்கான சிறந்த சாதனங்களில் ஒன்றாகும்.



**2.** அல்குர்ஆன் மத்ரஸாக்களில், அல்லது பள்ளிகளில் நடைபெறும் குர்ஆன் மனன வகுப்புக்களில் பிள்ளைகளை சேர்த்து விடுதல். அல்லது குர்ஆன் கற்றுக் கொடுக்கக் கூடிய ஒரு ஆசிரியரைத் தேடி நியமித்தல். அத்துடன் ஊக்குவிப்புப் பரிசில்களை வழங்கி, பிள்ளைகள், மாணவர்களுக்கு மத்தியில் ஆரோக்கியமான போட்டிச் சூழலை ஏற்படுத்தி விடுதல்.

**3.** ஆரம்பத்திலேயே சிறார்களுக்கு அல்குர்ஆன் மனனத்தை இலகுவாகக் காட்ட வேண்டும். அதனால் இவ்விடயம் அவர்களுக்கு விருப்பத்திற்குரியதாக மாறிவிடும். முப்பதாவது பாகமாகிய "அம்ம ஜுஸ்உ"வில் ஆரம்பிக்க வேண்டும். ஏனெனில் அதன் வசனங்கள் குறுகியது. ஒரே விதமான எழுத்துக்களில் பெரும்பாலும் முடியக்கூடியவை. இவை பிள்ளையின் மனதில் பதிய இலகுவாக இருக்கும். மேலும் ஈமானின் அம்சங்களை அவ்வசனங்கள் உள்ளடக்கியுள்ளதால் அடிப்படை கொள்கையை சீர்திருத்தி, நடத்தைகளைப் பண்படுத்த முடியும். மேலும் பிள்ளையின் ஆரோக்கியத்தையும் அது பாதுகாக்கின்றது. ஏனெனில் அல்குர்ஆன் திக்ராகவும், நோய் நிவாரணியாகவும் உள்ளது. அதற்கும் மேலால் நாவை செம்மைப்படுத்தி நல்ல விளக்கத்தையும் அதிகரிக்கின்றது.

**4.** அல்குர்ஆன் ஓதும் போதும், மனனமிடும் போதும் வசனங்களின் அர்த்தங்கள் உள்ளத்தைத் திறந்து கொடுப்பதற்காக சுருக்கமான விளக்கத்தை சிறார்களுக்குக் கொடுப்பதிலும் அக்கறை செலுத்த வேண்டும். சிறார்கள் அல்குர்ஆனை விளங்கும் தரத்திற்கு வரவில்லையென்று யாரும் நினைத்து விட வேண்டாம். ஏனெனில் ஒன்றை மனனமிடுவதிலும் விளங்குவதிலும் அவர்களிடம் அலாதியான ஓர் ஆற்றலுள்ளது.

**5.** அல்குர்ஆன் ஒரு நோய் நிவாரணி, அருள், அபிவிருத்தி என்பதை சிறார்களுக்குப் போதிக்க வேண்டும். "இன்னும், நாம் மு.்.மின்களுக்கு ரஹ்மத்தாகவும், அருமருந்தாகவும் உள்ளவற்றையே குர்ஆனில் (படிப்படியாக) இறக்கி வைத்தோம் ஆனால் அக்கிரமக்காரர்களுக்கோ இழப்பைத் தவிர வேறெதையும் (இது) அதிகமாக்குவதில்லை" (அல்குர்ஆன் - 17:82). அதனை முழுமையாகவோ, சில பகுதியையோ மனனமிட்டால் நோய் ஏற்படும் போது தனக்குத் தானே ஓதிப்பார்க்க முடியும். அதேபோன்று தன்னைச் சுற்றி இருப்பவர்களுக்கும் ஓதிப்பார்க்கலாம் என்பதையும் போதிக்க வேண்டும்.

# நான்காவது :
# இறைத் தூதர்களை நம்புதல்.



இறைத் தூதர்களை நம்பிக்கை கொள்வதானது, அவர்களையும், அவர்கள் கொண்டு வந்த ஆதாரபூர்வமான செய்திகளையும் உண்மைப்படுத்துதல். அவர்களில் பெயர் அறியப்பட்டவர்களது பெயர்களுடன் நம்புதல். தமது சமூகத்தில் அறிவு, பண்பாட்டு ரீதியில் தனித்துவமாக இருந்ததால் அவர்களை அச்சமூகத்திலிருந்தே அவனது தூ துத்துவத்தை எத்தி வைப்பதற்காகத் தெரிவு செய்துள்ளான் என நம்புதல் ஆகிய அனைத்தும் உள்ளடங்குகின்றது. அல்லாஹ் கூறுகின்றான் : நாம் எந்தத் தூதரையும் அவர் தனது சமூகத்திற்குத் தெளிவுபடுத்துவதற்காக அவர்களது மொழியிலேயே தவிர அனுப்பவில்லை. (அல்குர்ஆன் - 14:4). அத்தூதர் வானவராக இருந்தால் அவர் சொல்வதை விளங்கியிருக்க மாட்டார்கள். நபிமார்களுக்கு மத்தியில் சிலரை ஏற்று, சிலரை மறுத்து வேறுபாடு காண்பிக்காமலிருப்பது எமது கடமையாகும். அனைத்துத் தூதர்களும் தாம் கொண்டு வந்த தூதுத்துவத்தில் உண்மையாளர்கள், தமது சமூகத்திற்கு நலவு நாடுவதில் உபகாரம் புரிபவர்கள், அல்லஹ்விடமிருந்து வரும் செய்தியை எத்தி வைப்பதில் அவர்கள் தவறிலிருந்து பாதுகாக்கப் பட்டவர்கள். இறுதித் தூதர் முஹம்மத் (ஸல்) அவர்கள் கொண்டு வந்த இறுதி வேதத்தைத்தான் நாம் பின்பற்ற வேண்டும். இறைத் தூதர்களை நம்புவது பற்றி சிறார்களின் உள்ளங்களில் பதியவைக்க வேண்டிய அறிவியல் கருத்துக்கள் வருமாறு..

1. தன்னை மாத்திரம் வணங்கி, தன்னல்லாதோர் வணங்கப் படுவதை நிராகரிப்பதன் பால் அழைப்பதற்காக அல்லாஹ் ஒவ்வொரு சமூகத்திலிருந்தும் அவர்களிலிருந்தே ஒருவரைத் தூதராக அனுப்பியுள்ளான் என்பதைத் தெளிவுபடுத்தல். அவர்கள் அனைவரும் உண்மையாளர்கள், உண்மைப்படுத்தப் பட்டவர்கள், உபகாரம் செய்யக் கூடியவர்கள், நேர்வழி பெற்றவர்கள், இறையச்சமுள்ள நம்பிக்கையாளர்கள்.

2. அவர்களில் முதலாமவர் முதல் இறுதித் தூதர் வரை அனைவரினது அழைப்பும் ஒரே அடிப்படையைக் கொண்டதாகவே இருந்தது. இதுதான் சொல், செயல், நம்பிக்கை அனைத்து வகை வணக்கங்களிலும் அல்லாஹ்வை ஒருமைப்படுத்தி, அவனல்லாதோர் வணங்கப்படுவதை நிராகரிப்பதுமாகும் என்பதைத் தெளிவுபடுத்துதல்.



3. படைப்பினங்களுக்கு தூதர்களை அனுப்புவதில் உள்ள இறையியல் அறிவு நுட்பத்தைத் தெளிவுபடுத்துதல். அல்லாஹ்வை மாத்திரம் வணங்கி ஒருமைப்படுத்துதல். மக்களுக்கு நேரான வழியைக் காட்டுதல். மக்களுக்கு அவர்களுடைய மார்க்க, உலகியல் விடயங்களைப் போதித்தல். வழிகேடு எனும் இருள்களிலிருந்து நேர்வழி எனும் பிரகாசத்தின் பால் மக்களை வெளியேற்றுதல். சமூகத்தை வழிநடத்தி அல்லாஹ்வின் சட்டதிட்டங்களை அவர்களுக்கு மத்தியில் அமுல்படுத்துதல். அவர்களைப் பின்பற்றி அவர்கள் வழி நடத்தல் போன்றன இறைத் தூதர்கள் அனுப்பப்படுவதற்கான உள்நோக்கங்களில் சிலவாகும்.

4. அல்லாஹ் தனது அடியார்கள் மீது கொண்டுள்ள கருணை, அக்கறையை அறிந்து கொள்ளல். இறை வழியின் பால் அவர்களுக்கு வழிகாட்டுவதற்காக தூதர்களை அனுப்பி வைத்தான். அத்துடன் இந்த அருட்கொடைக்காக அவனுக்கு நன்றி செலுத்தவும், நபிமார்கள், தூதர்களை நேசிக்கவும் அச்சிறார்களுக்கு உணர்த்துதல். ஏனெனில் அத்தூதர்கள் அவனது தூதுத்துவத்தை எத்தி வைத்து, அவனது அடியார்களுக்கு நலவு நாடியுள்ளார்கள். ஏனெனில் மனிதர்கள் எவ்வளவு தான் அறிவு, விளக்கம், புத்திக்கூர்மை வழங்கப்பட்டிருந்தாலும், ஒவ்வொரு நபருக்கும் தனது உரிமையை வழங்குவதில் சம ஒத்திசைவு கொண்ட ஒற்றுமையான சமூகமாக சீர்திருத்துவதற்கான பொது அமைப்பை உருவாக்குவதில் (இறைவழிகாட்டலின்றி) அம்மக்களால் தனித்து செயல்பட முடியாது. எனவே தூதர்கள் மக்களுக்குப் பயனளிக்கக் கூடியவற்றைப் போதித்து, தீங்கிழைப்பவற்றைத் தடுக்கின்றனர்.

5. இறுதித் தூதர் (ஸல்) அவர்களுக்கு வழிப்பட்டு, அவர்களது அடிச்சுவட்டைப் பின்பற்றுவதற்காக அன்னாருடைய நேசத்தை உள்ளத்தில் விதைக்க வேண்டும். மேலும் அவரை விட ஏனையோரை நேசிக்காமலிருக்கவும், அன்னாரை ஆதரிப்போரை நாமும் ஆதரிக்கவும் எதிர்ப்போரை நாமும் எதிர்க்கவும் (அன்னாரின் நேசத்தை உள்ளத்தில் விதைக்க வேண்டும்). அன்னாருடைய பெயரைக் கண்ணியப்படுத்துதல், அவரது பெயர் கூறப்படும் போது மதித்து, ஸலவாத்துக் கூறுதல், அவரது சிறப்புக்கள் மற்றும் நல்லொழுக்கங்களை மெச்சுதல்

போன்றன மேற்கண்டவற்றில் உள்ளடங்கும். ஏனெனில் அன்னார் மகத்தான கருணையுடையவராகவும், இரக்கமுள்ளவராகவும் இருந்தார்கள். அதேபோன்று தான் அன்னாரது மண்ணறையைத் தரிசிக்கும் பாக்கியம் பெற்றவர்கள் அங்கும் சப்தத்தைத் தாழ்த்தி, அன்னாரது கப்ருக்கு அருகாமையிலும், பள்ளியிலும் மரியாதையாக நடந்து கொள்ளல் வேண்டும்.

## எவ்வாறு நபியவர்களை நேசிக்கக் கற்பிக்க வேண்டும்?

1. முதலில் அல்லாஹ் அன்னாரை நேசிக்கின்றான். அனைத்து மனிதர்களையும் விட அவர்களை மேம்படுத்தியுள்ளான். மேலும் அவர்களை நேசிப்பதை அல்லாஹ் எமக்குக் கடமையாக்கியுள்ளான் என்பதை சிறார்களுக்கு வலியுறுத்திக் கூற வேண்டும். மேலும் நபியவர்களை நேசிப்பது அல்லாஹ்வை நேசிப்பதற்கான அடையாளமாகும். எனவே நபி (ஸல்) அவர்களை நேசிப்பவர் அல்லாஹ்வை உண்மையாக நேசித்தவராவார் என்பதையும் அவர்களுக்குப் போதிக்க வேண்டும்.

2. இம்மார்க்கத்தை எத்திவைத்து நேர்வழி காட்டியதன் மூலம் நபி (ஸல்) அவர்கள் அகிலத்தார் அனைவருக்கும் அருட் கொடையாக இருந்தார்கள் என்பதை நினைவிலிருத்த வேண்டும். மறுமையில் பரிந்துரை செய்வதன் மூலம் நல்லடியார்களுக்கு விஷேட அருட்கொடையாக இருப்பார்கள்.

3. நறுமணம் கமழும் நபி வரலாற்றில் சில பாடங்களை வாசித்தல். அனைத்து மனிதர்களுக்கும் பின்பற்றத்தக்க முன்மாதிரி அந்த நபியவர்கள்தாம் என்பதைப் போதிக்க வேண்டும். அவருடைய சில அற்புதங்கள், நற்குணங்கள், அநீதி இழைக்கப்பட்டோருக்கு உதவுதல், வறியவர்களுக்கு இரக்கம் காட்டுதல், அநாதைகளைப் பற்றி உபதேசித்தல், பலவீனர்களுக்கு கருணை காட்டுதல் போன்ற சில விடயங்களை எடுத்துக் கூற வேண்டும். இவ்விடயத்தில் அவர்களுடைய அறிவுத் தரத்திற்கேற்றவாறு எமது பேச்சுநடை இருக்க வேண்டும். அழகான முறையில் உள்வாங்கிக் கொள்வதற்காக அவர்களது மனநிலைக்குப் பொருத்தமான விடயங்களுடன் மாத்திரம் போதுமாக்கிக் கொள்ளல். பிள்ளையின் மனநிலை, வயது, சூழல் ஆகியவற்றிற்கேற்ப பலவிதமான முறைகளைக் கையாண்டு இவ்விடயங்களைப் போதிப்பதில் அக்கறை செலுத்துதல் வேண்டும். அத்துடன் தனிப்பட்ட வேறுபாடுகள், சுற்றுச் சூழல் நிலைமைகளைக் கவனத்தில் கொள்வதும் அவசியமாகும்.

4. பிள்ளை தனது பெற்றோர், தன்னைச் சூழவுள்ளோர் நபி (ஸல்) அவர்களைப் பின்பற்றுவதில் ஆர்வங்கொள்ளல், அவர்களது பெயர் கூறப்படும் போதெல்லாம் ஸலவாத்துச் சொல்லல் போன்றவற்றின் மூலம் நபியவர்களையும், அவர்களது பொன்மொழிகள், வழிமுறைகளையும் கண்ணியப் படுத்துவதைக் கண் முன்னால் காண வேண்டும். பெற்றோரின் நடைமுறைச் செயற்பாடுகள், மற்றும் அவர்களின் வழிமுறைகள் பயிற்றுவிப்பில் பெரிய தாக்கம் செலுத்தக் கூடியவையாகும். ஸ "ன்னத்தான அமல்களை தந்தை செய்யும் போது இவ்வாறுதான் நபி (ஸல்)

அவர்களும் செய்வார்கள் என்று பிள்ளைகளிடம் கூற வேண்டும். முன்மாதிரி மூலம் பயிற்றுவிப்பதானது சரியான வளர்ப்பு, நேரான அடிப்படைக் கொள்கை அறிவு ஆகியவற்றில் பாரிய தாக்கம் செலுத்துகின்றது. ஆசிரியர்கள் தமது கல்விப் பணியில் பின்பற்ற வேண்டிய, அவரின் வழியில் செல்ல, அவரின் வழிமுறையைத் தமது பிள்ளைகளுடன் யதார்த்தபூர்வமாக அமுல்படுத்த வேண்டிய உயர்ந்த முன்மாதிரியாக நபி (ஸல்) அவர்கள் தான் திகழ்கின்றார்கள்.

5. இஸ்லாத்தின் பரிபூரணத்துவம், சிறப்பியல்புகள், நபியவர்களின் நற்பண்புகள், தோழர்களின் சிறப்புகளை எடுத்துக் காட்டும் ஆதாரபூர்வமான சில நபிமொழிகளை சிறார்களுக்கு மனனம் செய்து வைத்தல். ஏனெனில் விசுவாசம், நன்னடத்தை, சுய கட்டமைப்பு ஆகியவற்றில் நபிமொழிக்குப் பாரிய தாக்கமுள்ளது. சிறுபிராயத்திற்குப் பொருத்தமாக நற்குணங்களை உள்ளடக்கிய சிறிய நபிமொழிகளை மனனமிடும் போட்டியையும் நடத்தலாம். ஆர்வத்தை ஏற்படுத்தக்கூடிய பரிசில்கள் வழங்கும் முறைகளை இச்சந்தர்ப்பத்தில் கவனத்திற் கொள்ள வேண்டும்.

6. நபித்தோழர்கள் நபி (ஸல்) அவர்களுடன் நடந்து கொண்ட முறை, அவர்களை கண்ணியப்படுத்திய விதம், அவர்களுக்காக ரோசப்பட்ட நிகழ்வுகள் போன்றவற்றை உள்ளடக்கிய சம்பவங்களை சிறார்களுக்குக் கூறுதல். குறிப்பாக சிறுவயது நபித்தோழர்களுடைய சம்பவங்கள் உகந்தது. உதாரணமாக அனஸ் (றழி) அவர்கள் நபியவர்களைப் பின்பற்றுவதில் தீவிரமாக இருந்ததைப் பின்வரும் சம்பவத்தலிருந்து புரிந்து கொள்ளலாம். அவர்கள் கூறுகின்றார்கள் : தையற்காரர் ஒருவர் நபி (ஸல்) அவர்களைத் தாம் தயாரித்த உணவினை உண்பதற்காக அழைத்தார். நானும் நபியவர்களுடன் அந்த விருந்திற்காகச் சென்றேன். நபி (ஸல்) அவர்களின் அருகே வாற்கோதுமை (பார்லி) ரொட்டியையும் சுரைக்காயும் உலர்ந்த இறைச்சியும் உள்ள குழம்பையும் வைத்தார். நபி (ஸல்) அவர்கள் தட்டைச் சூழவும் சுரைக்காயைத் துழாவுவதைக் கண்டேன். அன்றிலிருந்து நானும் சுரைக்காயை விரும்பிச் சாப்பிட்டுக் கொண்டே இருக்கின்றேன். மற்றுமொரு அறிவிப்பில் : நான் சுரைக்காயை ஒன்று சேர்த்து நபியவர்கள் முன் வைத்தேன் என்று அனஸ் (றழி) கூறியதாக அவர்களது பேரப்பிள்ளை ஸுமாமா இப்னு அப்தில்லாஹ் கூறுகின்றார்கள். (புஹாரி – 5439) எனவே நபித் தோழர்கள் எவ்வாறு நபியவர்களை நேசித்தார்கள்? அவர்களுக்காக தம்மை எவ்வாறு அர்ப்பணித்தார்கள்? என்பதையும் அது பற்றிய சம்பவங்களைக் கூறுவதிலும் ஆசிரியர்கள் அக்கறை செலுத்த வேண்டும்.

7. நபியவர்களுடனான இந்த நேசத்தினால் கிடைக்கும் பலனைக் கற்றுக் கொடுத்தல். அனஸ் (றழி) அவர்கள் கூறுகின்றார்கள் : ஒருவர் நபி (ஸல்) அவர்களிடம் மறுமை நாளைப் பற்றி அது எப்போது வரும்? என கேட்டார். நபியவர்கள் அதற்காக நீ என்ன (நற்செயல்களைத்) தயார் செய்து வைத்திருக்கிறாய்? என்று (திரும்பக்) கேட்டார்கள். அதற்கவர், நான் அல்லாஹ்வையும், அவனுடைய தூதரையும் நேசிக்கிறேன் என்பதைத் தவிர வேறு எதுவுமில்லை என்று பதிலளித்தார். அதற்கு நபி (ஸல்) அவர்கள், “நீ நேசித்தவர்களுடன் தான் மறுமையில் நீ இருப்பாய்”

என்றார்கள். நபியவர்கள் “நீ நேசித்தவர்களுடன் இருப்பாய்” என்று சொன்னதைக் கேட்டு நாங்கள் மகிழ்ச்சியடைந்ததைப் போன்று வேறு எதனாலும் நாங்கள் மகிழ்ச்சியடைந்ததில்லை. நான் நபி (ஸல்) அவர்களையும் அபூபக்ர் (றழி), உமர் (றழி) ஆகியோரையும் நேசிக்கிறேன். அவர்களை நேசித்த காரணத்தினால் மறுமையில் அவர்களுடன் தான் இருப்பேன் என நம்புகிறேன். அவர்களைப் போல் நற்செயல்கள் செய்யாவிட்டாலும் சரியே” என்று அனஸ் (றழி) அவர்கள் கூறினார்கள். (புஹாரி – 3688)

8. நபி (ஸல்) அவர்களை நேசிக்கும் விடயத்தில் (மார்க்க வரம்புகளைப் பேணி) புதுப்புனைவுத் திறனுள்ள ஆக்கங்களை உருவாக்க சிறார்களுக்கு உதவி புரிதல். உதாரணம் : கவிதைகள் வடித்தல், சம்பவங்கள் கூறுதல், பிரசங்கம் நிகழ்த்துதல், கட்டுரைகள் வரைதல், நபியை நேசிக்கும் விடயத்தில் ஆரோக்கியமான போட்டி நிகழ்ச்சிகளுக்கு ஊக்குவித்தல்.



# ஐந்தாவது :

# இறுதிநாளை நம்புதல்

மறுமையை நம்புதல் என்பது : மரணம், மீண்டும் எழுப்பப்படல், விசாரணை, கூலி வழங்கல், ஸிராத், தராசு, சுவனம், நரகம் அனைத்தையும் உள்ளடக்குகின்றது. குழந்தை பிரித்தறியும் வயதைத் தாண்டும் போது மறுமை பற்றிய நிகழ்வுகளைத் தெளிவாகப் புரிந்து கொள்ள ஆரம்பித்து விடும். அதற்கு முன்னால் சுருக்கமாகவும், மேலோட்டமாகவும் கூறுவதுதான் சிறந்தது. மரணத்திற்குப் பின் ஒரு வாழ்க்கை உண்டு, நல்லவர்களுக்கு சுவனமும் தீயவர்களுக்கு நரகமும் உண்டு என்பதை மேலோட்டமாக எடுத்துக் கூற வேண்டும்.

மறுமை நாளை நம்புதல் பற்றி சிறார்களின் உள்ளங்களில் விதைக்க வேண்டிய அறிவியல் கருத்துக்கள் வருமாறு :

1. இவ்வுலகில் தான் செய்த செயல்களுக்குக் கூலி வழங்குவதற்காக மரணத்தின் பின் மீண்டும் எழுப்பப்படுவார் என்ற செய்தியைக் கற்றுக் கொடுத்தல் வேண்டும். அது நலவாக இருந்தால் நற்கூலியும் தீமையாக இருந்தால் தண்டனையும் கிடைக்கும்.

2. அத்தினத்தில் அல்லாஹ் கண்ணியமான, மகிழ்ச்சியான, நிரந்தரமான வீடாகிய சுவனத்தை உருவாக்கியுள்ளான் என்பதை சிறார்களுக்குக் கற்றுக் கொடுக்க வேண்டும். அதனை நல்லடியார்களுக்குக் கூலி வழங்குவதற்காக அல்லாஹ் படைத்துள்ளான். அதேபோன்று இறை நிராகரிப்பாளர்களுக்குத் தயாரித்துள்ள நரகையும் உருவாக்கியுள்ளான். இவ்விடயங்களை சுவனத்தையும் அதில் நம்பிக்கையாளர்களுக்குத் தயாரித்து வைத்துள்ள இன்பங்களையும் ஆசையூட்டுவதன் மூலம் போதிக்கலாம்.

3. எரிச்சலூட்டும் எண்ணங்கள் குழந்தைகளிடம் ஆதிக்கம் செலுத்தாமலிருக்க அல்லாஹ்வின் அருள், மன்னிப்பு, அடியார்களின் மீது கொண்டுள்ள இரக்கம் போன்றவற்றை உணர்த்தி, மென்மையான முறையில் மரணத்தையும், மறுமையையும் பற்றி சிறார்களிடம் பேசுதல். இதனை ஒரே கட்டங்களில் செல்லும் அனைத்து உயிரினங்களுடனும் தொடர்புபடுத்தலாம். எனினும் மனிதனை அல்லாஹ் பொறுப்புக்கள் கொடுப்பதன் மூலம் வேறுபடுத்தியுள்ளான். ஏனைய பொருட்களை அவனுக்கு வசப்படுத்தி (பொறுப்புக்களை சரிவர நிறைவேற்றும் போது) கூலி வழங்குவதாகவும் வாக்களித்துள்ளான்.

**4.** அல்லாஹ் அநீதியை அங்கீகரிப்பதில்லை. அநியாயக்காரனை தண்டிக்காமல் விடுவதுமில்லை. அநீதியிழைக்கப்பட்டவனுக்கு நீதம் செலுத்தாமல் இருப்பதுமில்லை. நலவு செய்தோருக்கு எவ்வித நற்கூலிகளும் வழங்காமல் இருப்பதுமில்லை. அநியாயக்காரனாகவே வாழ்ந்து அநியாயக்காரனாகவே மரணிக்கும் எத்தனையோ பேரை இவ்வுலகில் பார்த்திருக்கின்றோம். எனவே இதுவல்லாத, நல்லோருக்குக் கூலியும் தீயோருக்கு தண்டனையும் வழங்கப்பட்டு, ஒவ்வொருவருக்கும் அவர்களுக்குரிய உரிமைகள் வழங்கப்படும் ஒரு வாழ்க்கை நிச்சயம் தேவை என்பதையும் சிறார்களுக்குத் தெளிவுபடுத்தல் வேண்டும்.

# ஆறாவது :
# விதியை நம்புதல்.



விதியை நம்புவதானது அல்லாஹ்வின் பரிபூரணமான அறிவு, எழுதி வைத்தல், அவனது வல்லமை, படைக்கும் ஆற்றல், நாட்டம் அனைத்தையும் உள்ளடக்குகின்றது. பிள்ளைகளுக்குத் தமது சிறு பிராயத்திலேயே கழாகத்ருடைய விடயங்களைப் புரிந்து கொள்ளும் ஆற்றல் இல்லை. ஒன்பது வயதில் தான் இதனைப் புரிந்து கொள்ளலாம் எனச் சில அறிஞர்கள் அபிப்பிராயப்படுகின்றனர். என்றாலும் அவர்களுடைய பருவத்திற்கேற்ற வகையில் உள்ளங்களில் பதியவைக்க வேண்டிய சில விடயங்கள் உள்ளன.

**1.** இந்த விடயத்தில் அடிப்படை இப்னு அப்பாஸ் (றழி) அவர்களுடைய ஹதீஸ்தான். அவர்கள் கூறுகின்றார்கள் : நான் ஒரு நாள் நபி (ஸல்) அவர்களுக்குப் பின்னால் அமர்ந்து பயணம் செய்து கொண்டிருந்தேன். அப்போது அவர்கள் பின்வருமாறு கூறினார்கள் : "சிறுவனே! உனக்கு சில வார்த்தைகளைக் கற்றுத் தருகின்றேன். நீ அல்லாஹ்வை மனதில் கொள், அவன் உன்னைப் பாதுகாப்பான். நீ அல்லாஹ்வை மனதில் கொள், அவனை உன் முன் கண்டு கொள்வாய். நீ (ஏதாவது) கேட்பதாயின் அல்லாஹ்விடமே கேளு. நீ உதவி தேடுவதாயின் அல்லாஹ்விடமே உதவி தேடு. இச்சமூகத்தவர் அனைவரும் உனக்கு ஏதாவது நலவு செய்ய ஒன்று சேர்ந்தாலும் அல்லாஹ் உனக்கென எழுதியதைத் தவிர வேறெதனைக் கொண்டும் அவர்கள் உனக்குப் பயனளிக்க முடியாது, இச்சமூகத்தவர் அனைவரும் உனக்கு ஏதாவது கெடுதி செய்ய ஒன்று சேர்ந்தாலும் அல்லாஹ் உனக்கென எழுதியதைத் தவிர வேறெதனைக் கொண்டும் அவர்கள் உனக்குப் தீங்கிழைக்க முடியாது. (திர்மிதி – 2516) மற்றுமொரு அறிவிப்பில் : "நீ அல்லாஹ்வை மனதில் கொள்,. அவனை உன் முன் காண்பாய். செழிப்பாக இருக்கும் போது நீ அல்லாஹ்வை அறிந்து கொள். கஷ்டத்திலே அவன் உன்னைக் கண்டுகொள்வான். உனக்குக் கிடைக்காமல் தவறியது உனக்குக் கிடைக்கவிருந்ததல்ல. உனக்கு ஏற்பட்ட சோதனை உன்னை விட்டும் தவறிப் போக இருந்ததல்ல என்பதை நீ அறிந்து கொள். பொறுமையுடன் தான் உதவி உள்ளது. கஷ்டங்களுடன்தான் விடிவும் உள்ளது. சிரமத்துடன் தான் இலகும்

இருக்கின்றது என்பதையும் அறிந்து கொள். (அஹ்மத் - 2803). இந்த நபிமொழி சிறார்களின் சரியான அடிப்படைக் கொள்கையை வளர்ப்பதில் கவனம் செலுத்தி நபி (ஸல்) அவர்கள் தமது சமூகத்திற்கு வழிகாட்டுதல்களை உள்ளடக்கிய அறிவின் ஊற்றாக கணிக்கப்படுகின்றது.

2. சிறுவர்களிடம் அவர்களது சிறு பிராயத்தில் கழாகத்ர் பற்றி ஆழமாகப் பேசாமல் இருப்பதுதான் அடிப்படையாகும். அல்லாஹ்வின் விசாலமான முன்னறிவு, வல்லமை, அனைத்தையும் சூழ்ந்தறிகின்றமை, படைப்பாற்றல், நாட்டம் பேன்றவற்றைத்தான் இந்த விடயத்தில் அவர்களுக்குத் தெளிவு படுத்த முடியும். மேற்கண்டவற்றுடன், மனித சுதந்திரம், அவன் சுயமாகச் செய்யும் செயல்களுக்கு அவன்தான் முழுப் பொறுப்பு, அச்செயல்களுக்காக கூலியோ, தண்டனையோ கிடைக்கும் என்பதை மேலோட்டமாகத் தெளிவுபடுத்த வேண்டும். எனினும் இந்தப் பிரச்சினை பிள்ளையின் மனதை ஆக்கிரமித்து கட்டுப்படுத்தினால் அவன் புரிந்து கொள்ளும் விதத்தில் இயன்றளவு எளிய முறையில் அவற்றைத் தெளிவுபடுத்துவது ஆசிரியருக்குக் கடமையாகும்.

3. அல்லாஹ் அல்லாதோரிடம் கேட்காமல், அவனிடம் மாத்திரம் தேவைகளைக் கேட்கவும், அவனிடம் மாத்திரம் உதவி கேட்கவும் பிள்ளைகளுக்குக் கற்றுக் கொடுக்க வேண்டும். ஏனெனில் பிரார்த்தனை மூலம் அல்லாஹ்வை மாத்திரம் தான் முன்னோக்க வேண்டும். அல்லாஹ்விடம் பொறுப்புச்சாட்டி, அவனையே சார்ந்திருக்கவும் அவனது விதிகள் விடயத்தில் பொறுமையாக இருக்கவும் கற்றுக் கொடுக்க வேண்டும்.



4. அல்லாஹ் தனக்கு நலவை மாத்திரம்தான் நாடுகின்றான் என்பதைப் பிள்ளைகளுக்குக் கற்றுக் கொடுக்க வேண்டும். எனவே இவ்வுலகில் அவன் அல்லாஹ்வுடைய விதியுடனான முன்னேற்பாட்டுடன் தான் இருக்கின்றான். எனவே அவனது மனம் நெருக்கடிக்குள்ளாகவோ பொறுமையிழக்கவோ மாட்டாது. அல்லாஹ்வுடைய கழாகத்ரில் திருப்தி கொண்டவனாகத் தான் சோதனைகளுக்கு முகம் கொடுக்கின்றான். “அல்லாஹ் எமக்கு எழுதியதைத் தவிர எந்த சோதனையும் ஏற்படமாட்டாது” (அல்குர்ஆன் - 9:51) என்பதில் உறுதியுடன் இருப்பான்.

5. அனைத்து விடயங்களினதும் கட்டுப்பாடுகள் அல்லாஹ்விடமே உள்ளன. அவன் நாடியதைச் செய்வான், தெரிவு செய்வான். ஏனெனில் தனது ஆட்சியில் முழுமையான அதிகாரம் அவனுக்கே உள்ளது. இது அக்குழந்தை தன்னைப்

படைத்த இறைவனுடன் தொடர்பை அதிகப்படுத்தவும் அவனையே முன்னோக்கவும், அதனையடுத்து அவனது அபிலாசைகள், பிரார்த்தனை, எதிர்பார்ப்புகள் அனைத்திலும் அல்லாஹ்வையே தொடர்புபடுத்தவும் வழிவகுக்கும்.

6. ஈமானின் இந்தக் கடமையை நம்புவது சிறுவர்களின் உள்ளத்தில் உறுதியையும், மனஅமைதியையும் ஏற்படுத்தும். ஒரு விசுவாசி தனக்கு ஏற்படும் நலவு, கெடுதி அனைத்தும் அவனது நலவுக்குத் தான், பொதுவாக அல்லாஹ் யாருக்கும் தீமை நாடுவதில்லை என்பதை உணரும் போது உளஅமைதி மற்றும் மனநிம்மதியை அவனுக்கு உணர்த்துகின்றது. இது அவனை அல்லாஹ்வுடைய கழாகத்ரை ஏற்கும் பரந்த மனதுடன் சோகங்கள், சிரமங்கள், மற்றும் பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க வைக்கின்றது. அதனைத் தொடர்ந்து தனது விடயத்தை அல்லாஹ்விடம் பொறுப்புச் சாட்டிவிட்டு மன அமைதியுடன் வாழ்கின்றான். அல்லாஹ்வின் விதியை ஏற்றவர் சோதனைகள், துயரங்களின் போது பொறுமையிழக்கவோ, பதற்றமடையவோ, கோபப்படவோ மாட்டார். மாறாக அல்லாஹ்வின் விதிக்கு கட்டுப்பட்டு, அவனிடமே நன்மையை எதிர்பார்த்து சோதனையின் ஆரம்பத்திலேயே பின்வரும் வசனத்தை நினைவு கூர்வார். “நிச்சயமாக நாம் உங்களை ஓரளவு அச்சத்தாலும், பசியாலும், பொருள்கள், உயிர்கள், விளைச்சல்கள் ஆகியவற்றின் இழப்பினாலும் சோதிப்போம் ஆனால் பொறுமையுடையோருக்கு (நபியே!) நீர் நன்மாராயங் கூறுவீராக! (பொறுமை உடையோராகிய) அவர்களுக்குத் துன்பம் ஏற்படும் போது, “நிச்சயமாக நாம் அல்லாஹ்வுக்கே உரியவர்கள் நிச்சயமாக நாம் அவனிடமே திரும்பிச் செல்வோம்” என்று கூறுவார்கள். இத்தகையோர் மீதுதான் அவர்களுடைய இறைவனின் நல்லாசியும், நற்கிருபையும் உண்டாகின்றன, இன்னும் இவர்கள் தாம் நேர் வழியை அடைந்தவர்கள்” (அல்குர்ஆன் - -2:155 157)


7. அல்லாஹ்வுடைய ஏற்பாட்டால் நெருக்கடிக்குள்ளான சிலரின் சம்பவங்களை இங்கு பயன்படுத்திக் கொள்ளலாம். அதன் பின் அந்த சோதனைகளின் காரணமாக அல்லாஹ் ஏற்படுத்தியிருந்த நலவுகள் அவர்களுக்குப் புரிய ஆரம்பித்து அவர்களது நிலமைகளும் முன்னேற்றமடைந்ததை எடுத்துக் காட்டலாம்.

8. ங்களில் சுருக்கிக் கூறலாம் : அல்லாஹ் அனைத்தையும் மேலோட்டமாகவும் விரிவாகவும் அறிந்து வைத்துள்ளான், முன்னதாகவே அவன் அறிந்து வைத்துள்ள படைப்பினங்களுடைய விதிகள் அனைத்தையும் லௌஹுல் மஹ்பூழில் (பாதுகாக்கப்பட்ட ஏடு) எழுதி வைத்துள்ளான், அனைத்துப் பொருட்களும் வஸ்துக்களும் அவனது நாட்டமும், படைப்புமின்றி உருவாகமாட்டாது என்பவற்றை விசுவாசித்தல்.






# பதில்களுக்கான நுழைவாயில்



## கருத்துக்கள்,

கருத்துக்கள், மற்றும் தகவல்களை சிறார்கள் முடியுமானளவு அறிந்து கொள்வதற்காக அல்லாஹ் இயல்பாகவே கேள்வி கேட்பதை விரும்பக் கூடியவர்களாகவே அவர்களைப் படைத்துள்ளான். சிறுபிராயம் கேள்விப் பருவமாகவே கணிக்கப்படுகின்றது. ஏனெனில் இப்பருவத்தில் அவர்களது பெரும்பாலான பேச்சுக்கள் கேள்விகளாகவே உள்ளன. சிறார்கள் தம்மைச் சூழவுள்ளவற்றைப் பற்றித் தமக்கு ஒன்றும் தெரியாதவர்களாகவே உணர்கின்றனர். அறியாமை அச்சத்தை உருவாக்கும் என்ற ரீதியில் தமது முழு சக்தியையும் பயன்படுத்தி கற்றுக் கொள்ள உந்தப்படுகிறார்கள். மூன்று வயதுக் குழந்தை தனது பெற்றோரிடமும், மூத்த சகோதரர்களிடமும் பலவிதமான கேள்விகளைக் கேட்பதைக் காணலாம். அவர்களுடைய பதில்கள் இச்சிறார்களிடம் தாக்கத்தை ஏற்படுத்தும். அவர்களை ஒரு நிலையிலிருந்து இன்னொரு நிலைக்குக் கொண்டு செல்லும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை. காரணம் கேள்வியின் வடிவம், மற்றும் அதன் தலைப்புக்கள் தொடர்ந்து மாறிக் கொண்டே இருக்கின்றன. “என்ன?”, “அதன் இடம் எங்கே?”, “அது எப்படி ஆனது?”, “எங்கிருந்து வந்தது?”, “அது என்ன?”, “உங்களுக்குத் தெரியுமா?” போன்ற கேள்விகளை நீர் அவர்களிடம் அடிக்கடி செவிமடுப்பீர். குழந்தை தனது கவனத்தைத் தூ ண்டக்கூடிய அனைத்தையும் அறிய விரும்புகின்றது. தான் பார்க்கக்கூடிய, கேள்விப்படக்கூடிய விடயங்களை விளங்க விரும்புகின்றது. சிலவேளை பதில் விளங்கலாம். சிலவேளை விளங்காமலும் போகலாம். சிலவேளை போதுமான நேரம் பதிலைக் கேட்கும். சிலவேளை கேட்காமல் போய்விடும்.

சிறார்கள் ஒன்றை அறியும் ஆர்வத்தைக் கொண்டவர்கள். தாம் வாழும் சூழல் தனக்குக் கிடைக்கும் சந்தர்ப்பம்

என்பவற்றிற்கமைய அந்த ஆர்வம் சிலவேளை அதிகமாகும். இதனால்தான் கால, இடமாற்றங்கள், அறிவியல் முன்னேற்றங்களின் விளைவாக எமது சிறுபிராயக் கேள்விகளையும் இன்றைய அவர்களின் கேள்விகளையும் ஒப்பிட்டுப் பார்க்கையில் திடுக்கிட்டும் நிற்கின்றோம். கேள்விகள் விரிவடைதல், குறைதலில் தெளிவான தாக்கத்தை ஏற்படுத்தும் என்பதில் சந்தேகமில்லை. எனவே பிள்ளைகளுக்குக் கேள்வி கேட்கும் சந்தர்ப்பமளித்து அகமகிழ்ச்சியுடன் அவர்களின் கேள்விகளை முன்னோக்கும் ஆசிரியர் அவர்களின் உள்ளங்களில் ஆழமாகச் செல்லும் அதேவேளை, கேள்விகளுக்கு சந்தர்ப்பமளிக்காதவர்கள் அல்லது கத்துவதன் மூலம் அதனை எதிர்கொள்ளும் ஆசிரியரிடம் எதுவும் கேட்க யாரும் இருக்கமாட்டார்கள். சிறார்கள் எல்லா விடயங்களையும் அறிவார்கள் என்பது ஏற்றுக் கொள்ளும் விடயமல்ல என்பதில் நாமும் உடன்படுகின்றோம். என்றாலும் தமது வாழ்க்கையில் தாக்கத்தை ஏற்படுத்தும் சில கேள்விகளைக் கேட்கும் போது பயத்தை உணராமலிருப்பதும் முக்கியமானது. அதனை விட முக்கியம் பிள்ளைகள் தமது குடும்பத்தினருடன் பேசும் போது தைரியத்தையும் மன நிம்மதியையும் உணர வேண்டும்.

## சிறார்களிடம் அதிக கேள்விகள் காணப்படுவதற்கான காரணிகள் யாது?



சிறார்கள் அதிக கேள்விகள் கேட்பதற்கான பிரதான காரணங்களை பின்வருவனவற்றில் உள்ளடக்கலாம்.

1. மனவளர்ச்சியின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கான ஒரு வழியாக ஒன்றை அறிதல், கண்டுபிடித்தல் ஆகியவற்றின் மீதான சிறார்களின் ஆர்வம்.

2. தம்மைச் சூழவுள்ள விடயங்கள், நிகழ்வுகளைப் புரிந்து கொள்வதற்கான தேவை.


3. முன்னனுபவம் இல்லாமையினால் சிறார்களிடம் ஏற்படும் பதற்றமும் பயமும். உதாரணமாக: சில பிராணிகளைக் கண்டதும் அவை தாக்கிவிடாமல் அஞ்சுவார்கள், அதனைப் பற்றிய அச்சம் தீரும் வரை பல கேள்விகளைக் கேட்டுக் கொண்டே இருப்பார்கள்.

4. குழந்தைகளின் மொழித்திறனை வளர்த்தல், கேள்விக்கு மேல் கேள்வி கேட்பது விடையை எதிர்பார்த்து மாத்திரமல்ல. மொழியுடனுள்ள தமது ஈடுபாட்டையும் திறமையையும் காட்டுவதற்காகவும், சமூகவியல் பங்களிப்பைக் காட்டுவதற்காகவும் கூட இருக்கலாம்.

5. பெற்றோருக்கும் பிள்ளைகளுக்கும் இடையிலான தொடர்பு வலுப்படுவதற்கான ஒரு சந்தர்ப்பமாக இருக்கின்றது.

6. தன்னம்பிக்கை, பெற்றோர் மீதான நம்பிக்கையை வளர்க்கவும், சுய கௌரவத்தை வளர்ப்பதற்கும் வாய்ப்பளிக்கின்றது.

# சிறார்களிடமுள்ள கேள்விகளின் இயல்புநிலை.



சிறார்களின் கேள்விகளை சரிவரப் புரிந்து கொள்ள அறிவியல், மொழியியல் கேள்விகளுக்கும் உளவியல் கேள்விகளுக்கும் இடையில் வேறுபடுத்திப் பார்ப்பது அவசியமாகும். ஏனெனில் முதலாவது வகையில் பிள்ளை ஏதாவதொன்றை அறியவோ, அதைப் பற்றிக் கூறவோ முனைகின்றது. அதேவேளை இரண்டாவது வகையில் கேள்விக்கான விடை தான் பிரதான நோக்கமன்றி, மன அமைதி தான் அக்கேள்விக்கான பிரதான உந்துதலாக இருக்கின்றது. ஓர் அடிப்படை உண்மையை இங்கு வலியுறுத்துவது அவசியமாகும். நிச்சயமாக கேள்விகளுக்கு ஒரு உறுதியான நிலை உள்ளது. குழந்தையைக் கேள்வி கேட்கத் தூண்டிய நிலையினூடாகவே தவிர எமக்கு கேள்வியின் பெறுமதியை மதிப்பிடவோ, அல்லது அதன் அர்த்தத்தை வரையறுத்து விளங்கவோ முடியாது. கேள்விகளுக்கு தனிப்பட்ட ரீதியில் எவ்வித பெறுமதியுமில்லை. என்றாலும் அவனைச் சுற்றியுள்ள சூழ்நிலைகளின் இயல்பு நிலைகளிலிருந்து தான் அக்கேள்வியின் பெறுமதி மற்றும் முக்கியத்துவம் பெறப்படுகின்றது. சிறார்களின் கேள்விகளுக்கு முக்கியமான மூன்று உருவாக்கப் பணிகள் உள்ளன.

1. பிள்ளைகளிடம் உளவியல் சமநிலையைத் தோற்றுவித்தல். சிறார்களின் அநேகமான கேள்விகளின் சுபாவம் உளவியல் சார்ந்ததே.

2. கருத்தளவை சிந்தனை : ஏனெனில் பிள்ளை தனக்குக் கிடைக்கக் கூடிய தகவல்களை அடிப்படையாக வைத்து அல்லது இணைத்து புதிய அறிவைப் பெற முயற்சிக்கின்றது.

3. தன்னைச் சுற்றியுள்ள சூழல் மற்றும் வாழ்க்கையின் முக்கிய அம்சங்கள் ஆகியவற்றை அறிந்து கொள்ளுதல். பிள்ளை வாழும் சமூக, கலாச்சார வட்டத்திற்கு உள்ளடங்கும் நடத்தை மற்றும் நற்குணங்களை அறிவதும் மேற்கூறியவற்றில் உள்ளவையாகும்.

# சிறார்களிடம் காணப்படும் கேள்விகளின் வகைகள்.



சிறுவர்கள் முன்வைக்கும் கேள்விகளை வகைப்படுத்துவது சிறந்ததாகும். ஏனெனில் அக்கேள்விகளின் வகைகளுக்கேற்ப பதில்களும் வேறுபடுகின்றன. அவர்களிடம் காணப்படும் கேள்விகளைப் பின்வருமாறு வகைப்படுத்தலாம்.



1. மொழியியல் ரீதியான வினாக்கள். உதாரணம் : இப்பொருளுக்கு ஏன் இப்பெயர்கள் வைக்கப்பட்டுள்ளன? ஏன் நாம் பெயர்களை மாற்றக் கூடாது? ஏன் நாம் வேறொரு மொழியை உருவாக்கக் கூடாது? போன்ற வினாக்கள்.

2. இருப்பு ரீதியான வினாக்கள். இந்த வட்டத்தினுள் வரும் வினாக்கள் : நாம் எங்கிருந்து வந்தோம்? எங்கு செல்கிறோம்? குழந்தைகள் எவ்வாறு வருகின்றார்கள்? மரணம் என்றால் என்ன? பிரபஞ்சம் என்றால் என்ன? போன்ற வினாக்கள்.

3. மன முரண்டான வினாக்கள். வளர்ந்தோருக்கு அனுமதிக்கப் பட்டுள்ள வினாக்கள் ஏன் சிறார்களுக்கு அனுமதிக்கப் படுவதில்லை? என்ற சிந்தனையை அடிப்படையாக வைத்து வரும் வினாக்கள். இவை கேள்வி வடிவத்தில் வருவதை விட வளர்ந்தோரை பின்தொடர முனையும் வடிவில் தான் அதிகம் வருகின்றது.

4. பரீட்சார்த்தமான வினாக்கள். இது சிறார்கள் தமது குடும்பத்தவர்களின் திறமைகளைப் பரசோதிக்கவும், அவர்களிடமுள்ள பலவீனங்களை விமர்சிக்கவும் முன்வைக்கும் கேள்விகளாகும். இவை பெரும்பாலும் அச்சிறார்களின் நண்பர்களின் குடும்பத்தினருடன் ஒப்பிட்டுப் பார்ப்பதன் மூலம் வரும் கேள்விகளாகவும், அதுவும் உடலியல், பொருளியல் சார்ந்த கேள்விகளாகவும் தான் இருக்கும்.

5. குழந்தைத் தனமான பதற்றமான கேள்விகள். சிறார்கள் தம்மிடம் வளர்ந்து வரும் பதற்ற உணர்வுகளை ஈடு செய்யும் கேள்விகளை அதிகமாகக் கேட்கின்றனர். தமது பெற்றோர்களில் ஒருவர் காணாமல் போகும் போது அல்லது தம்மை வெறுப்பதன் வெளிப்பாடுகளை உணரும் போது தான் பிள்ளைகளிடம் இவ்வாறான பதட்டமான கேள்விகள் அடிக்கடி தோன்றுகின்றன.

**6.** உடல் ஆய்வுக் கேள்விகள். ஆண், பெண் இருபாலாருக்கும் இடையிலான வேறுபாடுகள் பற்றிய கேள்விகளே இவ்வகையில் முன்னிலை பெறுகின்றன.

இவ்வகைப்படுத்தலானது குடும்பத்தினர் தமது பிள்ளைகளால் முன்வைக்கப்படும் கேள்விகளைப் புரிந்து கொள்ளத் துணை புரிகின்றது. அவர்கள் வெறுமனே கேள்விகள் என்பதற்காகக் கேட்பதில்லை. மாறாக புரிந்து கொள்ளும் முயற்சியின் உந்துதலால் தான் கேட்கின்றார்கள்.

### சிறார்களின் கேள்விகளை ஏன் பெற்றோர் புறக்கணிக்கின்றார்கள்?

றக்கணிப்பதும் சடைவடைவதும் அவற்றிற்கான விடை, கேள்வியின் முக்கியத்துவம் ஆகியவற்றை அறியாமலிருப்பதும், அதன் உளவியல், அறிவியல் பங்களிப்பை அறியாமலிருப்பதும் மாத்திரமல்ல காரணம். வேறுசில காரணங்களுக்காகவும் புறக்கணிக்கின்றனர். அவற்றுள் சில :

**1.** சிறார்களின் கேள்வியை வித்தியாசமானதாக, அற்பமானதாக, அவசியமற்றதாக பெரியோர்கள் உணர்வதால் அதற்கு முக்கியத்துவம் அளிக்காமல், கவனிக்காமல் இருக்க வைக்கின்றது. இதன் மூலம், எளிமையான மற்றும் தெளிவான அவர்களின் சொந்த வழியில் சிந்திக்கும் சிறுவர்களின் உரிமைகளை மீறும் பொறியில் பெரியோர் வீழ்ந்து விடுகின்றனர். அந்த அத்துமீறல் பெரியோர் கடைபிடிக்கும் அறிவியல் ஆதிக்கத்தின் தோற்றங்களில் ஒன்றை பிரதிபலிக்கின்றது. ஏதாவதொரு சூழ்நிலையில் அவர்கள் இழக்கும் உளவியல் சமநிலையை மீட்டெடுத்தல் என்பது தான் கேள்வியிலுள்ள உளவியல் குறிக்கோள் என்பது ஒரு புறமிருக்க, தன்னைச் சுற்றியுள்ள உலகத்தை அறிய அல்லது கண்டுபிடிப்பதற்கான உண்மையான ஆசையில் தான் சிறார்கள் எளிமையான அப்பாவித்தனமான கேள்விகளைக் கூட கேட்கிறார்கள் என்பதையே பெரியோர் மறந்து விடுகின்றனர்.

**2.** ஒரு குறிப்பிட்ட வயதில் மட்டுமே அனுமதிக்கப்படுகின்ற ஒரு குறிப்பிட்ட கலாச்சாரக் கட்டமைப்பிற்குள் சமூக அல்லது நெறிமுறைத் தடைகளாக இருக்கும் ஒன்றுடன் தொடர்புபட்டதாக சிறார்களின் கேள்வி அமையும் போது அதற்கு பதில் சொல்வதை பெரியோர் சிரமமாக உணர்தல். எனவே சிறார்களது கேள்விகளின் சிரமம் மற்றும் சங்கடம் பெரியோரைத் தடுமாற்றத்தில் வீழ்த்தி விடுகின்றன. இதனால் இது போன்ற கேள்விகளுக்கு நேர்த்தியான பதிலை வழங்க பெரியோர் தம்மைத் தயார்படுத்திக் கொள்வது அவசியமாகும்.

**3.** பெரியோர்கள் கேள்விகளைப் புறக்கணிப்பதற்கான மற்றுமொரு காரணியாக சிறார்கள் தொடர்ச்சியாக அதிகமான கேள்விகளைக் கேட்டுக் கொண்டிருப்பதும் சிலவேளை அமைந்து விடுகின்றது. குழந்தைகளின் கேள்விகளது முக்கியத்துவத்தை உளவியல் ரீதியாக பெரியோர்கள் சிந்தித்திருந்தால் அவர்களிடம் வேறுபட்ட நிலைப்பாடு இருந்திருக்கும். அது தான் அவர்கள் தொடர்ந்து கேள்விகள் கேட்பதற்காக ஊக்குவித்தலாகும். ஆனால் (பெரியோர்கள் அடிக்கடி) கேட்கும் குரலாகவே அதனை சிந்திக்கிறார்கள்.

**4.** குழந்தைகளின் கேள்விகளுக்கு பெரியோர்கள் சரியான கவனம் செலுத்தாமலிருப்பதற்கான காரணங்களில் ஒன்று தான் இந்தக் கேள்விகள் நேரடியாக வராமல் மறைமுகமாக வருவதாகும்.

**5.** குழந்தைகள் எதிர்பார்க்கும் பதில் பெற்றோர்களுக்குத் தெரியாமலிருப்பதும் அவர்கள் பதிலளிக்காமல் விரண்டோடுவதற்கான காரணமாக சிலநேரம் அமைந்து விடுகின்றது. இவ்வாறான கேள்விகளுக்கான பதில்களைத் தேடி பிள்ளைகளுக்கு அமானிதமாகவும், உண்மையுடனும் கூறுவது பெற்றோருக்குக் கடமையாகும்.

**6.** சிறார்களின் கேள்விகள் தமது அறிவு மட்டத்தை மீறி, உயர்ந்த கருத்தியல்கள் கொண்ட சிரமமான பதில்களை வேண்டி நிற்கக் கூடியதாக இருத்தல். இந்தக் கேள்வி கேட்குமளவு பிள்ளை எவ்வாறு வந்தது என்பதை பெற்றோர் சிந்திக்க ஆரம்பித்து, அதற்கு பதிலளிக்காமல் புறக்கணித்து விடுகின்றனர்.

### சிறார்களின் கேள்விகளை பெற்றோர் எவ்வாறு எதிர்கொள்வது?

குழந்தைகளின் கேள்விகளுக்கு சரியான பதில்களை வழங்குவது தான் பெற்றோர்களது கடமையாகும். அதேபோன்று ஈமானிய விடயங்களில் சிறார்களுடைய கேள்விகள் குறித்து உரையாடலுக்கான வழிகளை ஏற்படுத்திக் கொடுப்பதும் அவசியமாகும். மார்க்கம் சம்பந்தமான அவர்களிடமுள்ள சிந்தனைகளைப் பேசவும் துணை புரிய வேண்டும். அளவு கடந்து செல்லலோ, உதாசீனம் செய்தலோ இன்றி மார்க்கத்தின் சமநிலையைப் பேணும் விதத்தில் அவர்களிடம் மன அமைதி, நம்பிக்கை மற்றும் மார்க்கத்தைப் பற்றிய சரியான புரிதல் ஆகியவற்றை ஏற்படுத்துவதற்காகவே இவ்வாறான சூழலை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். குழந்தைகளின் அனைத்து மார்க்கக் கேள்விகளுக்குமான பதில்களைத் தெரிந்திருக்க வேண்டுமென்ற அவசியம் பெற்றோருக்கில்லை. என்றாலும் குழந்தைகள் அல்லாஹ்வைப் பற்றிய வலுவான நம்பிக்கையுடன் வளர்வதற்காக ஈமானுடைய அம்சங்களைத் தெளிவுபடுத்துவது அவசியமாகும். குடும்பத்தில் மூத்த பிள்ளையை சிறார்களின் கேள்விகளைத் தொகுத்தெடுக்க நியமித்தால் எவ்வளவு அழகாக இருக்கும்? பெரும்பாலும் அவன் இப்பொறுப்பை வரவேற்பான். குறிப்பாக அதற்குக் கவனமும் ஊக்குவிப்பும் கிடைக்கும் போது இன்னும் உற்சாகமடைவான். அதேபோன்று சிலவேளை அவர்களுக்கு அது சுவாரஸ்யமாகவும் இருக்கும். இதனால் ஒருபுறம் மூத்த பிள்ளைகளின் மனதில் பொதுவாக கேள்வியின் மதிப்பை உணர்த்தலாம். எனவே அவர்களும் கேட்பார்கள். அதேபோன்று எதிர்காலத்தில் இவர்கள் பெற்றோராக மாறும் போது தமது பிள்ளைகளது கேள்விகளுக்கு முக்கியத்துவம் கொடுப்பதையும் உணர்த்தலாம். மறுபுறம், பதில் தேடத் துணை புரியக்கூடிய சில கேள்விகள் எம்மிடம் ஒன்று சேர்கின்றன. இவர்களுக்குப் பின்னால் வரும் சகோதர, சகோதரிகளுடைய கேள்விகள் எவ்வாறு அமையும் என்பதை எதிர்பார்க்கவும் அதற்குத் தயாராகவும் இவை துணை புரிகின்றன. குழந்தையுடைய முன்னைய கேள்விகளில் ஒன்றிற்கு நாம் துணிந்து பதில் சொல்லும் போது குழந்தை எவ்வளவு சந்தோசப்படுகின்றது? குழந்தையின் கேள்விகளுக்குத் திறமையான பதில்கள் கூறுவதில் கவனமெடுப்பதானது குழந்தையிலும் எம்முடனான அவனுடைய தொடர்பிலும் பாரிய தாக்கத்தை ஏற்படுத்துகின்றது. அத்துடன் சந்தேகத்திற்கிடமான

மூலங்களிலிருந்து தகவல்களைப் பெறுவதற்குப் பதிலாக, குறிப்பாக பருவ வயதை எட்டும் காலப் பகுதியில் பெற்றோரைக் குழந்தையின் அறிவின் முதல் ஆதாரமாகவும் வரும் ஆண்டுகளில் நம்பகமானவர்களாகவும் ஆக்குகின்றது.

இங்கே பெற்றோர் அவசியம் கவனிக்க வேண்டிய ஒரு பகுதியுள்ளது. அது தான் குழந்தைகளின் இரு வகையான கேள்விகளுக்கு மத்தியில் வேறுபடுத்த வேண்டிய அவசியமாகும்.

01. குழந்தை மீண்டும் மீண்டும் கேட்கும் என நாம் எதிர்பார்க்கும் கேள்விகள். சில வேளை தனது குடும்பத்திலேயே பலரிடத்தில் அதே கேள்வியைக் கேட்கும். அதிலிருந்து மேலும் சில கேள்விகள் கூட தோன்றலாம்.

02. அவ்வப்போது எதேச்சையாகக் கேட்கும் கேள்விகள். நாம் குழந்தையுடன் வேறு பேச்சுக்களில் ஈடுபட்டால் அக்கேள்விகளை மறந்துவிடும்.

இவற்றில் முதல் வகைக் கேள்விகளை அலட்சியப்படுத்துவது மதிநுட்பமன்று. எனவே அதற்கான விடையளிக்க முயற்சிக்க வேண்டும். அல்லது நாம் விடையைத் தேட வேண்டும். முடியாவிடின் சிறப்பாக தெளிவுபடுத்தக் கூடிய ஒருவரைத் தேட வேண்டும். அத்துடன் இதில் முக்கியமான பயிற்றுவிப்பு முறையும் உள்ளது. அவ்வப்போது கேட்கும் கேள்விகளுக்கு முக்கியத்துவம் அளிக்காமலிருப்பதில் தவறேதும் இல்லை. குறிப்பாக அதற்கான விடையைக் குழந்தையால் சிந்திக்க முடியாவிட்டால் அதனை அலட்சியப்படுத்துவது நல்லது.



# சிறார்களின் வினாக்களைக் கையாளும் அடிப்படைகள்.



சிறார்களின் வினாக்களுக்குப் பதிலளிக்கும் போது பெற்றோர் கவனமெடுக்க வேண்டிய சில நெறிமுறைகளும் அடிப்படைக் கொள்கைகளும் உள்ளன. அவை வருமாறு :

1. மரியாதைக் கொள்கை : தமது பிள்ளைகளின் கேள்விகளுக்கு செவிசாய்க்கும் பெற்றோர் அப்பிள்ளைக்குத் தனது கவலைகளில் பங்கெடுப்பதாகவும், அதனை மதிப்பதாகவும் உணர்த்துகின்றனர். இந்தப் பங்களிப்பு பிள்ளையிடம் உளவியல் சமநிலையையும் மன அமைதியையும் மீட்டெடுக்கும். விரைவில் தன்னம்பிக்கையின் தொனி, கேள்விகளை முன்வைப்பதில் நுணுக்கம், உரையாடலின் போக்கில் தர்க்க வரிசை ஆகியவற்றை அப்பிள்ளையிடத்தில் உணர்வோம்.

2. நம்பிக்கை மற்றும் பாதுகாப்புக் கொள்கை : குழந்தைகளுக்குத் தெரிந்த, மற்றும் பரீட்சியமான சொற்களஞ்சியம் மூலம் அவர்களுக்கு அளிக்கும் பதில்களில் நுணுக்கத்தைக் கடைபிடிக்க பெற்றோர் முயற்சிக்க வேண்டும். அத்துடன் இத்தகவல்களை அதன் சரியான அறிவியல் வட்டத்திற்குள் எளிமைப்படுத்திக் கொடுக்க வேண்டும். உண்மையான பதில்கள் இறுதியில் ஸ்திரத்தன்மை, நம்பிக்கை மற்றும் உளவியல் பாதுகாப்பு என்பவை உருவாகுவதையே வேண்டி நிற்கின்றது.

3. குழந்தைகளின் உந்துதல்களை நிவர்த்தி செய்யும் கொள்கை : அவை அவர்கள் வாழும் சூழ்நிலைகளிலிருந்து எழும் உந்துதல்கள். உதாரணம் : குடும்பத்தில் ஒரு புதிய குழந்தைப் பிறப்பால் எரிச்சலுற்று பதற்றத்தை உணரும் குழந்தை, இந்தப் பிள்ளைகளெல்லாம் எங்கிருந்து வருகின்றன? எனக் கேட்கும். அறிவார்ந்த பதிலின் மூலமாக மாத்திரம் இக்குழந்தையின் பிரச்சினையைத் தீர்க்க முடியாது. மாறாக அக்குழந்தை இந்தக் கேள்வியை கேட்கத் தூண்டிய உண்மையான காரணத்தைக் கண்டறிந்து அதில் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும்.

சிறார்களுக்கு பெரியவர்கள் செய்யக் கூடிய மிகச் சிறந்த சேவை அவர்களது அறிவை ஒளிரச் செய்வதாகும். கதைகள், சம்பவங்கள் மற்றும் அறிவியல் தகவல்கள் மூலம் மாத்திரம் சாத்தியமாகாது. மாறாக, ஒன்றைக் கூர்ந்து அவதானிக்கப் பயிற்சியளித்தல், முன்மொழிவுகளை முன்வைத்தல், வெளிப்படையான விடயங்களுடன் மாத்திரம் போதுமாக்கிக் கொள்ளாமலிருக்கப் பழக்கப்படுத்துதல், இந்நிகழ்வுகளுக்கு அப்பால் அவர்களுக்குத் தோன்றுவதைப் பற்றி சிந்திக்கத் தூண்டுதல் ஆகியவற்றின் மூலமே சாத்தியமாகின்றது. அத்துடன் நேர்மறையான தொடர்பு, ஆக்கபூர்வமான விவாதம், அர்த்தமுள்ள உரையாடல், பரஸ்பர கருத்து ஆகியனவும் அவசியமாகும்.

மேலும் குழந்தைகளிடம் சிந்தனையைத் தூண்டும் கேள்விகளைக் கேட்பதும் பெரியார்களுக்கு அவசியமாகும்.

கேள்விகளுக்குப் பதிலளிப்பதை இன்னும் விரிவாகப் பயன்படுத்தலாம். குடும்ப ஒன்று கூடல்களின் போது இக்கேள்விகளை முன்வைக்குமாறு பெற்றோர் குழந்தைகளிடம் வேண்டிக் கொள்ள முடியும். அக்கேள்வி ஆழமற்ற, உணர்வுத்திறனற்ற சாதாரண கேள்வியாக இருக்கும் பட்சத்தில் சபையிலுள்ள அனைவரும் பதிலளிப்பதில் பங்கெடுக்க வாய்ப்பளிக்கலாம். எனினும் இது போன்ற சந்தர்ப்பங்களின் கேள்வியின் அப்பாவித்தனத்தால் குழந்தையின் மூத்த சகோதரர்களுடைய கேலிக்கு இலக்காகாமல் இருப்பது மிக முக்கியமாகும். இது போன்று நிகழும் போது குழந்தையின் துணிவைப் பாராட்டி, கேள்விகள் கேட்பதில் எமக்குள்ள தேவையையும் சுட்டிக்காட்டி பெற்றோர் குழந்தையின் பக்கம் தான் நிற்க வேண்டும். “அறிவில் குறைவான அளவு தான் உங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது” (அல்குர்ஆன் - 17:85) என்ற வசனத்தையும் நினைவூட்ட வேண்டும். கூட்டு பதிலின் மூலம் பல குறிக்கோள்களை அடையலாம். அதன் நுழைவாயில் சிறார்களின் கேள்விகளாகும்.



# உரையாடல் மூலம் கற்பித்தல்.



கேள்வி – பதில், மற்றும் விவாதங்களின் அடிப்படையில் அமையும் உரையாடல் முறை தான் குழந்தைகளுக்குக் கற்பிப்பதற்கான உகந்த வழியாகும். ஏனெனில் அது தான் நாவை செம்மைப்படுத்த துணை புரிவதுடன், கற்பித்தல் திறனை வளர்க்கவும் செயல்படுகின்றது. எனவே உரையாடல் தான் கல்வித்துறையை நெருக்கமாகக் கொண்டு வந்து அதன் இலக்குகளை அடைய வைக்கிறது. உரையாடலின் போது சிறுவர்கள் கண்ணியத்தை உணர்வது அவசியமாகும். இது சிறுவர்கள் மற்றும் அவர்களது உணர்வுகளை கவலை, அச்சங்கள், மற்றும் அடக்குமுறை, சிக்கல்கள் போன்ற உளவியல் மோதல்களை விட்டும் விடுவிக்க வழிவகுக்கின்றது. உரையாடலின் போது குழந்தை மன அமைதியை உணர்ந்தால் தனது உள்ளத்தில் உள்ள சிரமங்கள், மோதல்கள் அனைத்தும் ஒழிந்துவிடும். இரு தரப்பினரும் பிரச்சினைகளுக்கான காரணிகளை கண்டறிந்து, இருவரும் வெளிப்படையாகப் பேசி, குழந்தை தனது உள்ளத்திலுள்ள அனைத்தையும் வெளிப்படுத்தினால் தீர்வு இலகுவாகவும், வெற்றிகரமாகவும் இருக்கும்.

குழந்தைக்கும் பெற்றோருக்குமிடையிலான உரையாடல் குடும்பத்தில் பல ஆதாயங்களைக் கொண்டு வருகின்றது. அவற்றுள் சில :

- அறிமுகம் : குடும்பத்தின் பிற உறுப்பினர்களுடன் குழந்தை நெருக்கமாக இருக்கும்.

- பரீட்சியம் : உரையாடல் குடும்ப அங்கத்தவர்கள் மத்தியில் பரீட்சியத்தை அதிகரித்து, ஒருவருக்கொருவர் நேசத்துடனும் நெருக்கத்துடனும் இருக்க உதவும்.

- சாந்த குணம் : உரையாடலின் மூலம் நாம் அதிகாரபூர்வமான சூழலை மாத்திரம் எதிர்பார்ப்பதில்லை. மாறாக உரையாடலுக்கான உண்மையான பொருள் இனிமையான பேச்சுவார்த்தை, சாந்தமான சூழல் மூலமாகவே உருவாகின்றது.

மேற்கூறியவற்றிலிருந்து உரையாடல் மூலமான கற்பித்தல் பல விடயங்களால் தனித்து நிற்கின்றது என்பதைக் காண்கிறோம். அவற்றுள் சில :

1. இது குழந்தைக்கு சிந்தனைச் சுதந்திரத்தையும், உண்மைகளைத் தானாகவே கண்டறியும் சந்தர்ப்பத்தையும் வழங்குகின்றது. இது ஆக்கத்திறனுக்கும் ஆளுமை வளர்ச்சிக்கும் தூண்டுதலாக இருக்கின்றது.

2. இது சிரமமற்ற எளிய முறையாகும். ஆறுதலாகவும், கூச்ச சுபாவமின்றியும் குழந்தை உரையாடலை மேற்கொள்கின்றது.

3. இது சிறார்களின் உள்ளங்களில் மகிழ்ச்சியையும், சுய உணர்வையும் நுழைவிக்கின்றது. மற்றவர்களுடைய பேச்சுக்களுக்கு செவிசாய்ப்பதையும் போதிக்கின்றது.

4. இது தேடல் வாய்ப்புக்களையும், சுயாதீன சிந்தனையையும் வழங்குகின்றது. விடயங்களை குழந்தை வெவ்வேறு கோணங்களில் பார்க்கின்றது. அத்துடன் இவ் உரையாடல் குழந்தையிடம் தர்க்க ரீதியான சிந்தனையையும் வளர்க்கின்றது.

5. இது குழந்தையின் கவனத்தைத் தட்டியெழுப்பி, அக்கறையின்மை, கவனக்குறைவு ஆகியவற்றை விட்டும் தூரப்படுத்துகின்றது. மேலும் தொடர்ந்து செயற்படவும் தூண்டுகின்றது.

## உரையாடல் கேள்விகளின் வடிவமைப்பு:



சிறார்களிடம் கேள்வி கேட்பதற்கான பல வடிவமைப்புக்கள் உள்ளன. அவற்றுள் சில வருமாறு:

- "என்ன நடக்கிறது?" : இந்தக் கேள்வியமைப்பு குழந்தை தன்னைச் சுற்றி நடப்பவற்றை ஆராயத் தூண்டுகின்றது. தான் காண்பவற்றை நேரடியாக வர்ணிக்க இது துணைபுரிகின்றது.

- "என்ன வேண்டும்?" : இது குழந்தை தனது தேவைகளை சரியாகத் தீர்மானிக்கத் துணைபுரியும் கேள்வியமைப்பாகும்.

- "இதனை எவ்வாறு செய்வாய்?" : இது சுயாதீனமாக சிந்திக்கத் துணைபுரிவதுடன், பதிலைக் கண்டுபிடிக்க அவனது கற்பனையைத் தூண்டுகின்றது.

- "ஏன் இது நிகழ்கிறது?" : இது வெளிப்படையான விடயங்களுக்கு அப்பால் சென்று அவற்றிற்கான காரணகர்த்தாக்களைத் தேட துணைபுரிகின்றது. பலதரப்பட்ட விடயங்களுக்கு மத்தியிலுள்ள தொடர்புகளை பகுப்பாய்வு செய்து, ஆராயத் துவங்குகின்றான்.

- "இவ்வாறு நிகழ்ந்தால் நாம் என்ன செய்வது?" : இது விடயங்களை மறுசிந்தனை செய்து பல கோணங்களில் பார்க்க துணைபுரிகின்றது.

சிறார்களிடம் கேட்க முடியுமான கேள்விகள் சந்தர்ப்ப சூழ்நிலைகளுக்கு ஏற்றவாறு மாறுபடும். என்றாலும் சிறார்களுடனான உரையாடல் மூலம் கற்பித்தலில் நல்ல பலனைத் தரக்கூடிய, சிறந்த கேள்விகளுக்குரிய பிரதான பண்புகள் வருமாறு :

1. கேள்வி இயன்றளவு சுருக்கமானதாக இருத்தல் வேண்டும்.
2. கேள்வி தெளிவாகவும் ஒரே விடயம் தொடர்பாகவும் இருத்தல் வேண்டும்.
3. கேள்வி குழந்தையின் வயது, வாழும் இடம், காலம் மற்றும் சூழலுக்கு உகந்ததாக இருத்தல் வேண்டும்.
4. கேள்வி சரி, பிழை தீர்மானிப்பதாக இருத்தல் கூடாது. மாறாக குழந்தையின் சிந்தனையைத் தூண்டி அதன் எல்லைகளை விரிவுபடுத்துவதாகத் தான் இருக்க வேண்டும். பதிலை கற்பனை செய்வதற்கான வாய்ப்பு வழங்கப்படல் வேண்டும்.



# சிறுவர்களின் வினாக்களுக்கு பதில் அளிக்கும் முறைகள்



கேள்விகளுடைய வகைகள், வடிவமைப்புக்கள் பற்றி மேலே பேசப்பட்டது. இங்கே பதில்களைப் பற்றிப் பேசுவோம். ஏனெனில் கேள்விகள் முன்வைக்கப்படும் காலம், இடம், சூழல்களை வைத்து அதற்கு பதிலளிக்கும் முறைகளும் பல வகைப்படும். அவற்றுள் பிரபலமான முறைகள் சில :



1. நேரடியான வாய்மூல பதில்கள் : இந்த முறைதான் அதிகமாகப் பயன்பாட்டிலுள்ளது. குழந்தை கேள்வி கேட்கும் போது குடும்பத்தினர் நேரடியாக வாய்மூலம் பதிலளிக்கின்றனர். பெரும்பாலும் இந்த பதில்கள் வேகமானதாகவும் சுருக்கமானதாகவும் இருக்கும்.

2. சிறு சம்பவங்களினூடாக பதிலளித்தல் : இது பதிலளிப்பதில் மறைமுகமான முறையாகும். முன்வைக்கப்பட்ட கேள்வியின் இயல்பு நிலைக்கமைவாக சம்பவம் இருக்க வேண்டும். குழந்தைகள் பொதுவாக இந்த முறைமையை விரும்புகின்றனர். மிக ஆர்வத்துடன் கேட்கின்றனர்.

3. உருவங்கள் மூலம் பதிலளித்தல் : உருவப்படங்கள் அல்லது புகைப்படங்கள் மூலம் தெளிவுபடுத்தி பதிலளிக்க வேண்டிய சில கேள்விகளையும் குழந்தை கேட்கின்றது. உதாரணமாக அறிவியல் கேள்விகளைக் குறிப்பிடலாம். இச்சந்தர்ப்பங்களில் புகைப்படங்கள் தான் பிரதான மூலாதாரங்களாக பங்கு வகிக்கின்றது. குறிப்பாக புகைப்படம் பல நிறங்கள் கொண்டதாக, கவர்ந்திழுக்கக் கூடியதாக இருக்கும் போது இன்னும் பயனளிக்கும்.

4. நோட்டமிடுவதன் மூலம் பதிலளித்தல் : சில வேளை குழந்தைகளுக்கு செயல் முறை ரீதியில் பதிலளிக்கத் தேவையான கேள்விகளைக் கேட்பார்கள். இச்சந்தர்ப்பங்களில் அவர்களை பதிலளிக்கப் பொருத்தமான இடத்திற்கு அழைத்துச் சென்று செயல் முறை விடயங்களை கவனித்து பதில்களைக் கண்டுபிடிக்க வைக்க வேண்டும். உதாரணமாக சுற்றுச் சூழலில் உள்ள உயிரினங்களைப் பற்றியும், அதன் வாழ்க்கை முறை, உணவு முறை பற்றிக் கேட்கும் போது உயிரினங்கள் வாழும் இடங்களுக்கு அழைத்துச் சென்று நோட்டமிட வைக்க முடியும்.

# பதிலளிக்கும் போது கவனிக்க வேண்டிய பொது வழிகாட்டல்கள் சில :



**1.** கலந்துரையாடல், கேள்வி, தெளிவு கேட்டல் போன்ற முறைகளைப் பயன்படுத்தி பதிலில் திருப்தியடைய வைக்க அக்கறை கொள்வதுடன் பதிலை சொல்லிக் கொடுப்பதில் மாத்திரம் சார்ந்திருக்கக் கூடாது. பதில் கூறி முடிந்ததும் அப்பதிலில் குழந்தை திருப்தியடைந்து விட்டதா என்பதை உறுதிப்படுத்திக் கொள்வது அவசியமாகும்.

**2.** அளிக்கும் பதிலில் உண்மையாளராக இருக்க வேண்டும். சங்கடத்திலிருந்து விரண்டோடுவதற்காக குழந்தையிடம் பொய் கூறக் கூடாது. கேள்வி என்னவாக இருந்தாலும் தவறான தகவல்களை வழங்காமலிருப்பதிலும் அக்கறை செலுத்த வேண்டும். சரியான பதிலிலும் அதன் உண்மைத் தன்மையிலும் தான் உமது குழந்தை உம் மீது வைத்திருக்கும் நம்பிக்கை தங்கியுள்ளது.

**3.** குழந்தை இலகுவாக விளங்கிக் கொள்ள, அறிவுக்குப் பொருந்தும் வகையில் எளிமையான முறையில் பதிலளிக்க முயற்சிக்க வேண்டும். குழந்தையின் மனதைக் குழப்பும் வகையில் தெளிவில்லாத புதிர்நிலை பதில்களைத் தவிர்ந்து கொள்ள வேண்டும். குழந்தை இன்னும் சிறுபிள்ளை. சரியாக விளங்கிக் கொள்ள முடியாது போன்ற காரணங்களை வைத்து முழுமையற்ற தகவல்களையும் வழங்கக் கூடாது. ஏனெனில் இந்தத் தகவல்கள் குழந்தையின் மனதில் பதிந்து விடுகின்றது.

**4.** உமது குழந்தையை அறிவீனர்களைப் போன்று நடத்த வேண்டாம். அவனுக்கு சரியான முறையில் தெளிவுபடுத்தினால் நீர் விரும்பும் தகவலைப் புரிந்து கொள்வான். கேள்வி கேட்டவுடன் பொருள் சிதைவின்றி நேரடியாகவே பதில் சொல்ல முயற்சிக்க வேண்டும். குழந்தை ஏடாகூடமான வேறு சிக்கல்களுக்குள் பிரவேசிக்காமலிருக்க உடனடியாக பதில்களைக் கூறிவிட வேண்டும்.

**5.** குழந்தை கேள்வி கேட்கும் போது அது எவ்வாறான கேள்வியாக இருந்தாலும் அவனைக் கண்டிக்கவோ, பரிகாசிக்கவோ, விரட்டவோ கூடாது. மாறாக எல்லாவிதமான கேள்விகளுக்கும் எப்போதும் நீர் பதிலளிக்கத் தயார் என்பதை குழந்தைக்கு உணர்த்தி வையுங்கள். கேள்வி கேட்கும் போது குழந்தையைப் பரிகாசிப்பதானது தாழ்வு மனப்பான்மை, தன்னம்பிக்கையற்ற நிலை ஆகியவற்றை குழந்தைக்கு உணர வைத்து, கேட்டல் விருப்பத்தை விட்டும் அவனை தூரப்படுத்தி விடும்.

6. படைத்தவனைப் பற்றிய சிறார்களின் கேள்வியை பார்த்தோ, அவனது இருப்பை கிரகிக்கும் சக்தி அவர்களிடம் இல்லை என்பதை பார்த்தோ பதற்றப்படக் கூடாது. பதிலளிக்கப் பின்வாங்கவும் வேண்டாம். ஏனெனில் இதற்கான விடைகளை அவர்கள் வேறு மூலாதாரங்களில் ஆராய வழிவகுக்கும்.

7. கேள்விக்கான விடையைத் தேட அவகாசம் கேட்பதற்குத் தயங்கக் கூடாது. ஏனெனில் கல்வியைத் தேடும் ஒருவனாக உம்மைக் காட்டுவது மடையனாக இருந்து கொண்டு அறிவாளியாகக் காட்ட முனைவதை விட மேலானது. குழந்தையிடம் “சரியான பதிலைத் தேடித்தரும் வரை காத்திருங்கள்” என்று கூறுவதொன்றும் ஒரு குறையல்ல.

8. சிறார்களின் கேள்விகளைப் புறக்கணிக்காமல், அலட்சியப் படுத்தாமல் கவனமெடுத்து, செவிதாழ்த்தி ஏற்க வேண்டும். குழந்தையை அரவணைத்து, கேள்விகளை முழுமையாக உள்வாங்கி, உளவியல் மற்றும் யதார்த்த ரீதியில் அவனைப் பராமரிப்பதானது புரிவதற்குச் சிரமமான விடயங்களில் உமது விளக்கத்தை அவன் ஏற்றுக் கொள்ளத் துணை புரிகின்றது.

9. நீங்கள் உண்மையிலேயே வேலைப்பளுவாக இருந்தால் குழந்தைக்கு அவனது கேள்விகளுக்குப் பதிலளிப்பதற்கான உகந்த நேரம் இதுவல்ல என்பதை மென்மையாக எடுத்துச் சொல்ல வேண்டும். வேலை முடிந்தவுடன் கேள்விகளுக்கான பதிலைத் தெளிவுபடுத்த முயற்சிக்க வேண்டும்.

10. அவசியமற்ற, விரிவான விளக்கங்களைத் தவிர்ந்து கொள்ளுங்கள். 6 வயது குழந்தைக்கு வழங்கும் பதில் 10 வயது குழந்தைக்கு வழங்கப்படும் பதிலைக்கான சுருக்கமாக இருத்தல் வேண்டும். இது மறைவான விடயங்கள் மற்றும் சங்கடமான கேள்விகள் போன்ற ஆதாரங்கள் முன்வைத்து சற்று விரிவாக பதில் வழங்கப்பட வேண்டிய கேள்விகளில் தான் இந்த வேறுபாடு இருக்க வேண்டும். மற்றும் சில கேள்விகள் உள்ளன. அவற்றிற்கான பதில்கள் வரையறுக்கப்பட்டு சகல வயதுக் குழந்தைகளுக்கும் வழங்கப்படும்.

11. முடியுமான அளவு குழந்தை புரிந்து கொள்கின்ற நடைமுறை யதார்த்தங்களுடன் பதில்களைத் தொடர்புபடுத்த வேண்டும். சிறுபிராயத்தில் புரிந்து கொள்ள சிரமமான மேலோட்டமான விடயங்களைத் தவிர்ந்து கொள்ள வேண்டும். மேலும் பதில் அர்த்தமுள்ளதாக அமைய முடியுமானளவு பதில்களை உறுதிப்படுத்தும் ஆதாரங்களையும் முன்வைக்க வேண்டும்.

12. குழந்தைக்கு வழங்கும் தகவல்களில் பெற்றோர் தமக்கிடையே முரண்படாமல் ஒருமித்த கருத்தில் இருப்பது அவசியமாகும்.

13. குழந்தை கேள்வி கேட்கும் போது மறு கேள்வி அதனைத் தட்டிவிடக் கூடாது. உதாரணமாக “இதன் மூலம் என்ன கேட்க வருகிறாய்?” எனக் கேட்டல். இது

குழந்தையிடம் ஏமாற்றத்தை உணர வைக்கும். ஏனெனில் தந்தையிடம் சரியான முறையில் கேள்வியை முன்வைக்க முடியவில்லையே என்று உணர்கின்றது. தன்னுடைய பேச்சை எவ்வித விளக்கம், வியாக்கியானமின்றி பெற்றோர் விளங்கிக் கொள்வார்கள் என்றே குழந்தை நினைத்துக் கொண்டிருக்கின்றது. பெற்றோர் கேள்வியின் நோக்கத்தை உறுதிப்படுத்திக் கொள்ள விரும்பினால் “நீங்கள் இதனைத் தானே கேட்கின்றீர்?” போன்ற தீர்மானமான சொற்றொடர்களைப் பயன்படுத்துவது சிறந்தது.

**14.** குறிப்பிட்ட ஒரு கேள்விக்குப் பதிலளிக்கும் போது பெற்றோர் தனித்துச் செயல்படக் கூடாது. பெற்றோரின் பதிலுக்கு மாற்றமாக குழந்தை வேறு வழிகள் மூலம் பதிலைக் கூறும் போது பெற்றோரைப் பற்றிய நம்பிக்கை ஏற்படும் வகையில் இலகுவாகவும் எளிமையாகவும் சரியான விடையைப் புரியவைக்க வேண்டும். மாறாக நாம் சொல்வது தான் சரியென தனித்துச் செயல்படக் கூடாது.

**15.** பாடம் போதிக்கும் தொணியிலன்றி, கலந்துரையாடல் தொணியில் பதிலை அமைக்க முயற்சியுங்கள். அர்த்தத்தைப் புரிய வைக்கவும், குழந்தையின் மனதில் பதிய வைக்கவும் உதாரணங்கள், சம்பவங்கள், புகைப்படக் களஞ்சியங்களை அதிகம் பயன்படுத்த வேண்டும். அனிமேஷன் விளையாட்டுக்கள், நடிப்பு, வரைதல், அவதானித்தல், மேலும் பாடுதல், கருத்துதிர்ப்பு, சிந்தனா ரீதியான விளையாட்டுக்கள், கவிதை, வெட்டி ஒட்டுதல் முறை, புகைப்படம் எடுத்தல் போன்ற முறைகளையும் கையாளலாம். வேறுபட்ட பல முறைகளைக் கையாள்வதானது குழந்தையின் சிந்தனைத் திறனை மேம்படுத்தி, தகவல்களை பதிய வைக்கும்.

**16.** சில வினாக்களுக்கு ஒரே தடவையில் முழு பதிலும் வழங்கப் படமாட்டாது. மாறாக படிப்படியாகத் தான் வழங்க வேண்டும். மேலதிக விளக்கம் கேட்கும் போது குழந்தையின் வயது, புரிந்து கொள்ளும் திறன், கேள்வியின் வகை என்பவற்றுக்கு ஏற்ப பதில்களையும் அதிகரிக்க வேண்டும்.



**17.** குழந்தை வளர்ந்து ஓரளவு முதிர்ச்சி நிலையை அடையும் போது அவனிடமே கேள்வி பற்றிய தனது அபிப்பிராயத்தை கேட்பது சிறந்தது. அதனுடன் எவ்வாறு செயல்படுகின்றான் என்பதை அவதானிக்க அவனிடமே அக்கேள்வியைத் திரும்பக் கேட்க வேண்டும். இந்த முறைமையிலிருந்து எமக்கு பதில் வழங்க நகர முடியும். எமது அறிவு மட்டத்தை வைத்து குழந்தையை சிந்திக்க வைக்கக் கூடாது. இது குழந்தையை தனது வட்டத்திற்கு வெளியே கொண்டு சென்று விடும்.

## பதிலளிக்கும் போது ஏற்படும் கல்வி ரீதியான தவறுகள் :



எமது குழந்தைகள் விடயத்தில் நாம் விடும் கல்வி ரீதியிலான முக்கியமான தவறுகள் வருமாறு :

- பல்வேறுபட்ட கல்வித் துறைகளை கவனியாமலிருத்தல். அங்கே ஈமானியப் பகுதி, நெறிமுறைப் பகுதி, அறிவியல் பகுதி என பல உண்டு. அவற்றில் ஒரு பகுதியில் மாத்திரம் கவனம் செலுத்துவது, அல்லது அப்பகுதிகளுக்கு மத்தியில் சமநிலையைப் பேணாமலிருப்பது தவறாகும்.

- படிப்படியான கல்வி இல்லாமை, அதிகமான கண்டனம் மற்றும் கவனக் குறைவு என சந்தேகித்தல்.

- கலந்துரையாடலின்றி எனது பேச்சைக் கேட்க வேண்டுமென ஆசைப்படல்.

- துறை சார்ந்தோர், அனுபவமுள்ளோரிடம் ஆலோசனை கேட்காமல் அவசரப்படுதல் மற்றும் பலவீனமான பின்தொடர்தல்.

- கற்பித்தல் வழிகாட்டலின் போது உறுதியின்மை, எமது வார்த்தைகள் செயற்பாடுகளுக்கு மாற்றமாயிருத்தல், விரக்தியடையச் செய்யும் எதிர்மறையான செய்திகள்.

- மேற்கண்ட அனைத்தும் குழந்தை உளவியலில் கல்வி மற்றும் ஈமானியக் கட்டமைப்பில் பாரிய தாக்கம் செலுத்தும் தவறுகளாகும்.



# சிறார்களின் ஈமானிய வினாக்களுக்கு பதிலளிப்பதற்கான சில எடுத்துக்காட்டுகள்



இந்தப்

இந்தப் பகுதியில் வரும் பதில்கள் அனைத்தும் பெற்றோர் மற்றும் குழந்தைகளின் கேள்விகளுடன் தொடர்புபடும் ஆசிரியர்கள், வழிகாட்டிகள், சீர்திருத்தவாதிகள் ஆகியோருக்கே முதன்மையாக முன்வைக்கப்படுகின்றன. அத்துடன் பதில் உள்ளடக்கத்தை குழந்தையின் வயது, அறிவு மட்டம், ஆற்றல் என்பவற்றிற்கு ஏற்றவாறு அமைத்துக் கொள்ள வேண்டுகிறோம். ஏனெனில் வயது, அறிவு, ஆற்றல் ஆகியவற்றில் பல்வேறுபட்ட தரங்களிலுள்ள அனைத்துக் குழந்தைகளுக்கும் ஒரே விதமான பதிலை எம்மால் வைக்க முடியாது. இதனால் எமக்கு முக்கியம் பதிலின் உயிரோட்டமும் யதார்த்தமுமே தவிர அதன் சொற்கள் அல்ல. வாசகருக்கு முடிந்தளவு கருத்துப் படிவத்தை வழங்குவதற்காக பதில்களும் நேரடிப் பேச்சு மறைமுகப் பேச்சு என பன்முகத் தன்மை இருக்க வேண்டும். அவ்வாசகர் இந்த பதில்களின் கருப்பொருளை எடுத்து குழந்தைக்குப் பொருத்தமான சிறந்த முறையில் தானே மறுசீரமைத்துக் கொள்ள வேண்டும்.

ஈமானுடன் தொடர்பான குழந்தைகளின் கேள்விகளுக்கு பதிலளிப்பதற்காக, அவர்களுடைய அறிவு மற்றும் ஆற்றலுக்குப் பொருந்தும் வகையில் மறைவான விடயங்களை விபரிக்கும் மார்க்கத்தின்

முதன்மைக் கருத்துக்களை அவர்களிடம் கொண்டு சேர்க்க குறைந்தபட்ச மார்க்க அறிவாவது பெற்றோரிடம் இருக்க வேண்டும். பொதுவாக ஆசிரியர்கள் முகம்கொடுக்கும் சவால் தகவல் திரட்டுவதில் மாத்திரம் சுருங்கி விடுவதில்லை. மாறாக குழந்தையுடைய அறிவு ஏற்றுக் கொண்டு விளங்க முடியுமான அமைப்பில் அத்தகவலைக் கொடுப்பதிலும், அக்குழந்தை வாழுமிடம், காலம், சூழலுக்குப் பொருத்தமாக கொடுப்பதிலும் தான் பாரிய சவால் மறைந்துள்ளது.

பின்வருவன குழந்தைகளிடம் அதிகம் காணப்படும் கேள்விகளின் சில எடுத்துக் காட்டுகளாகும். இவை அனைத்துக் கேள்விகளுமல்ல. மாறாக, முக்கியமான, அடிக்கடி கேட்கக்கூடிய கேள்விகளாகும். எமது கண்ணோட்டத்தில் சிறந்த விடைகளாக உள்ளவற்றை தெரிவு செய்வதில் அக்கறை செலுத்தியுள்ளோம். அவை தான் முன்மாதிரியான விடைகள் என நாம் வாதாடமாட்டோம். என்றாலும் பெற்றோர் ஆரம்பித்து அதிலிருந்து தொடர்ந்து செல்ல முடியுமான சில எடுத்துக்காட்டுகள் தான். அவை நிச்சயமாக திருத்தம், மாற்றம், நீக்குதல் மற்றும் கூட்டல் ஆகியவற்றிற்கு உட்பட்டது.

## -குறிப்பு

குழந்தைகளிடம் கையாள்வதற்கு சிரமமான கேள்விகள் இருப்பதால் தமது குழந்தைகளைப் பராமரித்து வளர்ப்பதில் குறைபாடு ஏற்படுவதாக யாராவது நினைத்தால் அவர் தவறிழைத்தவர் ஆவார். ஏனெனில் சிறுவர்களிடம் காணப்படும் இந்நிலமையானது, அவர்களின் இயல்பான வளர்ச்சி, சிந்தனை, மற்றும் அறிவுத்திறன் ஆகியவற்றை பறைசாற்றும் ஆரோக்கியமான தோற்றப்பாடாகும். அவ்வாறு குறையிருந்தால் அது குழந்தையின் வளர்ச்சி, அவனது திறந்த மனது, மற்றும் பிரபஞ்சத்தின் இயக்கவியல், அவனைச் சுற்றி இருப்பவை பற்றிய அவனது வரவேற்பு ஆகியவற்றை முழுமையாகப் புரிந்து கொள்ள பெற்றோர் சக்தியற்று இருப்பதிலேயே குறையுள்ளது. எனவே பெற்றோர் மற்றும் குழந்தையுடன் தொடர்பானவர்கள் ஓரளவுக்காயினும் குழந்தை திருப்தி அடையக் கூடிய விதத்தில் பதில்களை வழங்க முயற்சிக்க வேண்டும். ஏனெனில் ஓரளவு திருப்தியான பதில் குழந்தை உளவியல், சிந்தனை, சமூக ரீதியாக நிலைத்திருக்க உதவும். சிதைந்த பதில்கள் மற்றும் குழப்பம், சிதறல் போன்றவற்றை அதிகரிக்கும் தவறான எதிர்வினைகளுக்கு மாற்றமாக இந்த குழப்பம், சிதறல் ஆகியன குழந்தையின் நடத்தையில் ஸ்திரமற்ற நிலையையும் சிந்தனையில் குறைவையும் தோற்றுவிக்கின்றது.

பெரிய பிரச்சினைகள் ஒரே தடவையில் உருவாகுவதில்லை. நெருப்பு சிறிய தீப்பொறியிலிருந்து தான் உருவாகின்றது. அதனால் தான் மனிதர்களிடம் உள்ள அதிகமான தீய குணங்கள் சிறிய வித்துவாகத் தோன்றி அலட்சியமும் தள்ளிப் போடுதலும் அதனை நீரூற்றி வளர்க்கின்றது. வாழ்க்கை எனும் நீரால் அதனைப் புறக்கணிக்கின்றது. எது வரையெனில் அத்தீய குணங்கள் உள்ளத்தில் வளர்ந்து வளர்ந்து வேரூன்ற ஆரம்பிக்கின்றது. அதன் பின் அதனைக் களைவதோ நீக்குவதோ சிரமமாகின்றது.

# அல்லாஹ்வை நம்புதல் தொடர்பான கேள்விகள்



சிறார்களின் உள்ளங்களில் சிறு பிராயத்திலேயே அதிகமாக எழும் கேள்விகள் அல்லாஹ்வைப் பற்றியது தான். இங்கு சிறார்கள் தமது பெற்றோர்களிடம் முன்வைக்கும் அதிகமான கேள்விகளைத் தருகிறோம்.

## ? யார் அந்த அல்லாஹ்?

முதலில், பிள்ளைகள் அல்லாஹ்வைப் பற்றி எம்மிடம் கேட்கும் வரை நாம் காத்திருக்க கூடாது. மாறாக எப்போதும், எல்லா சந்தர்ப்பங்களிலும் நாமாகவே அல்லாஹ்வைப் பற்றி அவர்களிடம் பேச வேண்டும். அல்லாஹ்வைப் பற்றியும் அவனது பண்புகளைப் பற்றியும் பிள்ளைகள் கேட்கும் கேள்விக்கு நாம் அளிக்கும் சரியான பதில் அவர்களின் உள்ளங்களில் ஓரிறைக் கொள்கை மற்றும் அல்லாஹ்வைப் பற்றிய நம்பிக்கையையும் உருவாக்குகின்றது. இதனால், அல்லாஹ்வின் ஆன்மாவைப் பற்றி சிந்திக்க விடாமல், அவனது அருட்கொடைகள், மற்றும் அவனது இருப்பைப் பறைசாற்றும் வானம், மேகங்கள், நட்சத்திரங்கள், சூரியன், சந்திரன், கடல், மரம் போன்ற அவனது அற்புதப் படைப்புக்களைப் பற்றி சிந்திக்க சிறார்களைத் திசை திருப்புவது தான் சிறந்த வழியாகும். அத்துடன் தம்மைப் படைப்பதன் மூலமும், தமது கண்கள், காதுகள், வாய், கைகள், கால்கள் மற்றும் முழு உடலையும் படைப்பதன் மூலமும் அல்லாஹ் அவர்களுக்குச் செய்திருக்கும் அருட்கொடையை சுட்டிக்காட்ட வேண்டும். இந்த வானம், பூமி, மரங்கள் அனைத்தையும் அல்லாஹ் தான் படைத்தான் என்பதை அவர்களுக்கு சொல்லிக் கொடுக்க வேண்டும். அவர்கள் இது போன்ற வார்த்தைகளுக்குப் பழகிக் கொள்ளும் வரை இதனைப் போதிக்க வேண்டும். யார் அந்த அல்லாஹ்? என்று அவர்கள் எம்மிடம் கேட்கும்



போது எம்மைச் சூழவுள்ள அனைவரையும், அனைத்தையும் படைத்தவன் அல்லாஹ் தான் என்று நாம் எளிமையாகவே பதிலளிப்போம். அதற்கான பல உதாரணங்களை அவர்களுக்கு வழங்குவோம்.

இந்த வானியல் மற்றும் புவியியல் உலகங்களைப் பிள்ளைகளுக்குக் காட்டி, இந்த அற்புதமான அமைப்பு மற்றும் முழு நிறைவான ஒழுங்கமைப்பை அவனுக்கு வெளிப்படுத்தி "இந்த ஒழுங்கமைப்பை பார்த்தாயா? என நாம் அவனிடம் கேட்டு இதனை உருவாக்கியவன் அல்லாஹ் தான் எனக் கூற வேண்டும். அப்போது அப்பிள்ளை தனது இரட்சகனை அறிவுடனும் தெளிவுடனும் உணர்ந்து கொண்டவனாகின்றான். அனைத்தையும் சிருஷ்டித்தவன் அந்த அல்லாஹ் தான். அவனுக்கு நிகர் யாருமில்லை. அவன் நிகரற்ற அன்புடையவன். வாழ்வாதாரம் அளிப்பவன். கண்ணியமானவன். அவனுக்கு பல பெயர்களும் பண்புகளும் உள்ளன. அனைத்தும் அழகானவை. அதனால் தான் அவன் மட்டுமே வேறு இணையின்றி வணங்கப்படத் தகுதியாகின்றான் என்பதை அப்பிள்ளைக்குச் சொல்லிக் கொடுக்க வேண்டும். மேலும் அல்லாஹ் குழந்தைகளை நேசிக்கின்றான். அவர்களைப் பராமரித்து, பயனுள்ளவற்றை செய்து அவர்களுக்கும் ஒட்டுமொத்த மக்களுக்கும் நலவு செய்யுமாறு ஏவுகின்றான். அவன் தான் எமது நற்செயல்கள், தீய செயல்களைப் பற்றி விசாரணை செய்யக் கூடியவன். நல்லோர்க்கு வெகுமதிகளையும், தீயோருக்கு தண்டனைகளையும் வழங்குகின்றான் என்பதையும் அப்பிள்ளைகளுக்குச் சொல்லிக் கொடுக்க வேண்டும். சிறார்களுக்கு அல்குர்ஆனில் சிறிய அத்தியாயங்களை கற்றுக் கொடுப்பது, இன்னும் அவர்களுக்குப் பயனளிக்கும். காரணம் அல்லாஹ்வைப் பற்றிய அழகான பதில்களை அவ்அத்தியாயங்கள் உள்ளடக்கியுள்ளன. அவன் யாரையும் பெற்றெடுக்காதவன். யாருக்கும் பிறக்காதவன். அவனுக்கு நிகராக யாருமில்லை.

பிள்ளையிடம் இன்னும் சில கேள்விகளை முன்வைக்கலாம்

- இந்த அழகான ஆடையை உங்களுக்கு வாங்கித் தந்தது யார்?

- உங்களைப் பாடசாலைக்கு அழைத்துச் செல்வது யார்?

- நீங்கள் நோயுற்றால் மருத்துவரிடம் அழைத்துச் செல்வது யார்?

- விடுமுறைகளில் உங்களை உல்லாச பயணம் அழைத்துச் செல்வது யார்?

இவை அனைத்திற்குமான அவனது பதில் "எனது தந்தை" என்பதாகத் தான் இருக்கும். அப்படியென்றால் உமது அனைத்து விடயங்களையும் உமது தந்தை தான் பொறுப்பேற்றுள்ளார் அல்லவா? எனக் கேட்கும் போது அவனும் "ஆம்" என்பான். அப்போது நாம் : அவ்வாறு தான் அல்லாஹ் எங்கள் அனைவரையும் பொறுப்பேற்பவன் அவன்தான் எனத் தெளிவுபடுத்த வேண்டும். அல்லாஹ் தான் அனைத்து வஸ்துக்களையும் படைக்கக் கூடியவன். உமக்கு சூழலாலுள்ள சூரியன், சந்திரன், மேகம், கடல்கள், மலைகள் அனைத்தும் அல்லாஹ்வின் படைப்பில் இருந்தும் உள்ளவை. மனிதர்கள், மிருகங்கள், பறவைகளை அவன் தான் படைத்தான். வானவர்கள், ஷைத்தான்களையும்

அவனே படைத்தான். இப்பிரபஞ்சம் அனைத்தையும் அவனே படைத்தான். அல்லாஹ் கொடையாளன், இரக்கமுள்ளவன். எம்மைப் பொறுப்பேற்று பராமரிக்கின்றான். எம்மை நேசித்து எப்போதும் எமக்கு நலவு செய்கின்றான் என பிள்ளைகளுக்குச் சொல்லிக் கொடுக்க வேண்டும்.

## அல்லாஹ்வுடையவும் மனிதனுடையவும் தோற்றம் ஒன்றா?

இல்லை, அவன் எம்மைப் போன்றவனல்ல. அவனைப் போன்று எதுவுமில்லை. என்னையும், உம்மையும் அனைத்து மனிதர்களையும் படைத்தவன் அவன்தான். மரங்கள், ஆறுகள், கடல்கள் மற்றும் இவ்வுலகிலுள்ள அனைத்தையும் அவன் தான் படைத்தான். ஆற்றலின் தோற்றுவாய் அவன்தான். ஏதாவது ஒரு பொருளைப் படைக்க நாடினால் “நீ ஆகிவிடு” என்று மாத்திரம் தான் கூறுவான். அது உருவாகிவிடும். அல்லாஹ் மனிதனை விட்டும் மாறுபட்டவன். மனிதனுக்கு இன்னொரு மனிதனைப் படைக்க முடியாது. என்றாலும் அல்லாஹ் அதற்கு ஆற்றல் பெறுகின்றான். அவன் நாடும் எதனையும் செய்யும் ஆற்றலுண்டு. இவ்வுலகில் அல்லாஹ்வைக் காண யாரும் சக்தி பெறமாட்டார்கள். ஆதலால் அவனது தோற்றத்தையும் யாருக்கும் வர்ணிக்க முடியாது. எமக்கு அல்லாஹ்வை அவனது அழகான, பிரகாசமான தோற்றத்தில் பார்க்க முடியாது. ஏனெனில் எமது சக்திகள் வரையறுக்கப்பட்டுள்ளன. பின்னர் அவனிடம் வெளியே சென்று கண்ணிமைக்காமல் சூரியக் கதிர்களைப் பார்த்துக் கொண்டே இருக்கும் படி கூற வேண்டும். அவ்வாறு சூரியனைப் பார்த்துக்கொண்டே இருக்க முடியுமா? என வினவினால் இல்லையென்று தான் கூறுவான். அவ்வாறு தான் அல்லாஹ்வும் அவனிடமிருந்து வெளிப்படும் பிரகாசத்தை எம்மால் தாங்கிக்கொள்ள முடியாது. எனினும் நாம் இன்ஷா அல்லாஹ் சுவனத்தில் பிரவேசிக்கும் போது காணலாம் என்று எடுத்துக் கூற வேண்டும்.

சிலவேளை இங்கே பிள்ளை குறுக்கிட்டு அது எவ்வாறு அவனைப் போன்று ஏதுமில்லை என்று தனது அதிருப்தியை வெளிப்படுத்துவான். இங்கே அவனை நிதானமாக ஏற்றுக் கொள்ள வைக்க வேண்டும். எமது புத்திகள் எவ்வளவு தான் விருத்தியடைந்து புரிந்து கொண்டாலும் குறுகிய மனித புத்திகளாகவே இருக்கும். அல்லாஹ் அப்புத்திகள் அறிய வேண்டுமென நாடியவற்றை மாத்திரம் தான் அவை அறியும். ஏனையவற்றை அறியமாட்டாது. அனைத்தையும் நாம் அறிவது அசாத்தியமானது. ஏனெனில் நாம் மனிதர்களாகவே இருக்கின்றோம். அல்லாஹ் எம்மைப் போன்றிருந்தால் எம்மைப் போன்றே நோயுறுவான், உண்ணுவான், பருகுவான். அத்துடன் மரணித்த மனிதர்களைப் போன்றே மரணிப்பான். ஆனால் அல்லாஹ் நோயுறவோ, உண்ணவோ, பருகவோ, மரணிக்கவோ மாட்டான். அவன் எப்போதும் இருப்பவன். இப்பிரபஞ்சத்தில் உள்ள வானங்கள், பூமி மற்றும் அனைத்து வஸ்துக்களையும் படைத்தவன் அவன் தான். எனவே அவனைப் போல் எதுவுமில்லை என்பதை எடுத்துக்கூற வேண்டும். மனிதர்களாகிய நாம் ஒன்றைப் பார்த்து ஆகிவிடு என்றதும் அது உருவாகிவிடுமா? அதற்குரிய ஆற்றல் நம்மிடம் உள்ளதா? என்று பிள்ளையிடம் கேட்க வேண்டும். அப்போது இல்லையென்றே பதிலளிக்கும். இதன் மூலம் அல்லாஹ் எம்மைப் போன்ற மனிதனல்ல. அவன் மகத்தான படைப்பாளன் என்பதைப் பிள்ளையுடன் சேர்ந்து முடிவுக்கு வரலாம்.

மேலும் பிள்ளைக்கு பின்வருமாறு கூற வேண்டும் : எமது செவிப்புலன் வரையறுக்கப்பட்டது. குறிப்பிட்டளவு தூரத்திற்குத் தான் எம்மால் செவியுற முடியும். அனைத்தையும் நாம் செவியுறச் சென்றால் நாம் களைப்படைந்து விடுவோம். எமது பார்வை வரையறைக்குட்பட்டது. மட்டுப்படுத்தப் பட்டளவு தான் எம்மால் பார்க்க முடியும். உதாரணமாக சுவருக்கு அப்பாலுள்ளதை எம்மால் பார்க்க முடியாது. எமது செவிப்புலன், பார்வை மட்டுப்படுத்தப்பட்டுள்ளது போன்று எமது அறிவும் வரையறுக்கப்பட்டது. அனைத்தையும் அதனால் உணர்ந்து கொள்ள முடியாது. மனித அறிவு அவ்வாறுதான் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. அனைத்தையும் அதனால் உணர முடியாது. மனித இனத்தை அல்லாஹ் சிருஷ்டித்தது முதல் இன்று வரை மனிதன் அறிந்ததை விட பன்மடங்கு அறியாத விடயங்கள் தான் உள்ளன. உதாரணமாக மனித உடலிலுள்ள உயிர், அது எமக்கு எவ்வளவு நெருக்கமாக இருந்தாலும் அதன் தோற்றத்தையோ யதார்த்தத்தையோ எம்மால் கற்பனை பண்ண முடியாது. எமக்குள்ளேயே இருக்கும் இந்த உயிரைப் பற்றிய எமது நிலை இதுவென்றால் எமக்கு வெளியே உள்ளவை பற்றி எப்படியிருக்கும்?

அதனடிப்படையில் மனித அறிவு வரையறுக்கப்பட்டிருக்கும் போது அதனால் அல்லாஹ்வின் யதார்த்தத்தை ஒருபோதும் உணர முடியாது. அடுத்து அல்லாஹ்வின் தோற்றம் பற்றி கற்பனை மூலமோ, புத்தியின் மூலமோ, ஊகத்தின் மூலமோ பேச முடியாது. மாறாக மார்க்க அடிப்படையில் மாத்திரம் தான் பேச முடியும். இந்தப் பிரச்சினைக்குத் தீர்க்கமான ஒரு முடிவை அல்குர்ஆன் முன்வைத்துள்ளது. "அவனைப் போன்று எதுவுமில்லை அவன் கேட்பவன் பார்ப்பவன்". அதன்படி நிச்சயமாக அல்லாஹ் எம்மை போன்றுமில்லை. வேறு எதனைப் போன்றுமில்லை. இது நாம் அவசியம் அஞ்சி, நேசித்து, ஆதரவு வைக்க வேண்டிய அந்த அல்லாஹ்வின் மகத்துவத்தை எடுத்துக் காட்டுகின்றது. இந்த மகத்துவம் சுவனத்தில் கிடைக்கும் இன்பங்களில் மிகப் பெரியது அவனைக் காண்பதில்தான் உள்ளது என்பதன் மூலம் தெளிவாகின்றது.



## அல்லாஹ்வை படைத்தவர் யார்?

இங்கிருப்பதெல்லாம் அல்லாஹ்வின் படைப்பென்றால், அந்தப் படைப்பாளனைப் படைத்தவன் யார்? என்று கேட்பீர். அவ்வாறு தானே? அப்படியென்றால், படைப்பாளனுடைய பண்புகளில் அவன் படைக்கப்படாதவன் என்பதும் உள்ளதென நாம் அவசியம் அறிய வேண்டும். அவன்தான் அனைத்துப் படைப்பினங்களையும் படைத்தான். அவன் படைக்கப்பட்டவனாக இருந்தால் நாம் அவனை வணங்கவோ அவனது போதனைகள், ஏவல்களைப் பின்பற்றவோ மாட்டோம். அல்லாஹ்வை யார் படைத்தான் என்ற கேள்வி தவறானது. தவறான வினாக்களுக்கு எவ்வித அர்த்தமும் இல்லை. உதாரணமாக ஒருவர் உம்மிடம் முக்கோணத்தின் நான்காவது பக்கத்தைப் பற்றிக் கேட்டால் அதற்குப் பதிலளிக்க எவ்வித வழியுமில்லை. ஏனெனில் முக்கோணத்திற்கு 3 பக்கங்கள் தான் உள்ளன. அல்லாஹ்வைப் படைத்தவன் யார்? என்ற கேள்வி எவ்வாறு தவறானதென்றால், “படைக்கப்படுதல்”, “அல்லாஹ்” ஆகிய இரு வார்த்தைகளும் ஒன்று சேராது. ஏனெனில் இறைவன் படைக்கப்பட முடியாது. படைக்கப்படுதல் என்பது படைப்பினங்களில் தான் நிகழும். யாருக்கும் அல்லாஹ்வை உருவாக்க முடியாது. அவ்வாறு முடியுமென்றிருந்தால் அவனும் படைக்கப்பட்டவனாகி விடுவான். அல்லாஹ் ஆரம்பம், முடிவு எதுவுமின்றி என்றும் இருப்பவன்.

ஒரு வாதத்திற்காக அல்லாஹ்வைப் படைத்தவன் இருக்கின்றான் என்று வைத்துக் கொண்டாலும் அதே கேள்வி தொடர்ந்து கொண்டே இருக்கும். அல்லாஹ்வைப் படைத்தவனைப் படைத்தவன் யார்? அவனைப் படைத்தவன் யார்? இவ்வாறு முடிவில்லாமல் வினா நீண்டு கொண்டே செல்லும். இது அசாத்தியமானது. இதனை இன்னும் தெளிவுபடுத்த ஒரு சிப்பாய் மற்றும் தோட்டாவை எடுத்துக்கொள்வோம். அந்த சிப்பாய் துப்பாக்கியால் சுட விரும்பினால் பின்னாலுள்ள சிப்பாயிடம் அனுமதி கேட்க வேண்டும். இந்த சிப்பாய் அனுமதி வழங்க தனக்குப் பின்னாலுள்ள சிப்பாயிடம் அனுமதி கேட்க வேண்டும். இவ்வாறு முடிவின்றி சென்று கொண்டே இருக்குமென்று வைத்துக் கொள்வோம். இப்போது கேள்வி என்னவெனில் அந்த சிப்பாய் துப்பாக்கியால் சுடுவாரா? என்பது தான். விடை இல்லவே இல்லை. ஏனெனில் இவர் தனக்கு அனுமதி வழங்கும் சிப்பாயை சென்றடையவே மாட்டார். ஆனால் இந்த சங்கிலித் தொடர் துப்பாக்கியால் சுட அனுமதி வழங்கும் மேலதிகாரி ஒருவரை இறுதியாகச் சென்றடைந்தால் அப்போது துப்பாக்கியிலிருந்து தோட்டா செல்லும். இவ்வாறு தான் ஒருவரின்றி அங்கு எத்தனை பேர் இருந்தாலும் தோட்டா துப்பாக்கியை விட்டு நகர மாட்டாது. அவர்கள் தொடராக எழுதப்பட்டிருக்கும் பூச்சியங்களைப் போன்று. அதன் எண்ணிக்கை எவ்வளவு தான் அதிகரித்தாலும் அப்பூச்சியங்களுக்கு முன்னால் இலக்கம் ஒன்று அல்லது மேற்பட்ட தொகையை எழுதும் வரை அப்பூச்சியங்களுக்கு எவ்வித பெறுமதியும் கிடையாது.

## அல்லாஹ் எங்கிருந்து வந்தான்? அவனுக்கு எத்தனை வயது?

அல்லாஹ் படைக்கப்படவில்லை என்பதை நீங்கள் அறிந்து இருப்பது போல் தான் அவன் யாரையும் பெறவுமில்லை. யாரிலிருந்தும் பிறந்து வரவுமில்லை. அவனுக்கு ஆரம்பமோ முடிவோ கிடையாது. எனவே எமக்கு வயது இருப்பது போல் அவனுக்கு

வயதென்று ஒன்று கிடையாது. ஏனெனில் அல்லாஹ் அவன் படைப்பாளன், மகத்தானவன், தேவையற்றவன், மிகப்பெரியவன், உறுதியான வலிமை மிக்கவன், கண்ணியமான, இரக்கமுள்ளவன். அவனுக்கு அழகிய திருநாமங்களும் உயரிய பண்புகளும் உள்ளன. அவனுக்கு பரிபூரணமான பண்புகள் தான் உள்ளன. குறைபாடான பண்புகள் ஏதும் அவனுக்கில்லை. அல்லாஹ் தான் எல்லாப் படைப்பினங்களையும் உருவாக்கியது போன்று இவ்வுலகையும் உருவாக்கினான்.

## அல்லாஹ்விற்கு முன்னால் யார் இருந்தது?

இதுவும் அல்லாஹ்வை யார் படைத்தது போன்ற ஒரு கேள்விதான். எனவே இதுவும் தவறான கேள்வியாகும். ஏனெனில் அல்லாஹ் ஆரம்பமானவன். அவனுக்கு முன்னர் எதுவுமில்லை. அவன் தான் இறுதியானவன். அவனுக்குப் பிறகு யாருமில்லை. அல்லாஹ் கூறுகின்றான் : "(யாவற்றுக்கும்) முந்தியவனும் அவனே. பிந்தியவனும் அவனே. பகிரங்கமானவனும் அவனே. அந்தரங்கமானவனும் அவனே. மேலும், அவன் அனைத்துப் பொருள்களையும் நன்கறிந்தவன்" (அல்குர்ஆன் - 57:03). கால, நேரமும் இடத்தைப் போன்றுதான். அல்லாஹ்வை அது வரம்பிடமாட்டாது. கால, நேரம் அல்லாஹ்வுடைய ஏனைய படைப்பினங்களில் ஒரு படைப்பினம் என்ற நிலையைத் தாண்டமாட்டாது. எனவே அந்தப் படைப்பினங்களால் தம்மைப் படைத்தவனுக்கு வரம்பிடவோ, சூழ்ந்தறியவோ முடியாது. எனவே அல்லாஹ்விற்கு பரிபூரணமான அழகான அனைத்துப் பண்புகளும் உள்ளன. நபி (ஸல்) அவர்களின் உபதேசத்தை அக்குழந்தைக்கு சுட்டிக் காட்டுவது அவசியமாகும்.

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் : உங்கள் ஒருவரிடத்தில் ஷைத்தான் வந்து இதனைப் படைத்தவன் யார்? இதனை படைத்தவன் யார்? என்று கேட்டுக் கொண்டே சென்று உமது இரட்சகனைப் படைத்தவன் யார்? என்று கேட்கும் வரை செல்வான். அந்த நிலையை அவர் அடைந்தால் அல்லாஹ்விடம் பாதுகாவல் தேடி அதற்கு மேல் செல்லாமல் நிறுத்திக் கொள்ளவும். (அறிவிப்பவர் : அபூஹுரைரா (றழி), ஆதாரம் : புகாரி – 3276). அல்லாஹ்விடம் பாதுகாப்புத் தேடி, இது போன்ற கேள்விகளைத் தொடர்ந்து கேட்டுக் கொண்டே செல்லாமலிருக்க மறைமுகமாக வேறு சிந்தனைக்குக் குழந்தையைத் திருப்புவதும் இங்கு ஒரு வகையில் முக்கியமான பதில்தான். சிந்தனையைத் திசை திருப்புவது பதிலின்மைக்காக அல்ல. மாறாக அநாவசியமான ஊகங்களுடைய வாயில்களை மூடுவதற்காகத் தான்.

## அல்லாஹ் ஆணா பெண்ணா?

அல்லாஹ்வின் யதார்த்த தோற்றத்தைப் பற்றி சிந்திப்பதை விட்டும் சிறார்களின் சிந்தனையைத் தூரமாக்கி, பயனுள்ள விடயங்களை சிந்திக்க வழிகாட்டுவது அவசியமாகும். ஆண், பெண் வேறுபாடெல்லாம் உயிருள்ள படைப்பினங்களில் தான் பார்க்கப்படுகின்றன. படைத்தவனிடம் அல்ல. அல்லாஹ் தனது படைப்பினங்களின் மீது புரிந்த ஓர் அருளாக இதனை கூறுகின்றான். "நிச்சயமாக அவனே ஆண், பெண் எனும் ஜோடிகளைப் படைத்தான்" (அல்குர்ஆன் - 33:45). அல்லாஹ் இவ்வாறான


வகைப்படுத்தலுக்கு அப்பாற்பட்டவன். ஏன் படைப்பினங்களில் கூட ஆண், பெண் பாகுபாடில்லாத எத்தனையோ உள்ளன. உதாரணமாக வானவர்களைக் கூறலாம். அத்துடன் வானம், மேகம், காற்று, தண்ணீரில் கூட ஆண் பெண் பாகுபாடில்லை. பல குறைகளுடைய படைப்பினங்களிலேயே இவ்வாறான வகைப்படுத்தல் பொருந்தாத போது பரிபூரணமான அல்லாஹ்விற்கு இது அறவே பொருந்த மாட்டாது. அவனைப் போன்று எதுவுமில்லை. அவன் கேட்பவன். பார்ப்பவன் (அல்குர்ஆன் - 42:11).

## அல்லாஹ் இருப்பதாக ஏன் நாம் நம்ப வேண்டும்? அவனது இருப்பிற்கு என்ன ஆதாரம்?

அல்லாஹ்வை நம்புதல் மனித இயல்பாகும். அதனை யாராலும் மறுக்க முடியாது. அவனது இருப்பிற்கு பல ஆதாரங்கள் உள்ளன. மனிதர்கள் இன்றளவும் தமது துறை, நிபுணத்துவத்திற்கேற்ப ஒன்றன் பின் ஒன்றாக ஆதாரங்களைக் கண்டுபிடித்துக் கொண்டே இருக்கின்றனர். மனித ஆத்மாவிலுள்ள இயற்கை சான்றுகளும் அல்லாஹ்வின் இருப்பை உறுதிப்படுத்துகின்றன. அல்லாஹ் கூறுகின்றான் : "(இதுவே) அல்லாஹ் மனிதர்களைப் படைத்திருக்கும் அவனுடைய இயற்கையான மார்க்கமாகும். (அல்குர்ஆன் - 30:30). நாம் ஒவ்வொருவரும் எமக்குள்ளேயே அல்லாஹ்வுடைய மகத்துவம், வலிமை மற்றும் கண்காணிப்பை உணர்த்தும் உள்ரங்கமான ஒரு சக்தியைக் காண்கிறோம். புலனுணர்வுள்ள அறிவியல் சான்றுகள் இப்பிரபஞ்சத்தில் துல்லியமான ஒழுங்கமைப்பொன்று உள்ளதை உறுதிப்படுத்துகின்றன. இந்தத் துல்லியமான அமைப்பை உருவாக்கிய ஒருவன் நிச்சயம் இருக்க வேண்டும். ஏனெனில் இப்படைப்பினங்களை உருவாக்கி, வளர்த்தவன் யார்? ஒன்றோ எவ்விதக் காரணமுமின்றி இவை இயற்கையாக உருவாகியிருக்க வேண்டும். அப்போது இவை எவ்வாறு உருவாகியது என்பதை யாரும் அறிய மாட்டார்கள். இது ஒரு சாத்தியக்கூறு. மற்றுமொரு சாத்தியக்கூறு உள்ளது. அது இப்பொருட்கள் தம்மைத் தாமே உருவாக்கி வளர்த்துக் கொண்டுள்ளன. மூன்றாவது ஒரு சாத்தியக்கூறும் உள்ளது. அது தான் இவற்றை உருவாக்கிய, சிருஷ்டித்த ஒருவன் உள்ளான் என்பதாகும். இம்மூன்று சாத்தியக்கூறுகளையும் நோட்டமிட்டால் முதலிரண்டும் சாத்தியமற்றது என்பதை அவதானிக்கலாம். இவ்விரண்டும் சாத்தியமற்றதானால் மூன்றாவது தான் தெளிவானதாகவும் சரியானதாகவும் இருக்க முடியும். அதுதான் இப்பொருட்களைப் படைக்கக்கூடிய ஒரு படைப்பாளன் உள்ளான் என்பதாகும். இது தான் அல்குர்ஆனிலும் கூறப்பட்டுள்ளது. "அல்லது, அவர்கள் எந்தப் பொருளின்றியும் (தாமாகவே) படைக்கப்பட்டனரா? அல்லது அவர்கள் (எதையும்) படைக்கிற (சக்தியுடைய)வர்களா? அல்லது, வானங்களையும் பூமியையும் அவர்கள் படைத்தார்களா? அல்ல. அவர்கள் உறுதி கொள்ளமாட்டார்கள்" (அல்குர்ஆன் - 52:35:36)

அல்லாஹ்வின் இருப்பை உறுதி செய்யும் மற்றுமொரு புலனுணர்வுள்ள ஆதாரம் பிரார்த்தனைகளுக்கு அல்லாஹ் பதிலளிப்பதும், வானங்கள், மற்றும் பூமியை குறைபாடற்றுப் படைத்திருப்பதுமாகும். அல்லாஹ் கூறுகின்றான் : "நிச்சயமாக, வானங்கள், பூமி ஆகியவற்றின் படைப்பிலும் இரவும், பகலும் மாறி மாறி வருவதிலும் அறிவுடையோருக்கு திடமாக அத்தாட்சிகள் பல இருக்கின்றன"

(அல்குர்ஆன் - 3:190). அத்துடன் முழுநிறைவான மனிதப் படைப்பிலும் அல்லாஹ்வின் இருப்பை உறுதிசெய்யும் ஆதாரங்கள் உள்ளன. “உங்களுக்குள்ளேயும் (பல) அத்தாட்சிகள் இருக்கின்றன் (அவற்றை) நீங்கள் உற்று நோக்க வேண்டாமா?” (அல்குர்ஆன் - 51:21). அதேபோன்று தான் நட்சத்திரங்கள், மலைகள், பிராணிகள் போன்ற அனைத்துப் படைப்பிலும் உள்ளன. இவையனைத்தும் படைப்பாளனின் புதுப்புனைவுத் திறனைப் பறைசாற்றுகின்றன. அல்லாஹ்வுடைய அத்தாட்சிகள் தொலைதூரங்கள், ஆத்மாக்கள், பழவகைகள் அனைத்திலும் உள்ளன. அவையனைத்தும் ஒரேயொரு படைப்பாளன் அல்லாஹ்வின் இருப்பைப் பறைசாற்றுகின்றன. இவ்வனைத்துப் படைப்பினங்களும் உருவாக்கப்பட்டதற்கான குறிக்கோள், நோக்கம் அவசியம் இருந்தாக வேண்டும். அவையனைத்தும் எவ்வித இணையுமற்ற அல்லாஹ்வை மாத்திரம் வணங்குகின்றன. ஒரு கூட்டம் அல்லாஹ்வின் பரிபாலனக் கோட்பாட்டைப் பற்றி இமாம் அபூஹனீபா (ரஹ்) அவர்களிடம் கேட்ட சம்பவத்தை சிறார்களுக்குக் கூறலாம். இமாமவர்கள் பின்வருமாறு பதிலளித்தார்கள் : “இது பற்றிப் பேச முன் எனக்கு பின்வரும் செய்தியைப் பற்றிக் கூறுங்கள் : திஜ்லா நதியில் ஒரு கப்பல் சென்று தானாக உணவு, ஏனைய பொருட்களை நிரப்பிக் கொண்டு, தானாகவே திரும்பிச் சென்று, தானாகவே நங்கூரமிட்டு நிறுத்தி அனைத்துப் பொருட்களையும் இறக்கிவிட்டு மீண்டும் திரும்புகின்றது. இவையனைத்தையும் யாரும் ஏற்பாடு செய்யாமல் அக்கப்பல் தானாகவே செய்கின்றது” என வந்த கூட்டத்தினரிடம் இமாமவர்கள் கூறினார்கள். அதற்கவர்கள் : “இது அறவே நடக்க முடியாத சாத்தியமற்றதே” என்றார்கள். அப்போது இமாமவர்கள் “ஒரு கப்பலிலேயே இது சாத்தியமற்றதாக இருந்தால் வானம், பூமி உள்ளிட்ட முழு உலகமும் எவ்வாறு இயங்கும்? எனக் கேட்டார்கள். எனவே முழு நிறைவான இப்படைப்பினங்கள் அனைத்தையும் அறிந்த, வல்லமையுள்ள படைப்பாளனின்றி உருவாகுவது சாத்தியமற்றது.



அத்துடன் பின்வருமாறும் அவர்களுக்குக் கூறலாம் :

வயிற்றில் வலியேற்படும் போது பட்டினி என்பதை நீர் உணர்ந்து தானாகவே உணவைத் தேடிச் செல்கின்றீர் தானே?

தாகத்தை உணரும் போது தானாகவே அதனைப் போக்க வழி தேடுகின்றீர் தானே?

நல்ல நறுமணத்தை சுவாசிக்கும் போது இன்பமடைகின்றீர் தானே?

துர்வாடைகளை நுகரும் போது வெறுக்கின்றீர் தானே?

பூக்கள், மலர்கள், வானம் மற்றும் எம்மைச் சூழவுள்ள இயற்கைக் காட்சிகளைக் காணும் போது இன்பமடைகின்றனரீர் தானே? அதேபோன்று தான் எமக்குத் தேவையேற்படும் போது ஒதுங்குவதற்காக மகத்தான ஓர் இறைவன் தேவை என்பதை இயற்கையாகவே உணர்கின்றோம். அதன் மூலம் பாதுகாப்பையும், அமைதியையும்



உணர்வதற்காக அவன் பால் தேவையை காண்கிறோம். நெருக்கடி, கவலைகளின் போது இயல்பாகவே அல்லாஹ்விடம் நாம் ஒதுங்கி அவனை அழைக்கின்றோம். மகிழ்ச்சியாக இருக்கும் போது அதற்காக அவனை நாம் புகழ்கின்றோம்.

## அல்லாஹ் எம்மைப் போன்றே பார்த்து, கேட்டு, பேசுகின்றானா?

அல்லாஹ் பேசுகின்றான், கேட்கின்றான், பார்க்கின்றான். அல்லாஹ் கூறுகிறான் : "(நபியே!) எவள் தன் கணவனைப் பற்றி உம்மிடம் தர்க்கித்து, அல்லாஹ்விடமும் முறையிட்டுக் கொண்டாளோ, அவளுடைய வார்த்தையை நிச்சயமாக அல்லாஹ் செவியேற்றுக் கொண்டான் - மேலும், அல்லாஹ் உங்களிருவரின் வாக்கு வாதத்தையும் செவியேற்றான். நிச்சயமாக அல்லாஹ் (யாவற்றையும்) செவியேற்பவன் (எல்லாவற்றையும்) பார்ப்பவன்" (அல்குர்ஆன் - 58:01). மேலும் கூறுகின்றான் : "(அதற்கு அல்லாஹ்) "நீங்களிருவரும் அஞ்ச வேண்டாம் நிச்சயமாக நான் (யாவற்றையும்) செவியேற் பவனாகவும், பார்ப்பவனாகவும் உங்களிருவருடனும் இருக்கிறேன்" என்று கூறினான்" (அல்குர்ஆன் - 20:46). மேலும் கூறுகின்றான் : "நிச்சயமாக அவன் நீங்கள் செய்பவற்றை பார்ப்பவனாவான்" (அல்குர்ஆன் - 11:112). என்றாலும் அது எமது பேச்சு, செவிப்புலன், பார்வையைப் போன்றதல்ல. ஏனெனில் அல்லாஹ் தனது படைப்பினங்களை விட்டும் வேறுபட்டவன்.

எனவே அவன் எவ்வளவு தான் மறைந்திருந்தாலும் ஓசைகளை செவிமடுக்கின்றான். எவ்வளவு தொலைவிலிருந்தாலும் எல்லாப் பொருட்களையும் பார்க்கின்றான். அல்லாஹ் அனைத்தையும் கேட்கின்றான், பார்க்கின்றான். எனினும் குறைபாடு, பலவீனத்திற்குள்ளாகும் படைப்பினங்களுடைய கேள்வி, பார்வைக்கு அவனது கேள்வி, பார்வை ஒப்பாகமாட்டாது. எனவே அல்லாஹ்வாகிய "அவனைப் போன்று எதுவுமில்லை அவன் கேட்பவன், பார்ப்பவன்" (அல்குர்ஆன் - 42:11).

இதனை நேரடியாக நடத்தையுடன் தொடர்புபடுத்துவது உகந்தது. அல்லாஹ் கேட்பவனாகவும், பார்ப்பவனாகவும் இருக்கும் பட்சத்தில் அவன் விரும்பாதவற்றை நாம் கதைக்கலாமா? அவன் ஏற்காத கோலத்தில் எம்மை அவன் காணலாமா? என அவர்களிடம் கேட்க வேண்டும்.

## அல்லாஹ்விற்கு பட்டினியோ தாகமோ ஏற்பட மாட்டாதா?

அல்லாஹ்விற்கு பரிபூரணமான பண்புகள் உள்ளன. அவன் பக்கம் எவ்வித குறையுள்ள பண்புகளும் சேரமாட்டாது. பட்டினி, தாகம் ஆகியன பலவீனத்தின் வெளிப்பாடுகளில் ஒன்றாகும். அல்லாஹ்வின் பக்கம் பலவீனமான எதனையும் சேர்க்க முடியாது. அத்துடன் அல்லாஹ் உணவு, பானங்களின் பால் தேவையற்றவன். ஏனெனில் அனைத்தையும் படைத்த அல்லாஹ் எவ்விதத் தேவையுமற்றவன். அவனுக்கு தேவைகளிருந்தால் அவன் இறைவனாக இருக்கத் தகுதியில்லை. எனவே அல்லாஹ் உணவு, பானங்களின் பக்கம் தேவையற்ற, உணவு உட்கொள்ளாத, எவ்விதத் தேவையுமற்றவன். அவன் அவையனைத்தையும் விட்டும் தேவையற்றவன். அதேநேரம் படைப்பினங்கள் தான்

தமக்கு அல்லாஹ் வாழ்வாதாரம் அளிக்கவும், உணவளிக்கவும், தேவைகளை நிறைவேற்றவும் அவன் பக்கம் தேவையுள்ளவர்களாக இருக்கின்றனர்.

படைப்பினங்களுக்கும் படைப்பாளனுக்கும் மத்தியில் ஒப்பீடு செய்ய எவ்வித வாய்ப்புமில்லை என்பதையும் அவர்களுக்குக் கூறப்பட முடியும். நாம் செய்யக் கூடிய கண்டுபிடிக்கக் கூடிய அனைத்துக்கும் எம்மைப் போன்ற பண்பும், தோற்றமும் இருக்க வேண்டுமென்ற அவசியமில்லை. அதேபோன்று தான் எம்மைப் படைத்த அல்லாஹ்வுக்கும் எம்மைப் போன்ற பண்புகளும் தோற்றங்களும் இருக்க வேண்டுமென்ற அவசியம் கிடையாது. எனவே அவனுக்கு பட்டினியோ தாகமோ ஏற்பட மாட்டாது. நான் உங்களிடம் ஒரு கேள்வி கேட்கின்றேன்: மிதிவண்டியை உருவாக்கியவன் யார்? மிதிவண்டிகள் உற்பத்தி செய்பவன் தான் இதனையும் உருவாக்கியிருப்பான் என்று தான் அப்பிள்ளை பதிலளிக்கும். அப்போது அவனிடம் நாம் : மிக்க நன்று. வாருங்கள், நாம் சேர்ந்து ஒரு கற்பனை பண்ணுவோம். அந்த மிதிவண்டி பேசுகின்றது என வைத்துக் கொள்வோம். அதனை உருவாக்கியவனிடம் “என்ன சாப்பிடுகிறீர்? என்ன குடிக்கிறீர்? எனக் கேட்பதாக வைத்துக் கொள்வோம். அந்த மிதிவண்டிக்கு நீர் என்ன சொல்வீர்? எனப் பிள்ளையிடம் கேட்டுப் பார்ப்போம். அப்பிள்ளை கூறும் : “நான் அந்த மிதிவண்டியிடம் : இது உனக்கு அவசியமற்ற விடயம். அதனைத் தெரிந்து உனக்கு என்ன பயன்? உனது பிரதான கடமையில் இந்த பதில் புதிதாக எதனை அதிகரிக்கும்? உனது பொறுப்பு வேகமாக எவ்விதத் தங்கு தடையுமின்றி செல்வதுதான்” என்று கூறுவதாகப் பிள்ளை பதிலளிக்கும். இதே போன்று நாமும் அருமை மகனே! அல்லாஹ் எம்மை வரையறுக்கப்பட்ட ஒரு பணிக்காகப் படைத்துள்ளான். “இன்னும், ஜின்களையும், மனிதர்களையும் அவர்கள் என்னை வணங்குவதற்காகவேயன்றி நான் படைக்கவில்லை” (அல்குர்ஆன் - 51:56).

அல்லாஹ்வின் பட்டினி, தாகம் பற்றிய இந்த வினாக்கள் எமக்கு எவ்விதப் பயனுமளிக்காது. எமது பொறுப்பை நிறைவேற்றுவதற்கு எவ்விதத் துணையும் புரியாது. மாறாக எமது பணிகளுக்குத் தடையாக அமையும். வேறு விடயங்களில் தான் எமது சிந்தனை செல்லும். என்றாலும் மிதிவண்டி இப்போது மீண்டும் எம்மை நோக்கி வருகின்றது? அதில் ஏதாவது செயலிழக்கும் போது அதை நீர் செய்ய தன்னை உருவாக்கியவனிடம் முன்னோக்கி வருகின்றது. அவ்வாறு தானே? அதே போன்று தான் நாமும் வணக்கம் செலுத்தும் போது எமக்கு சோர்வு ஏற்பட்டாலோ, தீங்குகள் ஏதாவது எம்மைத் தொற்றிக் கொண்டாலோ பிரார்த்தனை மூலம் எம்மைப் படைத்தவனிடம் ஒதுங்குகின்றோம் எனத் தெளிவுபடுத்த வேண்டும்.

## அல்லாஹ்வுடைய சக்தியின் அளவு என்ன?

வரையறுக்கப்பட்ட சக்தி அல்லது ஆற்றல் பற்றி நாம் பேசுவதாக இருந்தால் அதன் அர்த்தம் குறைபாடுள்ள ஒரு பண்பைப் பற்றி நாம் பேசுகிறோம் என்பதாகும். ஏனெனில் சக்தியின் முடிவு என்பது பலவீனத்தின் ஆரம்பத்தைக் குறிக்கின்றது. அல்லாஹ்விற்கு பலவீனம் இருக்க முடியாது. எனவே அல்லாஹ்வுடைய ஆற்றல் சக்தி வரையறுக்கப் படாததாகும். அவனுக்கு இயலாத ஒன்றுமில்லை. அல்லாஹ் கூறுகின்றான் :

“நிச்சயமாக அல்லாஹ் அனைத்தின் மீதும் ஆற்றல் கொண்டவன்” (அல்குர்ஆன் - 2:106) அல்லாஹ் ஒன்றைப் படைக்க நாடினால் “நீ ஆகிவிடு” என்று மாத்திரம் தான் கூறுவான். அது உடனே உருவாகி விடும். எனவே அல்லாஹ் அனைத்தின் மீதும் ஆற்றலுள்ளவன். ஏனெனில் அவன்தான் அனைத்தையும் படைத்தவன். எனவே வானத்திலோ, பூமியிலோ அவனுக்கு இயலாத காரியம் எதுவுமில்லை. வரையறுக்கப்பட்ட சக்தியானது படைப்பினங்களுடைய சக்தியாகும். ஆனால் படைப்பாளனின் சக்திக்கு எவ்வித வரையறையோ குறைபாடோ இல்லை. அதனால் தான் வணக்கம், பிரார்த்தனை மற்றும் கேட்பதற்கு மிகத் தகுதியானவனாக அவன் இருக்கின்றான். ஏனெனில் படைப்பினங்களுடைய தேவைகளை நிவர்த்தி செய்து, அவர்களுக்கு வாழ்வாதாரம் அளித்து, அபிலாசைகளை நிறைவேற்றி, அவர்களுடைய அனைத்துக் காரியங்களையும் நிர்வகிக்க சக்தியுள்ள ஒரேயொருவன் அவன் மாத்திரம் தான்.

## ? அல்லாஹ் எங்கே இருக்கிறான்? அவனது பருமன் எவ்வளவு?

சிறார்களிடம் அல்லாஹ்தான் அவர்களைப் படைத்தான், அவர்களை அவன் அதிகம் நேசிக்கின்றான், அதிகமான அருட்கொடைகளை வழங்கியுள்ளான் என்பதை ஆரம்பத்திலேயே புரிய வைத்ததன் பின்னர்தான் அல்லாஹ் வானத்திலே உள்ளான் என்பதை அவர்களுக்கு தெளிவுபடுத்த முடியும். அல்லாஹ் கூறுகின்றான் : “வானிலுள்ளவனை நீங்கள் அச்சமுற்று இருக்கின்றீர்களா?” (அல்குர்ஆன் - 67:16). அவன் வானிலே உள்ளான். ஆனால் அவனுடைய அறிவோ எல்லா இடங்களிலும் உள்ளது. “நீங்கள் எங்கிருந்தாலும் அவன் உங்களுடனே இருக்கின்றான்” (அல்குர்ஆன் - 57:4). அல்லாஹ் எங்கும் இருக்கின்றான் என ஒருபோதும் கூற முடியாது. அவ்வாறு கூறினால் அவன் அனைத்துப் பொருட்களுக்குள்ளும் இருக்கின்றான் என்று அர்த்தமாகிவிடும். இது தவறாகும். நாம் நபிமொழியில் வந்துள்ளதைத் தான் பற்றிப் பிடிக்க வேண்டும். நபி (ஸல்) அவர்கள் ஓர் அடிமைப் பெண்ணிடம் “அல்லாஹ் எங்கு உள்ளான்?” எனக் கேட்டார்கள். “வானில்” என்றாள். “நான் யார்?” என மீண்டும் கேட்டார்கள். “நீங்கள் அல்லாஹ்வின் தூதர்” என்றாள். அவள் விசுவாசி தான். எனவே அவளை உரிமையிடுங்கள் என்று நபியவர்கள் கூறினார்கள். (முஸ்லிம் - 537). அல்லாஹ் வானிலே இருந்தாலும் அனைத்து இடங்களிலுள்ளவற்றையும் காணவும், கேட்கவும் சக்தியுள்ளவனாக இருக்கிறான். சிறார்களிடம் எப்போதும் அல்லாஹ் அவர்களைக் கண்காணித்துக் கொண்டே இருக்கின்றான் என்பதைத் தொடர்ந்து வலியுறுத்திக் கொண்டே இருப்பதால் அவர்களின் உள்ளத்தில் பாவத்தை விட்டும் தவிர்ந்து கொள்வதற்கான உள்ளுணர்வு வளரும்.

அல்லாஹ்வுடைய பருமனைப் பொறுத்தவரையில் அதனை அவனுடைய படைப்பினங்களில் எதனுடனும் ஒப்பிட முடியாது. அவன் அனைத்தையும் விட, அனைத்துப் படைப்பினங்களையும் விட மிகப் பெரியவன். படைப்பினங்கள் பெரிதாக இருந்தால் அவற்றைப் படைத்தவன் மிகப் பெரியவனாக இருக்கின்றான். அவன் தான் மலைகளைத் தூள் தூளாகத் தகர்ப்பவன். கடல்களை உசுப்புபவன். நீரை வற்றவைப்பவனும் அவன்தான். பிரபஞ்சத்தில் நடைபெறும் எக்காரியமும் அவனது ஏவல், நாட்டமின்றி நடைபெறமாட்டாது. படைப்பாளன் தனது படைப்பினங்களிடம்

தேவையற்றவன். வானம் அல்லாஹ்வின் படைப்பினங்களில் ஒன்று. ஆனால் அவனின் இருப்பு அதனைச் சார்ந்தில்லை. அவன் அதன்பால் தேவையற்றவன். ஏனெனில் அல்லாஹ் அனைத்தையும் விட்டும் தேவையற்றவன்.

## நாம் அல்லாஹ்வைக் காணாத போது அவன் எவ்வாறு எம்மைக் காண்கிறான்?

அல்லாஹ் இவ்வுலகில் எமக்கு வழங்கியுள்ள பார்வை உணர்வு பலவீனமானது. அநேகமான பொருட்களைப் பார்க்க முடியாது. அதனால் தான் மனிதன் தொலைநோக்கிக் கருவிகள் மற்றும் நுண்ணோக்கிக் கருவிகளைப் பயன்படுத்துகின்றான். படைப்பினங்களிலேயே சில பொருட்களை மனிதனால் பார்க்க முடியாதென்றால், படைத்தவனை அறவே பார்க்க முடியாது. இவ்வுலகில் மனித சக்தி அல்லாஹ்வைப் பார்க்க இடமளிக்கமாட்டாது. எனவே நாம் அல்லாஹ்வைக் காண முடியாது. ஆனாலும் அவனை நாம் விசுவாசிக்கிறோம். அவன் எமக்கு அருள் புரியும் கருணையாளன் என்பதையும் விசுவாசிக்கின்றோம். அவன் அனைத்தின் மீதும் ஆற்றலுள்ளவன். அனைத்தையும் அறிபவன். தற்போது நாம் அவனைப் பற்றித்தான் பேசுகின்றோம் என்பதையும் அறிகின்றான். அல்லாஹ் எம்மை விட அதி உயரத்தில் இருக்கின்றான். அதனால் அவன் எம் அனைவரையும் ஒரே நேரத்தில் பார்க்கின்றான். உயர்ந்த கட்டிடத்தின் மொட்டை மாடியில் ஒருவன் நின்றால், அவன் பாதையிலுள்ள அனைத்து மக்களையும் பார்க்கின்றான். ஆனால் மக்களால் அவனைப் பார்க்க முடியாது. அதேபோன்று தான் அல்லாஹ் எம்மைப் பார்க்கின்றான். நாம் அவனைப் பார்க்க முடியாது. நாம் காண முடியாத எத்தனையோ பொருட்கள் உள்ளன. ஆனால் அவை இருக்கத் தான் செய்கின்றன. எமது சிறார்களுக்கு நாம் பின்வருமாறு கூற வேண்டும் : எமது கண்களால் அனைத்தையும் பார்க்க முடியாது. எமக்கு ஒலியைப் பார்க்க முடியாது. ஆனால் அதனைக் கேட்கின்றோம். எமக்கு வளியைப் பார்க்க முடியாது. ஆனால் அதனை நாம் உணர்கின்றோம். இவ்வுலகில் எமது கண்களால் அல்லாஹ்வைப் பார்க்க முடியாது. ஆனால் சுவனத்தில் அல்லாஹ்வைப் பார்ப்பதற்கேற்றவாறு வலுவான கண்கள் எமக்குத் தரப்படும். எனவே தான் “பார்வைகள் அல்லாஹ்வை அடைய மாட்டாது. அவனோ பார்வைகளை அடைந்து கொள்கின்றான். இன்னும் அவனே நுட்பமானவன். நன்கறிந்தவன்”. (அல்குர்ஆன் - 6:103).

## மக்கள் அதிகமாக இருக்கும் போது அல்லாஹ் எவ்வாறு அவர்கள் அனைவரையும் பார்க்கின்றான்?

இக்கேள்விக்கு நடைமுறை ரீதியாக பதிலளிக்க குழந்தையை அழைத்துக் கொண்டு பாதையோரத்தில் நின்று “அங்கு செல்லும் மக்களை எண்ணிப் பார்த்துக் கூறுங்கள். நாமும் உம்முடன் நீர் காணும் மக்களை எண்ணுகிறோம்” எனக் கூற வேண்டும். பின்னர் இரண்டாம் மாடிக்கு அவனை அழைத்துச் சென்று அங்கிருந்து மக்களைப் பார்த்து அவர்களை எண்ண வைக்க வேண்டும். பின்னர் கட்டிடத்தின் உயரத்துக்கு அழைத்துச் சென்று அங்கிருந்து எண்ண வைக்க வேண்டும். பின்னர் தொலைநோக்கிக் கருவியொன்றைக் கொடுத்து மக்களை தெளிவாகப் பார்த்துத் துல்லியமாக எண்ண

வைக்க வேண்டும். இந்த உதாரணத்தின் மூலம் மட்டுப்படுத்தப்பட்டுள்ள எமது மனித அளவீடுகள் மூலம் எல்லாவற்றையும் அளவீடு செய்ய முடியாது என்பதையும், அனைத்துப் படைப்பினங்களுடைய சக்தியையும் விட அல்லாஹ்வினுடைய சக்தி மகத்தானது, பெரியது என்பதையும் புரியவைத்து, “அல்லாஹ் அனைத்தின் மீதும் ஆற்றலுள்ளவன்” (அல்குர்ஆன் - 2:106) என்பதைக் குழந்தையின் மனதில் பதிய வைக்க வேண்டும்.

அத்துடன் உணர்வு ரீதியான ஒரு கேள்வியையும் பிள்ளையிடம் கேட்கலாம். அதாவது: எறும்பு எம்மை எமது முழு விபரங்களுடன் காண்கின்றதா? அல்லது வெறும் கற்பனை அல்லது நிழலாகக் காண்கிறதா? எமது கால் விரலின் மிகச்சிறு பகுதியை மாத்திரம் தான் எறும்பால் பார்க்க முடியுமென பதிலளிப்பான். இன்னும் சிலவேளை எறும்பின் பார்வைக்கு கால் விரல் பாரிய மலை போன்றும் தோற்றமளிக்கும். அவ்வாறாயின், “நீர் எவ்வாறு எம்மை முழுமையாகப் பார்க்கின்றாய்?” என எறும்பு உங்களிடம் கேட்குமென நினைக்கின்றீரா? அவ்வாறு கேட்டால், “இது இயல்பானது” என்பதாகத் தான் உமது பதிலிருக்கும். அது அல்லாஹ் உமக்களித்துள்ள சக்தியுடன் ஒன்றிப் போகக் கூடியது. எனவே எறும்பின் சக்திகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளன. சிலவேளை எமது அறையில் ஒரே இடத்தில் பல எறும்புக் கூடுகள் இருக்கும். அவையனைத்தையும் ஒரே நேரத்தில் பார்ப்பது மிகச் சுலபமானது. என்றாலும் எறும்பால் அதனுடைய மட்டுப்படுத்தப்பட்ட சக்தியை வைத்து நீர் பார்ப்பதைப் போன்று பார்க்க முடியாது. அல்லாஹ்வைப் போன்று எதுவும் கிடையாது. அவன் அனைத்தின் மீதும் ஆற்றலுள்ளவன் என்பதில் ஒருமித்துள்ளோம் என்ற அடிப்படையில் எமது மட்டுப்படுத்தப்பட்ட ஆற்றலை வைத்து அல்லாஹ்வின் ஆற்றலைப் பற்றிக் கேட்பது முறையல்ல. அவனைப் பொறுத்தவரையில் அது மிக இயல்பானது. அல்லாஹ்வின் ஆற்றல் அனைத்துப் படைப்பினங்களுடைய ஆற்றலை விடவும் மகத்தானது, மிகப் பெரியது. ஏனெனில் “அல்லாஹ் அனைத்தின் மீதும் ஆற்றலுள்ளவன்” (அல்குர்ஆன் - 2:106)

## இருளிலும் அல்லாஹ் மக்களைப் பார்க்கின்றானா?

இரவில் தொலைநோக்கி மூலம் பார்க்கும் தரைப்படை வீரர்களைக் காட்சிப்படுத்தும் திரைப்படங்களிலிருந்து ஒரு காட்சியை பிள்ளைகக்குக் காட்டலாம். இருளில் பார்க்கும் சில மிருகங்கள், பறவைகளின் புகைப்படங்களைக் காட்டலாம். மேலும் அக்குழந்தை பார்க்கும் திரைப்படங்கள், மற்றும் விளையாடும் விளையாட்டுக்களிலும் அவ்வாறான புகைப்படங்கள் இருக்கும். அத்துடன் பொருட்களுக்கு அப்பாலுள்ளதை விளக்கி, இருளிலும் பொருட்களைப் பார்க்க வைக்கும் சில ஒளிக்கதிர்களும் அங்கே உள்ளன. இவற்றைக் காட்டிய பின் அக்குழந்தையிடம் பின்வருமாறு விளக்க வேண்டும் : பலவீனமான மனிதன் மற்றும் அற்பமான படைப்புகளெல்லாம் சிலவேளை இருளில் பார்க்கும் போது, மனிதனையும் அனைத்துப் படைப்புக்களையும் படைத்த எமது இறைவன் எவ்வாறு பார்க்காமலிருக்க முடியும்? இப்பொருட்களைக் கண்டுபிடிப்பதற்கான ஆற்றலை அல்லாஹ் எமக்குத் தந்திருக்கும் போது, சக்தியாளனான, கண்காணிப்பவனான அல்லாஹ் இவற்றைச் செய்ய சக்தி பெற மாட்டானா? அவன் மகத்தானவன், ஆற்றலுள்ளவன். அல்லாஹ்வின் ஆற்றலைத் தடுக்கக்கூடிய, மட்டுப்படுத்தக்கூடிய எதுவும் கிடையாது.



## வீட்டினுள்ளே நாம் கதவு, யன்னல்களை மூடிக் கொண்டிருக்கும் போது அல்லாஹ் எவ்வாறு எம்மைப் பார்ப்பான்?

நாம் பிள்ளைக்கு மருத்துவ கதிரியக்கவியல் பிரதி (எக்ஸ்ரே) ஒன்றைக் காட்டி, அல்லாஹ் படைத்த மனிதனாலேயே மூடியிருக்கும் எலும்பை எக்ஸ்ரே மூலம் பார்க்கலாமென்றால் அந்த மனிதனைப் படைத்த இரட்சகன் எவ்வாறிருப்பான்? நாம் வீட்டினுள்ளே அனைத்துக் கதவுகளையும் மூடியிருந்தாலும் நிச்சயம் அல்லாஹ் எம்மைப் பார்க்கின்றான். அவனைப் போன்று எதுவுமில்லை. பார்வைக்குத் தடையாக கட்டிடங்கள் இருப்பதற்கு அவன் மனிதனைப் போன்றவனல்ல. படைப்பாளன் படைக்கப்பட்டவனைப் போன்று ஒருபோதும் இருக்க முடியாது. ஏனெனில் பரிசுத்தமான அல்லாஹ் அனைத்தின் மீதும் ஆற்றலுள்ளவன். இந்த பதிவை பிள்ளையின் நடத்தைகளுடன் தொடர்புபடுத்துவது மிக உகந்தது. அதன் மூலம் பிள்ளைகளிடம் கண்காணிப்புப் பகுதி மற்றும் உள்ரங்கமான மத விருப்பத்தைப் பலப்படுத்தலாம்.

## எமது செயல்களை அவன் எவ்வாறு அறிகின்றான்? அனைத்து மக்களையும் அவன் எவ்வாறு கண்காணிக்க முடியும்?

அழகான, பரிபூரணமான அனைத்துப் பண்புகளும் அல்லாஹ்விற்குள்ளன. அவனது ஆற்றல் வல்லமைக்கு எல்லையில்லை என்பதை பிள்ளைகள் எப்போதும் அறிந்திருக்க வேண்டும். அவன் பரிபூரண ஆற்றல் மிக்கவன், சக்தியுள்ளவன். “அவன் அனைத்தின் மீதும் சக்தியுள்ளவன்” (அல்குர்ஆன் - 2:106). அவனது ஆற்றல் மகத்தானதாக இருக்கும் போது வானம், பூமியில் அவனால் இயலாதது ஒன்றுமில்லை. படைப்பினங்களுடைய ஆற்றலுடன் அவனது ஆற்றலை அளவிட முடியாது. அவர்களுடைய ஆற்றல் எவ்வளவு தான் வளர்ச்சியடைந்தாலும் அல்லாஹ் அதனைவிட மிகப் பெரியவன், மகத்துவம் மிக்கவன். கெமராக்களில் பதிவு செய்யப்படுபவற்றை பிள்ளைக்கு உதாரணமாகக் கூறலாம். அதன் காட்சி வட்டத்தினுள் (லென்ஸ்) உள்ளடக்க முடியுமான அனைத்து சிறிய, பெரிய பொருட்களையும் புகைப்படம் பிடித்து, பதிவு செய்து வைக்கலாம். அல்லாஹ் அதைவிட பாரிய ஆற்றலுள்ளவன். அவனுக்கே உயர்ந்த உதாரணங்கள் உள்ளன. ஒரே நேரத்தில் அனைவரையும் கண்காணிக்க அவனால் முடியும். ஏனெனில் அவனது ஆற்றல் எல்லையற்றது, மட்டுப்படுத்தப்படாதது. அல்லாஹ் அறிகின்றான். அவனது அறிவு அனைத்தையும் சூழ்ந்தறியக்கூடிய முழுமையான பரிபூரணமான அறிவாகும்.

மற்றுமோர் உதாரணத்தைக் கூறலாம். ஒரு பெரிய தொழிற்சாலையொன்று இருப்பதாக வைத்துக் கொள்வோம். அது தனது பணியாளர்களைக் கண்காணிக்க விரும்புகின்றது. அவர்கள் அறியாமல் கண்காணிப்புக் கெமராக்களைப் பொறுத்திவிட்டது. ஒரே நேரத்தில் தொழிற்சாலையின் அனைத்துப் பகுதிகளிலும் நடக்கும் அனைத்தையும் அவர்கள் அறியாமலேயே திரைகள் மூலம் கண்காணிக்க ஆரம்பித்துவிட்டதென வைத்துக் கொள்வோம். அல்லாஹ் படைத்த இந்த பலவீனமான அடியார்களாலே இதனைச் செய்ய முடியுமாயிருந்தால் அவர்கள் அனைவரையும் படைத்த அந்த அல்லாஹ்வால் ஒரே நேரத்தில் தனது அடியார்களைப் பார்க்க முடியாதா?

## ஏன் மனிதன் மாத்திரம் மரணிக்கின்றான்? அல்லாஹ் மரணிப்பதில்லை?


மரணம் என்பது அல்லாஹ் தனது படைப்பினங்களுக்கு விதித்திருக்கும் ஒரு விதியாகும். அவன் கூறுகின்றான் : “ஒவ்வோர் ஆத்மாவும் மரணத்தைச் சுகிக்கக் கூடியதே யாகும், பின்னர் நீங்கள் நம்மிடமே மீள்விக்கப்படுவீர்கள்”. (அல்குர்ஆன் - 29:57). மனிதனின் மரணம் அவனது மறுமை வாழ்விற்கான முதற்படி. அவ்வாழ்க்கை தான் மிக முக்கியமானது.

நிச்சயமாக மரணம் படைப்பினங்களின் வாழ்வில் இன்றியமையாத அடிப்படை பலவீனத்தின் அடையாளமாகும். அல்லாஹ்விற்கு பலவீனம் இருக்க முடியாது. அல்லாஹ் படைக்கப்படவில்லை. எனவே அவன் ஒருபோதும் மரணிக்கவும் மாட்டான். மனிதன் படைக்கப்பட்டவன். எனவே அவன் மரணிப்பான். அல்லாஹ்வின் வாழ்க்கை எமது வாழ்க்கை போன்றதல்ல. எமது இவ்வுலக வாழ்க்கை மரணத்துடன் முடிந்துவிடும். அனைத்துப் படைப்பினங்களும் மரணிக்கும். அல்லாஹ் மாத்திரம் தான் நிலைத்திருப்பான். அல்லாஹ்வின் பரிபூரண வாழ்விற்கு அனைத்துவித பரிபூரண பண்புகளும் அவசியமாகும். அவற்றில் முக்கியமானது மரணிக்காமல் தொடர்ந்திருக்கும் வாழ்வாகும்.

## நான் அல்லாஹ்வை நேசிப்பது போல் அவனும் என்னை நேசிக்கின்றானா?

அல்லாஹ் மன்னிப்பாளன், கருணையுள்ளவன், நல்லவர்களை, (மார்க்கத்தில்) உறுதியாக இருப்பவர்களை, உண்மையாளர் களையெல்லாம் அவன் நேசிக்கின்றான். அவன் கூறுகின்றான் : “அவன் அவர்களை நேசிக்கின்றான். அவர்களும் அவனை நேசிக்கின்றனர்” (அல்குர்ஆன் - 5:54). தனது அடியார்கள் மீதான அல்லாஹ்வின் நேசத்தின் அடையாளங்கள்: அவன் அவர்களை கண்ணியப்படுத்தி, பராமரித்து, அவர்களுடைய காரியங்களைத் திட்டமிட்டுச் செய்கின்றான். அவர்களுக்கு வாழ்வாதாரமளித்து, அவர்களை மன்னிக்கவும் செய்கின்றான். நாம் ஒவ்வொருவரும் அல்லாஹ்வின் இரக்க குணத்தையும், கண்ணியத்தையும் உணர்கின்றோம். அல்லாஹ் தனக்கு வழிபட்டு, தன்னை நெருங்கக்கூடிய, தனது நேசத்தைப் பெறுவதற்கான வழிகளை மேற்கொள்ளக்கூடிய அனைத்து அடியார்களையும் நேசிக்கின்றான். அவனது நேசத்தைப் பெறுவதற்கான வழிகள் வருமாறு : தொழுகையை பேணிவருதல், பெற்றோருக்கு உபகாரம் செய்தல், தர்மம், மக்களுக்கு நலவு செய்தல், உண்மை, அல்குர்ஆன் ஓதுதல், நாளாந்த பிரார்த்தனைகளைப் பேணி வருதல். மற்றும் நல்லமல்கள் அனைத்தும் இதில் உள்ளடங்கும். இவற்றை செய்வோரை அல்லாஹ் நேசிக்கின்றான்.

# வானவர்களை நம்புதல் தொடர்பான கேள்விகள்



## யார் அந்த வானவர்கள்? அவர்களது தோற்றமென்ன?

வானவர்கள் அல்லாஹ்வின் படைப்புகளில் ஒரு படைப்பினம். ஒளியினால் படைக்கப்பட்டவர்கள். மனிதர்களுக்கு முன் படைக்கப்பட்டவர்கள். அவர்களுக்கென நாட்டம், அறிவு, இறகுகள் உள்ளன. அவர்களின் தோற்றங்கள் மிக அழகானவை. மனிதத் தோற்றமெடுக்கும் ஆற்றல் அவர்களிடமுண்டு. உண்ணமாட்டார்கள், பருகமாட்டார்கள். அவர்கள் தமக்கு ஏவப்பட்டதைச் செய்யும் அல்லாஹ்வின் அடியார்கள். அவர்கள் பல தராதரங்களைக் கொண்டவர்கள். மிகச் சிறந்தவர் ஜிப்ரில் (அலை) அவர்கள். அவர் தான் இறைத் தூதர்களுக்கு இறைச் செய்தி எடுத்து வரும் பொறுப்புடையவர். மேலும் மீகாஈல் (அலை), இஸ்ரா∴பீல் (அலை) எனப்படுவோரும் வானவர்களில் உள்ளனர். அடியார்களை அனைத்து நேரங்களிலும் பாதுகாப்பதற்காக சாட்டப்பட்டுள்ள வானவர்களும் உள்ளனர். அங்கே வானவர் உலகத்தில் எண்ண முடியாதளவு பெருந்தொகை வானவர்கள் உள்ளனர். அவர்கள் ஒவ்வொருவருக்கும் அவசியம் நிறைவேற்ற வேண்டிய பொறுப்புக்கள் உள்ளன.

## வானவர்களின் பெயர்கள் என்ன?

வானவர்கள் அதிக எண்ணிக்கையுடையோர். அல்லாஹ்வைத் தவிர வேறு யாராலும் கணக்கிட முடியாது. அவர்களில் சிலரது பெயர்கள் வருமாறு : ஜிப்ரீல் (அலை), மீகாஈல் (அலை) இஸ்ரா∴பீல் (அலை), றிழ்வான் (அலை), மாலிக் (அலை). அத்துடன் அல்லாஹ்வின் அர்ஷைச் சுமப்போர், அடியார்களின் செயல்களை பதிவோரும் வானவர்களில் உள்ளனர்.

## அல்லாஹ் ஏன் அவர்களைப் படைத்தான்?

அல்லாஹ் வானவர்களை நற்காரியங்கள் செய்வதற்காகவே படைத்துள்ளான். அவர்கள் பொதுவாகவே நல்லவர்கள். தீமை செய்யவும் மாட்டார்கள். தீமையென்றால் என்னவென்றும் அறியாதவர்கள். அடிப்படையில் வானவர்கள் வானில் தான் உள்ளனர். என்றாலும் மனிதன் பூமிக்கு இறக்கப்பட்டதால் அவர்கள் தொடர்பான பணிகளை ஆற்ற வானவர்களும் பூமிக்கு இறங்கும் தேவையேற்பட்டது. பாதுகாத்தல், கரிசனை எடுத்தல், கண்காணித்தல், எத்தி வைத்தல், உதவி செய்தல், பாவமன்னிப்புத் தேடல், அல்லாஹ்வை நினைவு கூறும் சபைகளுக்கு சமூகமளித்தல் போன்றன அவர்கள் புவியில் ஆற்றும் பணிகளாகும். வானவர்களுக்கு பிரதானமான இரு பணிகள் உள்ளன. அல்லாஹ்வை வணங்குதல், பிரபஞ்ச காரியங்களை திட்டமிட்டு நிறைவேற்றல் ஆகியனவாகும் என்பதை சிறுவர்களுக்குக் கூறிக்காட்டலாம்.

## வானவர்களை ஏன் எம்மால் பார்க்க முடியாது?

வானவர்களை அவர்களது உண்மையான தோற்றத்தில் பார்க்க மனிதனுக்கு சக்தியில்லை. அதனால் தான் அவர்கள் மனித தோற்றத்தில் உருவமெடுக்கின்றார்கள். அதன் மூலம் மனிதர்கள் அவர்களைப் பார்க்கவும் புழங்கவும் முடியும். ஜிப்ரில் (அலை) அவர்கள் மார்க்க விடயங்களைக் கற்றுத் தர வந்த போது மனித தோற்றத்தில் வந்த பிரபலமான சம்பவத்தை உதாரணமாகக் கூறலாம். (முஸ்லிம் : 08).

## ஜின்கள் என்போர் யார்?

அவர்கள் நெருப்பினால் படைக்கப்பட்ட அல்லாஹ்வின் படைப்பினங்களுள் ஒன்றாகும். அல்லாஹ்வின் ஏவல்களை எடுத்து நடக்கவும், விலக்கல்களைத் தவிர்ந்து கொள்ளவும் அவர்கள் பணிக்கப்பட்டுள்ளனர். ஏனைய படைப்பினங்களைப் போன்றே இவர்களும் மரணிப்பவர்கள். எமக்கு அவர்களைப் பார்க்கவும் முடியாது. அதற்கான சக்தியுமில்லை. மனித ஆற்றல்களை விட்டும் வேறுபடக்கூடிய ஆற்றல்களைக் கொடுத்து அல்லாஹ் அவர்களைப் படைத்துள்ளான். அவர்களால் பறக்கவும், வேகமாக இடமாறவும், பல தோற்றங்களில் உருவமெடுக்கவும் முடியும். ஜின் இனம் மனித இனத்தை விட்டும் வேறுபட்டது. ஏனெனில் மனித இனம் மண்ணினால் படைக்கப்பட்டது. ஜின் இனமோ நெருப்பினால் படைக்கப்பட்டது.

## யார் பலசாலி? வானவர்களா? அல்லது ஜின்களா?

வானவர்கள் என்ற படைப்பினம் தொடர்ந்து இருந்து கொண்டே இருப்பார்கள். மறுமை ஏற்படும் போதுதான் மரணிப்பார்கள். ஆனால் ஜின்கள் அதற்கு முன்னர் மரணிப்பார்கள். அவர்கள் இவ்வாறு இருக்கும் போதே வானவர்களில் உள்ள "மலக்குல் மவ்த்" தான் அல்லாஹ்வின் கட்டளைப் பிரகாரம் படைப்பினங்களில் ஆயுள் முடிவடைந்ததும் அவர்களுடைய உயிர்களைக் கைப்பற்றுகின்றார். "உங்களில் ஒருவருக்கு மரணம் வந்துவிடுமானால் நம் அமரர்கள் அவர் ஆத்மாவை எடுத்துக் கொள்கிறார்கள். (அல்குர்ஆன் - 6:61). இந்தக் கோணத்தில் மாத்திரமல்ல, இவ்வுலக வாழ்விலும் வானவர்கள் தான் பலசாலிகளாக இருக்கின்றனர். ஷைத்தான்கள் வானவர்களைக் கண்டதும் அஞ்சுகின்றனர். இவ்வாறு தான் பத்ர் போரின் போது விசுவாசிகளுக்கு உதவ அல்லாஹ் அனுப்பிய வானவர்களை ஷைத்தான் கண்டதும் "நிச்சயமாக நான் உங்களை விட்டும் விலகி விட்டேன். நீங்கள் காணதவற்றையெல்லாம் நான் காண்கிறேன். நிச்சயமாக நான் அல்லாஹ்வைப் பயப்படுகிறேன்" என்று கூறி புறமுதுகிட்டு ஓடினான். அல்லாஹ் தண்டிப்பதில் கடுமையானவன் (அல்குர்ஆன் - 8:48)


## வானவர்கள் மரணிப்பார்களா?

ஆம், அவர்களும் அல்லாஹ்வின் படைப்பினங்களில் ஒரு படைப்பு. அல்லாஹ்வைத் தவிர அனைத்தும் அழியக் கூடியவை. அவன் மாத்திரம் தான் உயிருடன் நிலைத்திருப்பவன். அல்லாஹ் கூறுகின்றான் : “அவனது திருமுகத்தைத் தவிர அனைத்தும் அழியக் கூடியவை” (அல்குர்ஆன் - 28:88). பூமியிலுள்ள அனைவரும் மரணிப்பார்கள். அதேபோன்று தான் வானிலும் அல்லாஹ் நாடியவர்களைத் தவிர அனைவரும் மரணிப்பர். அவனைத் தவிர யாரும் மீதமிருக்க மாட்டார்கள். அவன் தான் என்றும் மரணிக்காமல் நிலைத்திருப்பவன்.





# வேதங்களை நம்புதல்
# தொடர்பான வினாக்கள்



## வேதங்கள் என்றால் என்ன?

அவை அல்லாஹ் தனது தூதர்கள் மார்க்கத்தை எத்திவைக்கவும், சட்டதிட்டங்களை அமுல்படுத்தவும் அவர்களுக்கு இறக்கிய வழிகாட்டல் நூட்களாகும். அவை படைப்பினங்களுக்கு ஈருலகிலும் வெற்றி பெறுவதற்கான வழிகாட்டியாகவும், அருளாகவும் இருக்கின்றன. இவற்றில் வஹீ மூலம் பெயர் கூறப்பட்டுள்ள வேதங்கள் வருமாறு :

- இப்ராஹீம் (அலை) அவர்களுக்கு வழங்கப்பட்ட ஏடுகள்.
- மூஸா (அலை) அவர்களுக்கு வழங்கப்பட்ட தௌராத்.
- தாவூத் (அலை) அவர்களுக்கு வழங்கப்பட்ட ஸபூர்.
- ஈஸா (அலை) அவர்களுக்கு வழங்கப்பட்ட இன்ஜீல்.
- முஹம்மத் (ஸல்) அவர்களுக்கு வழங்கப்பட்ட அல்குர்ஆன்.



## எமக்கு ஏன் அல்குர்ஆன் வேண்டும்? ஏன் அல்குர்ஆன் ஒரு நிரந்தர அற்புதமாக இருக்கின்றது?

மனித உருவாக்கத்தில் உருவான அற்பமான ஒரு பொருளுக்கே அதனை நாம் எவ்வாறு சிறந்த முறையில் பயன்படுத்தலாம்? என்பதைத் தெளிவுபடுத்தும் ஒரு வழிகாட்டல் நூல் தேவைப்படுகின்றது. அவ்வாறிருக்க அல்லாஹ்வால் படைக்கப்பட்ட மனிதன் ஈருலகிலும் வெற்றி பெற்று, சீராக இருக்க நிச்சயம் ஒரு வழிகாட்டல் நூல் அவசியமாகும். அல்லாஹ் கூறுகின்றான் : “(அனைத்தையும்) படைத்தவன் அறிய மாட்டானா? அவன் நுணுக்கமாக கவனிப்பவன் யாவற்றையும் நன்கு தெரிந்தவன்” (அல்குர்ஆன் - 6:14). அல்குர்ஆன் எவ்வாறு அற்புதமாகியதென்றால் : நபி முஹம்மது (ஸல்) அவர்கள் தான் இறுதித்தூதர். எனவே அவர்களுக்கு வழங்கப்படும் வேதம் நிரந்தர அற்புதமாக இருப்பது அவசியமாகும். ஏனெனில் அவர்களுக்குப் பின் நபிமார் யாருமில்லை. எனவே படைப்பினங்களுக்கெதிரான (அல்லாஹ்வின்) அத்தாட்சி தொடர்ந்து நிலைத்திருக்க வேண்டும். அவர்களுக்கு விடுக்கப்பட்டுள்ள சவால் மறுமை வரை நிலைத்திருக்க வேண்டும். அல்குர்ஆன் ஓர் அற்புதம் என்பதற்கான ஆதாரங்கள் நிறைய உள்ளன. அவற்றில் மிக முக்கியமானது மொழியியல் மற்றும் இலக்கிய ரீதியிலான அற்புதமாகும். அதனை வைத்துத் தான் அல்லாஹ் மொழி மற்றும் இலக்கண இலக்கியத்தில் தேர்ச்சி பெற்ற அந்த அரபு சமூகத்திற்கு சவால் விட்டான். மனு, ஜின்கள் இருபாலராலும் இந்த மகத்தான அல்குர்ஆனைப் போன்ற ஒன்றைக் கொண்டுவர முடியாமல் போனது. இதிலே இந்த அல்குர்ஆன் இறைவேதம் என்பதற்கான சான்றுள்ளது.

## முந்தைய வேதங்களை பாதுகாப்பதாக அல்லாஹ் ஏன் பொறுப்பெடுக்கவில்லை?

அல்லாஹ் தான் நாடியதைச் செய்பவன். அதில் பல உள்ளார்ந்த காரணங்கள் உள்ளன. சிலதை நாம் அறிவோம். இன்னும் சிலதை நாம் அறிய மாட்டோம். எனினும் முன்னைய வேதங்கள் அற்புதமாக இருக்கவில்லை என்பதற்கான தெளிவான சான்றுகள் பல உள்ளன. எனவே அவை தொடர்ந்து நிலைத்திருக்க வேண்டியதில்லை. மேலும் அவை குறிப்பிட்ட சில சமூகங்களுக்கு வழங்கப்பட்ட தற்காலிக சட்ட திட்டங்களாகும்.



## இதுவரை அல்குர்ஆனில் எவ்வித மாற்றமும் இடம்பெறவில்லை என்பதற்கான சான்றுகள் என்ன?

இதுபோன்ற கேள்விகளை பெரும்பாலும் சாதாரண தரம் அல்லது அதற்கு மேற்பட்ட தரங்களில் பயில்வோரே முன்வைப்பார்கள். எனவே அவர்களுக்கு அமைதியாகவும், சிந்தனையுடனும் அல்குர்ஆன் இறைவேதமென்பதை உறுதிப்படுத்த அறிவியல் ரீதியாக தெளிவுபடுத்துதல் அவசியமாகும். அவர்களுக்கு நாம் பின்வருமாறு கூற வேண்டும் : எந்தவொரு தகவலும் மீண்டும் மீண்டும் கூறப்பட்டால் நிலைத்திருக்கும். அவை பரவினால் உறுதியாகிவிடும். அல்குர்ஆன் எமக்கு முதவாதிர் அடிப்படையில் அறிவிக்கப்பட்டதாகும். முதவாதிர் என்றால் ஒன்று சேர்ந்து பொய் கூற முடியாதளவு பெருந் தொகையினர் அதேபோன்ற தொகையினரிடமிருந்து ஒரு செய்தியை அறிவித்து வருவதற்குச் சொல்லப்படுகின்றது. அதனை பொதுமக்கள், அறிஞர்கள் அனைவரும் அறிந்து வைத்துள்ளனர். முஸ்லிம்கள் இந்தக் குர்ஆனை தொன்றுதொட்டு வாழையடி வாழையாக அறிவித்து தமது சபைகளில் ஒருவருக்கொருவர் கற்றுக்கொண்டும், தொழுகைகளில் ஓதியும், பிள்ளைகளுக்குக் கற்றுக் கொடுத்தும் வருகின்றனர். எந்தளவுக்கெனில், கௌரவமான ஒரு முதியவர் அல்குர்ஆனின் ஓர் எழுத்தில் தவறிழைத்தாலும் சிறுவர்கள் அதனைத் திருத்திக் கொடுப்பார்கள். இவ்வாறு எவ்விதக் கூட்டல், குறைத்தலுமின்றி திரிபுகளிலிருந்து பாதுகாக்கப்பட்ட நிலையில் எமக்குக் கொண்டு வந்து சேர்த்தார்கள். இந்த ஆதாரத்தை மறுக்க முடியுமாயிருந்தால், இன்னும் பல உறுதியான யதார்த்தங்களை மறுக்க நேரிடும். நபி (ஸல்) அவர்கள், நபித்தோழர்கள், வரலாற்றில் பிரபலமானோர் போன்றோரின் இருப்பையும் மறுக்க நேரிடும். இதனை எந்த அறிஞரும் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். அத்துடன் இதே அல்குர்ஆனில் அதனைப் போன்ற ஒன்றைக் கொண்டு வரும்படி அல்லாஹ் மனு, ஜின்களுக்கு சவால் விட்டு, அவர்களாலும் அது முடியவில்லை. அல்குர்ஆன் எவ்வளவு நீளமாக இருந்தும் அதிலே எவ்விதக் குறையோ முரண்பாடுகளோ இல்லை. அதிலிருக்கும் தகவல்கள், சட்டதிட்டங்கள், வார்த்தைகள் அனைத்திலுமுள்ள அற்புதமானது, தமது செயற்பாடுகள் வார்த்தைகளில் பல மாற்றங்கள், குறைபாடுகளைக் கொண்ட மனிதர்களிடமிருந்து இந்தக் குர்ஆன் வரவில்லை என்பதற்கு சான்றாக உள்ளது. இது அல்லாஹ்விடமிருந்து வந்தது. இதனை பாதுகாப்பதாக அவனே பொறுப்பெடுத்துள்ளான்.



# இறைத்தூதர்களை நம்புதல்

# தொடர்பான கேள்விகள்



## நபிமார்கள் தூதர்கள் என்போர் யார்?

அவர்கள் மனித இனத்தவர்கள். நபித்துவத்தைக் கொடுத்து அல்லாஹ் அவர்களை அனுப்பியுள்ளான். தமது சமூகத்திற்கு தூதுத்துவத்தை எத்தி வைக்குமாறும், அல்லாஹ்வை மாத்திரம் வணங்குவதற்காக அவர்களை அழைக்குமாறும் அல்லாஹ் அத்தூதர்களைப் பணித்துள்ளான். அவர்களில் முதலாமவர் நபி ஆதம் (அலை). இறுதியானவர் முஹம்மத் (ஸல்). அவர்கள் அதிக எண்ணிக்கையுடையோராக இருக்கின்றனர். ஏனெனில் புவியில் வாழ்ந்த அனைத்து சமூகங்களுக்கும் அல்லாஹ் அவர்களை அனுப்பினான். வரலாற்றின் ஒவ்வொரு அங்கங்களிலும் அக்காலத்து மக்களை நேர்வழியின் பால் அழைப்பதற்கென ஒவ்வொரு நபி இருந்துள்ளார்.

## அல்லாஹ் ஏன் தூதர்களை அனுப்பினான்?

மக்கள் மீது அல்லாஹ் கொண்ட கருணையினாலும், அவர்களுக்கு நேர்வழி காட்டவும், அவனுடைய இறைத்தூதை எத்திவைக்கவுமே இறைத் தூதர்களை அனுப்பினான். தூதர்களுக்கு இறைச் செய்தி இறங்குவதற்கு முன்னரே அவர்களது சமூகத்தினர் அவர்களை நன்கறிந்து, அவர்களைப் பற்றி நல்லது சொல்லக் கூடியவர்களாகவே இருந்துள்ளனர். அல்லாஹ் இறைத் தூதர்களை மக்களுக்கு மத்தியில் கண்முன் தெரியும் முன்மாதிரிகளாகவே ஆக்கியுள்ளான். அவர்கள் அம்மக்களுக்கு நன்னடத்தைகளைப் போதிப்பர். அவர்களுக்குப் பயனளிப்பவற்றைத் தெளிவுபடுத்துவர். தீங்கிழைப்பவற்றை விட்டும் தூரப்படுத்துவர். தூதர்களை அனுப்புவதன் மூலம் படைப்பினங்களுக்கு எதிராக ஆதாரம் நிறுவப்படுவதுடன், அல்லாஹ்வை மாத்திரம் வணங்கக் கூடிய ஒரே மார்க்கத்தில் ஒன்று சேர்த்தலும் உண்டாகின்றது. மக்கள் தமது மொழியிலேயே தமக்கு நேர்வழி காட்டுவோர் பக்கம் தேவையுடையவர்களாக இருக்கின்றனர். இதனால் தான் அல்லாஹ் தூதுத்துவம் தெளிவாகவும், நிறைவாகவும் மக்களிடம் சென்றடைய அவரவர் மொழிகளிலேயே வேதங்களை அருளினான்.

## நபிமார்கள் தவறிலிருந்து பாதுகாக்கப்பட்டவர்களா?

நபிமார்கள் மனித இனத்தின் ஒரு பகுதி. அவர்களிடம் மனித இயல்புகள் அனைத்தும் உண்டு. தூதுத்துவம் தொடர்பான விடயங்களில் அல்லாஹ் அவர்களைத் தவறிலிருந்து பாதுகாத்துள்ளான். தமது சொல், செயல்களில் மக்கள் திருப்தியடைந்து, அவர்களுக்கு முன்மாதிரியாக இருக்கவும், தூதுத்துவத்தை எத்தி வைப்பதில் மக்கள் குறை காணாமலிருக்கவும் அத்தூதர்களைத் தமது நடத்தை, பண்பாடுகளில்

அபகீர்த்தி ஏற்படும் விதத்தில் நடந்து கொள்ளாமல் பாதுகாத்துள்ளான். என்றாலும் இவையனைத்திற்கும் மத்தியிலும் அவர்கள் மனிதர்களே. தமது தூதுத்துவத்தைப் பாதிக்காத வகையில் ஆங்காங்கே சிறுசிறு தவறுகள் சில நடக்க வாய்ப்புள்ளது. உதாரணமாக : விவசாயத்திற்கு அல்லது போரிற்கு பொருத்தமான இடத்தையே நிர்ணயித்தல், அழைப்புப் பணிமுறைகளை நிர்ணயித்தில் போன்றவற்றில் தவறுகள் ஏற்படுவதைக் குறிப்பிடலாம்.

## யார் அந்த முஹம்மத் (ஸல்) அவர்கள்?

அல்லாஹ் தனது அடியார்களுக்கு அனுப்பிய நபிமார்களில் இறுதியானவர் இவர்கள் தான். இவர் குரைஷிக் கோத்திரத்தில் பனூ ஹாஷிம் குடும்பத்தில் அப்துல்லாஹ் பின் அப்துல் முத்தலிபின் புதல்வர் முஹம்மது ஆவார். ஆனை வருடம் ரபீஉல் அவ்வல் மாதம் ஒரு திங்கட்கிழமை மக்காவில் பிறந்தார்கள். தாயின் கருவறையில் இருக்கும் போதே தந்தையை இழந்து விட்ட அன்னார் தனது ஆறாவது வயதில் தாய் ஆமினாவையும் இழந்தார்கள். பின்னர் பாட்டன் அப்துல் முத்தலிபிடம் வளர்ந்து வந்தார்கள். தனது எட்டாவது வயதில் பாட்டனையும் இழந்தார்கள். பின் அன்னாரின் சிறிய தந்தை அபூதாலிப் பொறுப்பேற்றார்கள். சிறந்த நற்குணங்களை தன்னகத்தே கொண்டிருந்ததால் அஸ்ஸாதிக் (உண்மையாளர்), அல்அமீன் (நம்பிக்கையாளர்) போன்ற சிறப்புப் பெயர் கொண்டு அழைக்கப்பட்டார்கள். நாற்பதாவது வயதில் நபியாக அனுப்பப்பட்டார்கள். மக்காவில் சுமார் 13 வருடங்கள் தனது சமூகத்தை இஸ்லாத்தின்பால் அழைத்தார்கள். பின்னர் அம்மக்களின் நோவினை கடுமையாகியதும் மதீனாவிற்கு இடம்பெயர்ந்து சென்று அங்கே சுமார் 10 வருடங்கள் இருந்தார்கள். மக்காவிலிருந்து இடம்பெயர்ந்து சென்ற முஹாஜிரீன்களுக்கும் வந்தவர்களுக்கு உதவி புரிந்த மதீனா வாசிகளான அன்ஸாரிகளுக்கும் இடையில் சகோதரத்துவத்தை உருவாக்கி, அங்கே அல்லாஹ்வின் மார்க்கத்தையும் சட்டதிட்டங்களையும் நிலைநாட்டினார்கள். தூ துத்துவத்தை முழுமையாக எத்திவைத்து அமானிதத்தை நிறைவேற்றியதன் பின்னர் ஹிஜ்ரி 11ம் ஆண்டு மரணித்தார்கள்.

## நபியவர்கள் உண்மைத் தூதர் என்பதற்கான சான்றுகள் என்ன?

முஹம்மத் (ஸல்) அவர்கள் நபியென்பதற்கான சான்றுகள் பல உள்ளன. அவற்றுள் சில வருமாறு :

01. அல்குர்ஆன் : இதுதான் பிரதானமான அத்தாட்சியாகும். இவ்வேதம் தன்னகத்தே கொண்டுள்ள பொக்கிஷங்கள், முத்துக்களை வைத்து மக்களை அதனைப் போன்ற ஒன்றைக் கொண்டுவர முடியாமல் காலாகாலமாக தடுமாறவைத்துக் கொண்டே இருக்கின்றது.

02. அன்னாரது வாழ்க்கை வரலாறு, மற்றும் அன்னாரது நேசர்கள் ஒருபுறமிருக்க எதிரிகளே சான்று பகர்ந்த அன்னாரது நற்குணங்கள். அன்னார் “அஸ்ஸாதிக்”,

“அல்அமீன்” போன்ற பெயர்களால் அழைக்கப்பட்டார்கள்.

03. அன்னாருக்கு நிகழ்ந்த அற்புதங்கள் : நேரில் கண்டவர்கள் இதனை அறிவித்து காலாகாலமும் இன்றுவரை அறிவிக்கப் பட்டு வருகின்றன.

04. அழகாகவும், பூரணமாகவும் உயர்ந்து நிற்கும் நேர்த்தியான இந்த மார்க்கத்தின் சட்டதிட்டங்கள்.

05. முன்னைய வேதங்களை அலங்கரித்து நிற்கும் அன்னாரின் வருகை பற்றிய முன்னறிவிப்புகள்.

06. ஒவ்வொரு காலத்திலும், இடத்திலும் கண்கூடாகக் காணும் இஸ்லாத்தின் இத்தொடர்ச்சியான வளர்ச்சி.

07. முன்சென்ற சமூகங்கள், எதிர்கால தீர்க்கதரிசனங்களை அறிவித்தல்.

## ஒரே இரவில் எவ்வாறு இராப் பயணம் செய்தார்கள்?

நபி (ஸல்) அவர்கள் மக்காவிலிருந்து “புராக்” எனும் மிருகத்தின் மூலம் மஸ்ஜிதுல் அக்ஸாவுக்குச் சென்று அங்கிருந்து ஜிப்ரீல் (அலை) அவர்களின் துணையுடன் விண்ணுலக யாத்திரை மேற்கொண்டார்கள். அல்லாஹ் அனைத்தின் மீதும் சக்தி பெற்றவன். வானிலோ, புவியிலோ அவனால் இயலாத ஒன்றுமில்லை. ஒளியின் வேகத்தை மிஞ்சுமளவு பலவீனமான மனிதன் தனது அறிவைப் பயன்படுத்தி விமானங்களைக் கண்டுபிடித்துள்ளதை இன்று நாம் பார்க்கின்றோம். 3னு பட பரிமாற்றம் செய்யும் முறையையும் கண்டுபிடித்தான். அக்கருவி ஒரு மனிதனை ஒரே நேரத்தில் பல இடங்களில் பல கோணங்களில் காட்டுகின்றது. எனவே அல்லாஹ் தனது படைப்பினங்களை விட மிகப்பெரிய மகத்துவமிக்க சக்தி வாய்ந்தவன்.

## முஹம்மத் (ஸல்) அவர்கள் ஏன் இறுதி நபியாக இருக்கிறார்?

தூதர்களை அனுப்புதல் என்பது உள்ளார்ந்த ஒரு காரணத்துடன் தொடர்புடையது. அதுதான் நேர்வழி காட்டுதல். முன்னைய வேதங்களில் அதன் தூதர்களது மரணத்திற்குப் பின் குறைகள், திரிபுகள் ஏற்படக்கூடியதாக இருந்ததால் இவ்வாறான குறைகள் ஏற்படாத ஒரு வேதத்தைக் கொடுத்து ஒரு தூதரை அனுப்புவதன் அவசியம் ஏற்பட்டது. ஏன் இதனை மறுமை வரை பாதுகாப்பதாக அல்லாஹ் பொருப்பெடுத்தும் உள்ளான். அனைத்துப் படைப்பினங்களுக்கும் அத்தாட்சியாகவும் தெளிவான வேதமாகவும் உள்ள அல்குர்ஆன் எனும் அற்புதம் மறுமை வரை தொடர்ந்து நிலைத்திருக்கும் எனும் போது அது அருளப்பட்ட நபி (ஸல்) அவர்களும் இறுதித் தூதராகவும் நபியாகவும் இருப்பதுதான் அறிவுடமையாகும்.

## நாம் ஏன் நபியவர்களை நேசிக்க வேண்டும்?

நபி (ஸல்) அவர்களை நேசிப்பது இறை நம்பிக்கையின் அடிப்படைகளுள் ஒன்றாகும். ஏன், அல்லாஹ்வை நம்பிக்கை கொள்வது கூட இந்த நேசமின்றி பரிபூரணமாக மாட்டாது. அவனது நேசத்துடன் நபியவர்களுடைய நேசத்தையும் ஒன்றிணைத்துள்ளான். மேலும் இந்த மகத்தான தூதுத்துவத்தை நிறைவேற்றுவதற்காக மனிதர்களில் அன்னாரையே தேர்வு செய்துள்ளான். சொல், செயல், குணம் அனைத்திலும் மக்களில் மிகச் சிறந்தவரையே அல்லாஹ் தேர்வு செய்துள்ளான். இப்பணியை சரிவர நிறைவேற்ற யார் பொருத்தம் என்பதை அவனே மிக்க அறிந்தவன். இப்பாரிய பணிக்காக ஒட்டுமொத்த மக்களில் அன்னாரை அல்லாஹ் தெரிவு செய்திருக்கும் போது அதே மக்களில் அதிகம் நேசிப்பதற்காக நாமும் அவர்களையே தெரிவு செய்வதுதான் பொருத்தமும் கடமையுமாகும். மக்களுக்குத் தமது இரட்சகனைக் காட்டிக்கொடுத்தவர் இந்த நபியவர்கள் தான். தனது சமூகத்திற்கு சிறந்த தூதரானார்கள். தனது மக்களுக்கு அதிக கருணையுள்ள நபியானார்கள். அல்லாஹ்வுக்கு அடுத்து எமக்கு உபகாரம் புரிந்ததாகக் கூறிக் காட்ட மிகவும் அருகதையுடையவர்கள் இந்த நபியை தவிர வேறு யாருமில்லை. மக்களை நலவின் பால் அழைக்கும் போதும் ஏற்பட்ட துன்பங்களையெல்லாம் சகித்துக் கொண்டார்கள். தனது அழைப்புப் பணியை முன்வைக்கும் போது அன்னாரை ஏற்காதவர்கள் நரகில் நுழைய வேண்டியேற்படுமே என்பதை நினைத்து அன்னாரின் உள்ளமும் இறுக ஆரம்பித்தது. அல்லாஹ் கூறுகின்றான் : "(நபியே!) இந்த (வேத) அறிவிப்பில் அவர்கள் நம்பிக்கை கொள்ளாவிட்டால், அவர்களுக்காக கவலைப்பட்டு, நீர் உம்மையே அழித்துக் கொள்வீர்கள் போலும்!" (அல்குர்ஆன் - 18:6). இதனால் தான் நபி (ஸல்) அவர்கள் அல்லாஹ்வுக்கு அடுத்தபடியாக நாம் நேசிக்க மிகவும் தகுதியானவர்களாக இருக்கின்றார்கள்.



# இறுதி நாளை நம்புவது தொடர்பான கேள்விகள்





## இறுதி நாள் என்றால் என்ன?

விசாரணைக்காக மக்களை அல்லாஹ் மீளெழுப்பும் நாள் இறுதி நாளாகும். அதற்குப்பின் நாட்களில்லை என்பதாலேயே இதற்கு ‘இறுதி நாள்’ எனப் பெயரிடப்பட்டுள்ளது. இவ்வுலகில் மனிதர்கள் செய்த செயல்களை அல்லாஹ் அந்நாளில் விசாரிப்பதால் ‘விசாரணை நாள்’ எனவும் கூறப்படுகின்றது. அல்லாஹ்வுக்கு வழிப்பட்டு நல்லறங்கள் புரிந்தோரை சுவனத்திலும், அவனுக்கு மாறு செய்து தீயது புரிந்தோரை நரகிலும் அவன் நுழைவிக்கின்றான். ஒட்டுமொத்த மனிதர்களுடையவும் இவ்வுலக வாழ்க்கை அன்றுடன் முடிவடைகின்றது. மண்ணறைகளிலிருந்து வானை நோக்கி விசாரணைக்காக மக்கள் எழுந்து வரும் நாள் என்பதால் ‘கியாம நாள்’ என்றும் அழைக்கப்படுகின்றது.

## அந்த நாள் எப்போது நிகழும்? ஏன் எம்மை விட்டும் அது மறைக்கப்பட்டுள்ளது?

மறுமை எப்போது நிகழும் என்பதை படைப்பினங்களில் யாரும் அறிய மாட்டார்கள். “(நபியே! “மறுமையின்) நேரத்தைப் பற்றி - அது எப்போது ஏற்படும்?” என்று அவர்கள் உம்மைக் கேட்கிறார்கள். அ(ந்நேரத்)தைப் பற்றி நீர் குறிப்பிடுவதற்கு என்ன இருக்கிறது? அதன் முடிவெல்லாம் உம்முடைய இறைவனிடம் (அல்லவா) இருக்கிறது. அதை பயப்படுவோருக்கு, நிச்சயமாக நீர் எச்சரிக்கை செய்பவர் தாம்” அல்குர்ஆன் - 45-79:42). நல்லறங்கள் புரிந்து, தீமைகளைக் களைந்து அந்நாளுக்காக என்றுமே நாம் தயாராக இருக்க வேண்டும் என்பதற்காகவே அது எப்போது நிகழும் என்பதை அல்லாஹ் எம்மிடருந்து மறைத்துள்ளான். அந்நாள் எப்போது என்று மனிதன் அறிந்தால் அது நெருங்கும் வரை பாவமீட்சி பெறாமல் தீமை செய்து கொண்டே இருப்பான். இருப்பதைவிட பன்மடங்கு குழப்பங்களால் உலகம் நிரம்பி விடும்.

## விசாரணை என்றால் என்ன?

அது முன்சென்றோர் பின்னால் வருவோர் அனைவரையும் அல்லாஹ் ஒன்று சேர்த்து, அவர்களுடைய செயற்பாடுகளை அவர்களுக்குக் காண்பித்து, பின் அச்செயல்களுக்கேற்ப கூலி வழங்குவதாகும். இந்நிகழ்விற்கே விசாரணை எனப்படுகின்றது. ஒரு சிறிய நலவு செய்திருந்தாலும் அதனையும் காணலாம், அதேபோன்று ஒரு சிறிய தீமை செய்திருந்தாலும் அதனையும் காணலாம். அல்லாஹ் கூறுகின்றான் : "(நபியே!) நீர் கூறும்: "(நிச்சயமாக உங்களில்) முன்னோர்களும், பின்னோர்களும். குறிப்பிட்ட நாளின் ஒரு நேரத்தில் (நீங்கள் யாவரும்) ஒன்று கூட்டப்படுவீர்கள்" (அல்குர்ஆன் - 50ஈ56:49). மேலும் கூறுகின்றான் : "எனவே, எவர் ஓர் அணுவளவு நன்மை செய்திருந்தாலும் அத(ற்குரிய பல)னை அவர் கண்டு கொள்வார். அன்றியும், எவன் ஓர் அனுவளவு தீமை செய்திருந்தாலும், அ(தற்குரிய பல)னையும் அவன் கண்டு கொள்வான்" (அல்குர்ஆன் - 99 :7/8).

## மரணம் என்றால் என்ன?

மரணம், மீளெழுப்பப்படல் போன்றவற்றின் முழுமையான அர்த்தத்தையோ பாரபட்சமின்றி அனைத்து மனிதர்களினதும் தவிர்க்க முடியாத முடிவே மரணம் என்பதையோ ஆறு அல்லது அதற்குக் குறைந்த வயதுடைய பிள்ளைகள் புரிய முடியாது. 8 - 6 வரையிலான வயதுடைய பிள்ளைகள் மரணம் என்றால் என்ன என்பதையும், அது அனைத்து மனிதர்களுக்கும் நிகழக்கூடியது என்பதையும் புரிந்து கொள்வர். 10 - 8 வரையிலான வயதுடைய பிள்ளைகள் தான் மரணம், மீளெழுப்பப்படல் போன்ற சிந்தனைகளை சரியாகப் புரிந்து கொள்கின்றனர். சிலவேளை பிள்ளையின் குடும்பத்தில் ஒரு மரணம் நிகழும். அதுதான் அவன் சந்திக்கும் முதல் மரண சம்பவமாக இருக்கலாம். அதனால் மரணம், மண்ணறை போன்றவற்றைக் கேட்கும் போது அப்பிள்ளையின் உணர்வுகள் எந்த நிலையில் இருக்கும் என்பதை நாம் அறிய மாட்டோம். பெரும்பாலும் இது போன்றவற்றைக் கூறும் போது அவனைப் பயம் தான் ஆட்கொள்ளும். இதனால் பிள்ளையிடம் பொய்யுரைக்காமல் மரணத்தின் அர்த்தத்தைத் தெளிவுபடுத்தி மரணித்தவர் ஒரு பிரயாணம் சென்றிருப்பதைப் போன்று உவமைப்படுத்தி ஏற்றுக் கொள்ள வைக்க வேண்டும். வெகு விரைவில் பிறரிடமிருந்து உண்மையைக் கற்றுக் கொள்வான்.

மரணம் நிகழ்ந்த ஒரு குடும்ப சூழ்நிலையை குழந்தைக்கு வெளிப்படுத்த முன்னர் இறந்த ஒரு குருவி அல்லது ஏதாவது ஒரு பிராணி, அல்லது இறந்த மரமொன்றைக் காண்பித்துத் தெளிவுபடுத்துவது சிறந்தது. ஏனெனில் இது மரணத்தின் அர்த்தத்தை உணரும் விதத்தில் குழந்தைக்குத் தெளிவுபடுத்தும். அதன் பின்னர் நாம் இறந்தவர் இன்னொரு உலகில் வாழச் சென்றிருக்கின்றார் என்பதை எளிமையாகத் தெளிவுபடுத்த முயற்சிக்க வேண்டும். நாம் அனைவரும் வளர்ந்து பெரிதாகியதும் மரணித்து, எமக்கு முன்னால் மரணித்த அனைவருடனும் சேர்ந்து, அல்லாஹ்வின் அனுமதியுடன் அவர்களுடன் சேர்ந்து ஒன்றாக சுவனத்தில் வாழ்வோம் என்பதையும் விளக்க வேண்டும். மரணம்

என்பது ஒரு முடிவல்ல. மாறாக இதனை விடச் சிறந்த ஒரு வாழ்க்கைக்கு ஒரு நல்லடியான் மேற்கொள்ளும் அடுத்த கட்ட நகர்வு. அல்லது பாவி தான் செய்தவற்றிற்குத் தண்டனை பெறுவதற்கான அடுத்த கட்ட நகர்வு என்பதைப் பிள்ளை அறிந்து வைத்திருப்பது மிக முக்கியமாகும். அல்லாஹ் எம்மை மரணிக்கச் செய்கின்றான் என்றால் அவன் எம்மை நேசிக்கவில்லை என்று அர்த்தம் கிடையாது. மாறாக எமக்குக் கற்பனை கூட பண்ண முடியாதளவு அழகான சுவனத்தில் அவனுக்கருகில் வாழவே எம்மை மரணிக்கச் செய்கின்றான் என்பதையும் விளக்க வேண்டும்.

## அவ்வாறாயின் சிறுபிள்ளைகள் சிலர் ஏன் மரணிக்க வேண்டும்?

பொதுவாக சிறு குழந்தைகள் தீமை செய்வதில்லை. வேண்டுமென்றே தவறு செய்வதுமில்லை. எனவே அவர்களில் மரணிப்பவர்களை அல்லாஹ் தனது அருளால் அரவணைத்து அவர்களை சுவனத்தில் நுழைவிக்கின்றான். ஒரு மனிதன் மரணித்து இத்துப் போகும் போது அவனது ஆத்மா மாத்திரம் நிலைத்திருந்து, படைத்தவனிடம் செல்கின்றது. அவனது நல்ல நினைவுகள், நற்செயல்கள் மக்கள் மனதில் தொடர்ந்து நிலைத்திருக்கின்றது. எனவே நற்கருமங்கள் பல செய்து, இஸ்லாமியப் போதனைகளைக் கடைபிடித்துத் தனது இறைவனை சந்திக்க ஒவ்வொரு மனிதனும் தயாராக வேண்டும்.

## நாம் மரணித்ததும் எங்கு செல்கின்றோம்?

அல்லாஹ் எமக்கு நிர்ணயித்துள்ள கால அளவு முடிந்ததும் மண்ணறைக்குச் செல்கின்றோம். அதுதான் மரணித்தவர்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ள இடமாகும். இவ்வுலகில் வாழும் போது அல்லாஹ்வை விசுவாசித்து, அவனுக்குக் கட்டுப்பட்டு, நல்லறங்கள் புரிந்தவர்களுக்கு மண்ணறை சுவனப் பூஞ்சோலையாக இருக்கும். மறுமை வரை அதில் அவன் இன்பமாக இருப்பான்.

## மரணித்தவரால் கேட்க, பார்க்க முடியுமா? மண்ணுக்குள் மூச்சு விட முடியுமா? உண்ண, பருக, உறங்க முடியுமா?

ஆம், நாம் மரணித்தவருக்கு ஸலாம் சொல்லும் போது அதனை அவர் கேட்கின்றார். அவருக்காக நாம் பிரார்த்திக்கும் போது அவரை அது சென்றடைகின்றது. ஆனால் எங்களைப் போன்று அவர் மூச்சு விடமாட்டார். அதற்கான தேவையும் அவருக்கில்லை. அவர் எமது இவ்வுலக வாழ்க்கையல்லாமல் வேறொரு உலகில் இருக்கின்றார். அதுதான் மறுமை வாழ்க்கையின் முதல்படி மண்ணறையில் வாழும் திரைமறை வாழ்க்கையாகும். அதற்கென வேறுபட்ட விதிமுறைகள், இயல்பு நிலைகள் உண்டு. அங்கே மூச்சுவிடுதல், உண்ணுதல், பருகுதல், உறங்குதல், வேலை செய்தல் எதுவும் கிடையாது. ஒன்றோ தொடர்ச்சியான இன்பம். அல்லது தொடர்ச்சியான வேதனை.

## சுவனம் என்றால் என்ன? அதில் என்ன உள்ளது?

சுவனம் ஒரு சாந்தியான வீடு. அழகான இடம். அதில் நாம் விரும்பும், ஆசை வைக்கும் அனைத்தும் உள்ளன. நல்லறங்கள் புரியும் நல்லடியார்கள் செல்லுமிடமே சுவர்க்கம். அதில் எட்டு வாயில்கள் உள்ளன. பல படித்தரங்களைக் கொண்டது. நல்லடியார்கள் தமது நல்லறங்கள், அல்லாஹ்வின் அருளிற்கேற்ப அந்தந்த படித்தரங்களில் இருப்பர். அதிகமான நற்செயல்கள் புரிந்தவர் குறைவானவர்களை விட உயர்ந்த, அழகான இடத்தில் இருப்பர். எனினும் அனைவரும் பேரின்பத்திலும், திருப்தியிலும், சுகண்டியிலும் தான் இருப்பர். சுவனத்தில் நாம் மகிழ்ச்சியாகத் தான் வாழ்வோம். நோய் ஏற்படமாட்டாது. களைப்படைய மாட்டோம். அல்லாஹ், நபி (ஸல்) அவர்கள், ஏனைய நபிமார்கள், மற்றும் நாம் நேசிக்கும் அனைவரையும் அங்கு காணலாம். அங்கே உணவு, பானங்கள், இன்பங்கள், சுகண்டிகள் அனைத்திலும் நாம் விரும்பும் எல்லாவற்றையும் பெற்றுக் கொள்ளலாம்.

## நரகம் என்றால் என்ன? அல்லாஹ் ஏன் அதனைப் படைத்தான்??

நரகம் வேதனைக்குரிய இடமாகும். தீமை செய்வோர், மக்களைத் துன்புறுத்துவோர், அல்லாஹ்விற்குக் கட்டுப்படாமல் அவனுக்கு மாறு செய்வோர் அனைவரையும் தண்டிப்பதற்காக அல்லாஹ் ஏற்படுத்தியுள்ள இடமே நரகமாகும்.

## விலங்குகளின் நிலை என்ன? அவை சுவனமா? நரகமா?

விலங்குகள் அல்லாஹ்வின் ஏவல், விலக்கல்களுக்கு அப்பாற்பட்டவை. அவை வசப்படுத்தப்பட்ட படைப்பினங்கள். மனிதர்களுடைய பயன்பாட்டிற்காக அல்லாஹ் அவற்றைப் படைத்துள்ளான். எனவே அவற்றுக்கு விசாரணையோ, வேதனையோ கிடையாது. மறுமையில் எல்லா விலங்குகளும் எழுப்பப்பட்டு அவற்றுக்கு மத்தியில் பலி தீர்க்கப்படும். கொம்புள்ள ஆட்டிடமிருந்து அது குத்தியதற்காக பலி தீர்க்கப்படும். விலங்குகளுக்கு மத்தியில் பலி தீர்த்தல் முடிந்த பின்னர் அவற்றைப் பார்த்து மண்ணாகிவிடுங்கள் எனக் கூறப்படும். அவை மண்ணாகிவிடும்.

# விதியை நம்புவது தொடர்பான கேள்விகள்.



## விதி என்றால் என்ன?

விதியை நம்புதல் ஈமானின் அடிப்படைத் தூண்களில் ஒன்று. அல்லாஹ் கூறுகின்றான் : "அவனே அனைத்தையும் படைத்து, பின்னர் அதனை முறைப்படி நிர்ணயித்தான்" (அல்குர்ஆன் - 25:02). விதி (கழா கத்ர்) என்பது : பிரபஞ்சத்தின் அனைத்துப் பொருட்களும் அவை உருவாவதற்கு முன்னரே அவற்றைப் பற்றிய முழு விபரத்தையும் அல்லாஹ் அறிந்து, பாதுகாக்கப்பட்ட ஏட்டில் அவற்றை எழுதி, பின்னர் அவற்றைப் படைக்க நாடி, செயல்படுத்தும் விதத்தில் படைத்தான் என நம்புதலாகும். (அறிதல், எழுதுதல், நாடுதல், படைத்தல் ஆகிய நான்கும் விதியின் நான்கு படித்தரங்களாகும்)

## ஒரு விடயம் உருவாக முன்னர் அதனை எவ்வாறு அல்லாஹ் அறிவான்?

இதற்கான பதிலை எளிமையாக உணர முடியுமான ஓர் உதாரணத்தின் மூலம் தெளிவுபடுத்தலாம். ஒரு விளையாட்டு உபகரணத்தை தயாரிக்கும் ஒருவனால் அவ்உபகரணம் என்னென்ன செய்யும் என்பதை அது செய்வதற்கு முன்னாலே அறிய முடியும். ஏனெனில் அவன்தான் அதனைத் தயாரித்து அது என்னென்ன செய்ய வேண்டும் என்ற அனைத்து சிறிய, பெரிய திட்டங்களையும் நிர்ணயித்தவன். இவ்உபகரணத்தின் ஆற்றல்கள், அது இயங்கும் பகுதிகள் அனைத்தையும் முழுமையாக அதனைத் தயாரித்தவன் தான் அறிவான். இதற்கெல்லாம் சக்தி பெற்ற அந்த மனிதனையே அல்லாஹ் தான் படைத்தான். அல்லாஹ் தான் மகத்தான பலசாலி. விசாலமான அறிவுடையவன். முழுமையான செயற்திறனுள்ளவன். எனவே அவன் படைக்கும் பொருட்களைப் பற்றியெல்லாம் அவற்றைப் படைக்க முன்னரும், படைக்கும் போதும், படைத்த பின்பும் உள்ள அனைத்து நிலைகளையும் முழுமையாக அறிவான். மேலும் அல்லாஹ் தான் மனிதனையும், காலம், இடங்களையும் படைத்தான். எனவே அவன் இதற்கு முன் நடந்தது, இனி நடக்கப் போவது, ஒன்று நடக்க முன்னரே அது நடந்தால் எப்படி நடக்கும் என அனைத்தையும் அறிகின்றான்.

## எமது செயல்களில் நாம் கட்டாயப் படுத்தப்படுகிறோமா? மனிதனுக்கு அவனது செயல்களில் தேர்வு உண்டா?

மனிதன் அவனது வாழ்வில் சில விடயங்களில் கட்டாயப் படுத்தப்பட்டுள்ளான்.

மற்றும் சிலதில் தேர்வு செய்யும் வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளான். எமது பிறப்பு, இறப்பு, வாழ்நாள், எமது பெற்றோரைத் தீர்மானிப்பது, உறவினர்களைத் தீர்மானிப்பது போன்றவற்றில் எமக்குத் தேர்வு செய்யும் அதிகாரமில்லை. இவ்விடயங்களில் நாம் கட்டாயப் படுத்தப்படுகிறோம். ஆனால் அல்லாஹ்வை விசுவாசித்தல், அல்லது மறுத்தல், தொழுதல், அல்லது தொழாமல் இருத்தல் போன்றவற்றில் எமக்கு தேர்வு வழங்கப்பட்டுள்ளது. என்றாலும் இத்தேர்வு செய்யும் உரிமை எமது நாட்டம் எல்லாம் அல்லாஹ்வின் நாட்டத்திற்குட்பட்டதே. அதாவது, தேர்வு செய்யும் இந்த உரிமையிலிருந்து அல்லாஹ் எம்மைத் தடுக்க நினைத்தால் தடுத்துவிடுவான். ஒன்றை விடுவதிலிருந்து எம்மைத் தடுக்க நாடினால் தடுத்துவிடுவான். என்றாலும் மனிதனுக்குத் தேர்வு செய்யும் உரிமையைக் கொடுத்து அதனடிப்படையில் அவனை விசாரணை செய்வதாக அவன் தீர்ப்புச் செய்துள்ளான். இது தான் பின்வரும் வசனத்தின் விளக்கமாகும் : “ஆயினும், அகிலங்களுக்கெல்லாம் இறைவனாகிய அல்லாஹ் நாடினாலன்றி நீங்கள் (நல்லுபதேசம் பெற) நாடமாட்டீர்கள்” (அல்குர்ஆன் - 81:29).

கட்டாயப்படுத்தல், தேர்வு செய்தல் என்பவற்றை ஒரு நடைமுறை உதாரணத்தைக் கூறி விளக்கலாம். ஒரு கண்ணாடிக் குவளையை பிள்ளையிடம் கொடுத்து இதனை தரையில் வீசி உடைக்க முடியுமா? என்று வினவினால் அப்பிள்ளை : ஆமாம், நிச்சயமாக முடியும் என்று கூறும். அப்படியாயின் ஏன் உடைக்கவில்லை? என்று பிள்ளையிடம் கேட்டால் “இது தவறு, அவ்வாறு (வீணாக) உடைக்கக் கூடாது” என பதிலளிக்கும். அல்லாஹ் “நீ இதனை உடைக்க மாட்டாய். ஏனெனில் நீ நல்ல பிள்ளை” என்பதை ஏற்கனவே அறிந்துள்ளான். கெட்ட பிள்ளையிடம் இது கிடைத்திருந்தால் அவன் உடைத்திருப்பான் என்பதையும் அல்லாஹ் ஏற்கனவே அறிந்து வைத்துள்ளான். இக்குவளையை தரையில் வீசாமலிருக்க உன்னை யாராவது தடுத்தார்களா? அல்லது அத்தீய பிள்ளையை யாராவது இதனை உடைக்கக் கட்டாயப்படுத்தினார்களா? இவ்வாறுதான் நேர்வழியும் வழிகேடும் என்று அப்பிள்ளைகளுக்குப் புரிய வைக்க வேண்டும். மனிதன் தன்னைப் பற்றி என்ன எழுதப்பட்டுள்ளது என்பதை அறியமாட்டான். அதை அறியும்படி நீ ஏவப்படவுமில்லை. விதிகளை எழுதிவைத்தல் உட்பட அல்லாஹ்வின் அறிவு பரிபூரணமானது என விசுவாசம் கொள்ளுமாறுதான் நீ ஏவப்பட்டுள்ளாய். உனது நாட்டம், ஏவல்களை எடுத்து நடத்தல், விலக்கல்களைத் தவிர்ந்து கொள்ளும் அளவு போன்றவற்றிற்குத்தான் நீ பொறுப்பாளி. இதை உனது சக்திக்கும் நாட்டத்திற்கும் உட்பட்டது என்பதையும் தெளிவுபடுத்த வேண்டும்.

## ஏன் சிலருக்கு நேர்வழி காட்டிவிட்டு மற்றும் சிலருக்கு நேர்வழி காட்டவில்லை?

அல்லாஹ் அனைத்து மனிதர்களுக்கும் வழிகளைக் காட்டியுள்ளான். “மேலும் அவனுக்கு நன்மை, தீமை என்ற இரு வழிகளையும் நாம் காட்டவில்லையா? ” (அல்குர்ஆன் - 90:10). இந்த நேர்வழியின் அர்த்தம் சத்தியத்தையும், அசத்தியத்தையும் தெளிவாக விளங்கும் விதத்தில் நேரான பாதையை விளக்கும் வழிகளைத் தெளிவுபடுத்தியுள்ளான் என்பதாகும். இவ்விரு வழிகளில் ஒன்றை தெரிவு செய்யும் சந்தர்ப்பத்தை அல்லாஹ்

மனிதர்களுக்கு விட்டுள்ளான். சிலர் நல்ல வழியைத் தேர்வு செய்கின்றனர். மற்றும் சிலர் தவறான வழியைத் தேர்வு செய்கின்றனர்.

## எம்மில் சிலர் தவறு செய்து வழிதவறுவார் என்று அல்லாஹ் ஏற்கனவே எழுதியிருந்தால் ஏன் எம்மை அவன் தண்டிக்கின்றான்?

இது தெய்வீக அறிவுடன் தொடர்பானது. மனிதர்களிடம் அது பற்றி எந்த அறிவுமில்லை. அவர்களிடம் இருப்பதெல்லாம் வெறும் சந்தேகங்களும், மாயைகளும், அறியாமையும் தான். எனவே மனிதன் தனது உலக வாழ்வில் செய்பவற்றைப் பற்றி விசாரிக்கப்படுவான். ஒன்றைச் செய்யவோ தவிர்ந்து கொள்ளவோ அல்லாஹ் ஒருவனுக்கு எழுதி வைத்துள்ளதை அறிந்துகொள்ள யாருக்கும் எவ்வித வாய்ப்புமில்லை. நடந்து முடிந்த ஒன்றிற்குத்தான் விதியைக் காரணமாக்க வேண்டுமே தவிர எதிர்காலத்தில் நடக்கவிருப்பதற்கல்ல. அதே போன்று தான் அல்லாஹ் உனக்கு உலக விடயங்களை எழுதி வைத்துள்ளான். அதனையே சார்ந்திருக்காமல் ஏன் பயனுள்ளவற்றைச் செய்து தீங்கிழைப்பவற்றை விட்டு விடுகிறாய்? அதே போன்று தான் மார்க்க விடயத்திலும் அல்லாஹ் எமக்கு எழுதி வைத்திருப்பதிலேயே சார்ந்திருக்காமல் வெற்றிக்கான நற்செயல்களில் ஈடுபட வேண்டும் என்று கூறி தெளிவுபடுத்த வேண்டும். மற்றுமொரு உதாரணத்தைக் கூறி விளக்கலாம்: ஒரு மனிதன் ஓர் ஊருக்கு பிரயாணம் செய்ய விரும்புகிறான் என வைத்துக் கொள்வோம். அந்த ஊரிற்கு இரு பாதைகள் உள்ளன. ஒன்று பாதுகாப்பானது. மற்றது அபாயகரமானது. இரண்டில் எதனைத் தெரிவு செய்வான்? சந்தேகமின்றி இயல்பாகவே முதல் பாதையைத் தான் அவன் தேர்ந்தெடுப்பான். அதேபோன்று தான் மறுமைக்கான பயணமும். சுவனத்திற்குச் செல்லும் பாதுகாப்பான பாதையாகிய ஏவல், விலக்கங்களுக்கு கட்டுப்படுவதைத் தான் தெரிவு செய்து பயணிக்க வேண்டும். விதியை ஓர் காரணமாகக் காட்ட முடியுமாயிருந்தால் எமக்கு ஒரு குற்றவாளியையும் கைது செய்ய முடியாது. விதியில் எழுதப்பட்டதால் தான் இக்குற்றத்தைச் செய்தோம் என அவர்கள் காரணம் கூற முற்படுவார்கள். எனவே அல்லாஹ்வின் ஏற்பாடுகளைப் பொருந்திக் கொண்டு அவனிடம் முழுமையாக சரணடைவது தான் அனைவருக்கும் கடமையாகும். அல்லாஹ் “செய்பவற்றை பற்றி வினவப்படமாட்டான். அவர்கள்தான் வினவப்படுவார்கள்” (அல்குர்ஆன் - 21:23). எனவே படைப்பினங்கள் அவனுக்குரியது. கட்டளைகள் அவனுடையது.

## அல்லாஹ் ஏன் எம்மைப் படைத்தான்? பிரபஞ்சத்தின் அடிப்படை என்ன? ஏன் விலங்குகள் படைக்கப்பட்டன?

அல்லாஹ் கூறுகின்றான் : “இன்னும், ஜின்களையும், மனிதர்களையும் அவர்கள் என்னை வணங்குவதற்காகவேயன்றி நான் படைக்கவில்லை” (அல்குர்ஆன் - 51:56). எமக்கே பயனளிக்கும் ஒரு நோக்கத்திற்காக அவன் எங்களைப் படைத்துள்ளான். அதுதான் அவனை வணங்குதலாகும். அதன் பெறுபேறுகளை நற்செயல்களுக்கேற்ப மறுமையில் வைத்துள்ளான். நல்லவர்களுக்கு சுவனமும், தீயோர்க்கு நரகமும் உண்டு. இப்பிரபஞ்சம் முழுதும் அல்லாஹ்வின் படைப்பாகும். அது அறிவுடனும்

நுணுக்கமாகவும் தயாரிக்கப்பட்டுள்ளது. வானங்களையும் பூமியையும் படைத்து வானில் கோள்களையும் பரவ விட்டுள்ளான். நட்சத்திரங்களை வழிகாட்டியாகவும், அத்தாட்சியாகவும், அலங்காரமாகவும் படைத்துள்ளான்.

எமக்குக் குளிர் காயவும், உஷ்ணம் தரவும், பயிர்கள் முளைத்தல், கிருமி நாசினிகளை அழித்தல் போன்றவற்றில் பங்காற்றவும் அல்லாஹ் சூரியனைப் படைத்தான். மனித உணவுக்காகவும் தேவையேற்படும் போது பயணிக்கவும் விலங்குகளை வசப்படுத்திப் படைத்துள்ளான். அல்லாஹ் கூறுகின்றான் : "இன்னும், குதிரைகள், கோவேறு கழுதைகள், கழுதைகள் ஆகியவற்றை நீங்கள் ஏறிச்செல்வதற்காகவும், அலங்காரமாகவும், (அவனே படைத்துள்ளான்) இன்னும், நீங்கள் அறியாதவற்றையும் அவன் படைக்கிறான்" (அல்குர்ஆன் - 16:08). மனிதனைப் படைப்பதற்கு முன்னாலேயே மேற்கண்டவற்றை எல்லாம் படைத்து, பூமியையும் உயிர் வாழ்வதற்கேற்றவாறு அமைத்திருப்பது பிற படைப்பினங்களை விட அல்லாஹ் மனிதனை மேம்படுத்தி கௌரவப்படுத்தியதாலேயே. அத்துடன் இப்படைப்பினங்கள் அனைத்தும் அல்லாஹ்வை சதாவும் துதித்துக் கொண்டே இருக்கின்றன. அல்லாஹ் கூறுகின்றான் : "ஏழு வானங்களும், பூமியும், அவற்றில் உள்ளவர்களும் அவனைத் துதி செய்து கொண்டிருக்கின்றனர் இன்னும் அவன் புகழைக் கொண்டு துதி செய்யாத பொருள் (எதுவும்) இல்லை. எனினும் அவற்றின் துதி செய்வதை நீங்கள் உணர்ந்து கொள்ளமாட்டீர்கள், நிச்சயமாக அவன் பொறுமையுடையவனாகவும், மிக மன்னிப்பவனாகவும் இருக்கின்றான்" (அல்குர்ஆன் - 17:44).

### ? தூதர்கள் வராத சமூகத்தாரையும் அல்லாஹ் விசாரணை செய்வானா?

அவர்களும் கேள்வி கணக்கிற்கு உட்பட்டவர்கள் தாம். ஏனெனில் அல்லாஹ் அவர்களுக்குப் பகுத்தறிவைக் கொடுத்துள்ளான். மறுமையில் அவர்களை அல்லாஹ் சோதித்து, அவனுக்குக் கட்டுப்படுமாறு ஏவுவான். அவர்கள் பதிலளித்து, வழிப்பட்டால் சுவனம் நுழைவார்கள். மாறு செய்தால் நரகில் நுழைவார்கள்.




### ? ஏன் பூமியில் கெடுதிகள் உள்ளன?

இந்த உலகம் ஒரு சோதனைக் கூடம். இது இரு அத்தியாயங்களைக் கொண்ட ஒரு நாவலின் முதல் அத்தியாயத்தின் இடத்திலுள்ளது. மறுமைதான் விசாரணை செய்து கூலி வழங்கப்படும் நாள். அநியாயக்காரர்களிடமிருந்து அநீதியிழைக்கப்பட்டவர்களுக்காக பலி தீர்க்கப்படும் நாள். இது அந்த நாவலின் இரண்டாம் அத்தியாயத்தைப் போன்றது.



எனவே தீயவர்கள் இருப்பதும் அவர்கள் இவ்வுலகில் தண்டிக்கப்படாமல் இருப்பதும் ஒரு சோதனைக்காகவே. இதுவே முடிவல்ல. மாறாக, ஒவ்வொரு மனிதனும் தான் செய்தவற்றிற்கான கூலியைப் பெற்றுக்கொள்ள மறுமையில் நிச்சயம் எழுப்பப்படுவர். அல்லாஹ் கூறுகின்றான் : "எனவே, எவர் ஓர் அணுவளவு நன்மை செய்திருந்தாலும் அத(ற்குரிய பல)னை அவர் கண்டு கொள்வார். அன்றியும், எவன் ஓர் அனுவளவு தீமை செய்திருந்தாலும், அ(தற்குரிய பல)னையும் அவன் கண்டு கொள்வான்" *(அல்குர்ஆன் - 99:7,8)*

## அல்லாஹ் ஏன் தீயவர்களைப் படைத்தான்?

அல்லாஹ் மனிதர்களைப் படைத்து நல்லது அல்லது கெட்டதைத் தெரிவு செய்யும் சுதந்திரத்தை அவர்களுக்கு வழங்கியுள்ளான். பண்படுத்தப்பட்ட நல்ல பிள்ளையாகவும் உங்களுக்கு இருக்க முடியும். அதற்கு மாற்றமாகவும் இருக்க முடியும். எனினும் அதன் முடிவை நீங்கள் தான் சுமக்க வேண்டும். இது அல்லாஹ்வின் மதிநுட்பம் மற்றும் அருட்கொடைகளில் ஒன்று. தீயவர்களும் நல்லவர்களாக மாற முடியும். அதற்கு உதவுவது எமது கடமையாகும். மீறி, மறுத்து, தொடர்ந்து தீயவர்களாகவே இருந்தால் மக்களை இவர்களுடைய தீங்கை விட்டும் தூரப்படுத்துவது அவசியமாகும். அப்போது அல்லாஹ் எம்மை நேசித்து, பிரதியுபகாரம் செய்கின்றான். இவ்வுலக வாழ்க்கையில் அனைத்தையும் படைத்தவன் அல்லாஹ்தான். இந்த வாழ்க்கை சோதனைக் களம். அல்லாஹ் கூறுகின்றான் : "உங்களில் அழகிய செயலுடையவர் யார் என உங்களைச் சோதிப்பதற்காக அவனே மரணத்தையும் வாழ்வையும் படைத்தான்" (அல்குர்ஆன் - 67:02). மனிதர்களில் வழிதவறியவர்களிடம் தீய செயல்கள் இருப்பதும் இவ்வாறான சோதனைகளில் உள்ளது தான்.

## ஏன் சிலர் வலது குறைந்தவர்களாக அல்லது அங்கவீனர்களாகப் பிறக்கின்றனர்?

இது போன்றவர்களை அல்லாஹ் நோய், குறைகளுடன் படைத்து சோதிக்கின்றான். அவர்கள் பொறுமையாக இருந்து நன்மைகளை அதிகரித்துக் கொள்ளவும், எமக்கு அவன் செய்திருக்கும் அருளை நினைவூட்டவும், அவனது ஆற்றல்களுக்கு முன்னால் எமது பலவீனத்தை நினைவூட்டவுமே இவ்வாறு படைத்துள்ளான். அவன் எம்மில் பெரும்பான்மையினரை ஆரோக்கியசாலிகளாகவே படைத்துள்ளான். அதற்காக நாம் அவனுக்கு நன்றி செலுத்த வேண்டும். பெருமையடிப்பதன் மூலம் சரியான பாதையில் செல்ல முடியாது. மாறாக பணிவாக நடந்து, ஒருவருக்கொருவர் உதவி புரிந்து கொள்ளல் வேண்டும். நன்மையை செய்வோர் மறுமையில் சுவனத்தில் ஆரோக்கியசாலிகளாக நிரந்தரமாக இருப்பார்கள் -இன்ஷா அல்லாஹ்-

## ஏன் வறியவர்கள் செல்வந்தர்கள் என்று பாகுபாடு? ஏன் தீயவர்கள் மாளிகைகளிலும் நல்லோர் குடிசைகளிலும் வாழ்கின்றனர்?

இவ்வுலகிலுள்ள வாழ்வாதாரங்கள் அனைத்தும் அல்லாஹ்விடமிருந்து வருகின்றன. அல்லாஹ் தன் அடியார்களை சோதிக்கின்றான். சிலவேளை நல்ல மனிதர்களுக்கு அவர்கள் பிறருக்குக் கொடுக்கின்றனரா? என்பதை சோதிப்பதற்காக நிறையக் கொடுப்பான். இன்னும் சிலவேளை திருடாமல், வஞ்சகம் வைக்காமல் பொறுமையாக இருக்கின்றார்களா? என்று சோதிப்பதற்காக அவர்களுக்குக் குறைத்தும் கொடுக்கின்றான். இந்தத் தற்காலிக வாழ்க்கையில் நல்லவர்கள் பொறுமையாக வாழும் பட்சத்தில் மறுமையில் மகத்தான கூலி கிடைக்கும். செல்வம் கிடைத்தும் அதனைப் பிறருக்குக் கொடுக்காமல், தடுத்துக் கொண்டவர்கள் மறுமையில் தண்டிக்கப்படுவார்கள். ஏனெனில் அவர்கள் அல்லாஹ்வின் அருட்கொடையை மதிக்கவில்லை.

மேலும் பிள்ளைக்கு பின்வருமாறும் விளக்கலாம் : செல்வந்தர் ஏழைக்கு இரக்கம் காட்டவும், பலசாலி பலவீனமானவனுக்கு உதவவும் அல்லாஹ் மனிதர்களை ஏழை, பணக்காரன் என பல தரங்களில் படைத்துள்ளான். எல்லா விடயங்களிலும் மனிதர்களுக்கு மத்தியில் தராதரங்கள் இருப்பது அல்லாஹ்வின் நியதியாகும். மனிதர்களின் மொழிகள் பலதரப்பட்டவை, நிறங்கள் பலவகை, பல இனங்கள், இயல்புகளைக் கொண்டவர்கள். உற்சாகமானவர்களும் உள்ளனர். சோம்பேறிகளும் உள்ளனர். சிலர் பிறர் நலம் பேணுவோர். மற்றும் சிலர் சுயநலவாதிகள். சிலர் கொடைவள்ளல். மற்றும் சிலர் உலோபிகள். பொருளாதார ரீதியிலும் பணக்காரன், ஏழை என வேறுபாடுள்ளது. இரண்டுமே சோதனை தான். செல்வந்தன் செலவு செய்கின்றானா? ஸகாத் கொடுக்கின்றானா? பிறரை மதிக்கின்றானா? தர்மம் செய்கின்றானா? என சோதிக்கின்றான். ஏழை பொறுமை செய்கின்றானா? முயற்சிக்கின்றானா? பூமியின் பல பகுதிகளுக்கும் சென்று முயற்சிக்கின்றானா? இலஞ்சம் வாங்குதல் போன்ற ஊழல் செய்கின்றானா? திருடுகின்றானா? என சோதிக்கின்றான். எனினும் உத்தரவாதம் இரு தரப்பிற்கும்

உள்ளது. வாழ்வாதாரம் அளிப்பது அல்லாஹ் தனக்குத் தானே கடமையாக்கிக் கொண்டுள்ளான். செல்வமும், ஏழ்மையும் சுவனத்திற்கோ நரகத்திற்கோ நுழைவதை விட்டும் தடுக்கமாட்டாது. ஒவ்வொருவரும் தமது வசதிக்கேற்பவே (பொருளாதார விடயத்தில்) ஏவப்பட்டுள்ளனர். அனைத்து மனிதர்களும் செல்வந்தர்களாக ஒரே தரத்தில் இருந்தால் சிலர் சிலருக்கு உதவ முடியாமல் போய்விடும். சிலர் சிலரிடம் தேவை காண முடியாது. அல்லாஹ் கூறுகின்றான் : “அவர்களில் சிலர் மற்றும் சிலரை பணிக்கமர்த்திக் கொள்வதற்காக, அவர்களில் சிலரை மற்றும் சிலரை விட அந்தஸ்துக்களால் உயர்த்தியிருக்கிறோம்” (அல்குர்ஆன் - 43:32). இதன்மூலம் தான் வாழ்க்கைச் சக்கரம் சுழல்கின்றது. அனைவரும் ஒரே தரத்தில் இருந்தால் வாழ்க்கை ஸ்தம்பித்து விடும்.

## எனக்கு ஏன் நோய் ஏற்படுகின்றது? மனிதனுக்கு சோதனைகள் ஏற்படுவதேன்?

மனிதன் நோயுடன் பொறுமையாக இருக்கின்றானா? அல்லது கோபப்படுகிறானா? என்பதைப் பார்ப்பதற்காக அல்லாஹ் அனைவரையும் சோதிக்கின்றான். பொறுமையாளனுக்கு மறுமையில் அவன் மகிழ்ச்சி அடையும் அளவு அல்லாஹ் பாரிய வெகுமதிகளை வழங்குகின்றான். அந்தஸ்துக்களை உயர்த்தவும், உள்ளங்களையும், நெறிமுறைகளையும் அகங்காரம், தற்பெருமை, மமதையிலிருந்து தூய்மைப்படுத்தவும், ஆரோக்கியம், அருட்கொடைகளின் பெறுமதியை மனிதன் அறிந்து கொள்ளவும் அல்லாஹ் ஏற்படுத்தியதே இந்த நோய், சோதனைகள், நோவினைகள் ஆகும். இதன்



போது நல்லடியான் தனது இறைவனிடம் பிரார்த்தித்து, பொறுமை காத்து அவனை நெருங்குகின்றான். எனவே அவனுடைய ஈமானும் நன்மைகளும் அதிகமாகி இறைவனும் இவனை நேசிக்கின்றான்.

இச்சந்தர்ப்பத்தில் ஒரு காரை உதாரணமாகக் கூறிக் காட்டலாம். கார் ஏன் தயாரிக்கப்பட்டுள்ளது? ஓடுவதற்குத் தானே? அப்படியாயின் அதனுடன் சேர்த்து பிரேக்குகளை ஏன் தயாரிப்பு நிறுவனம் பொறுத்தி வைத்துள்ளது? ஓடக்கூடிய காரில் அதன் ஓட்டத்தை நிறுத்துவதற்காக பிரேக்குகளைப் பொறுத்துவது முரண்பாடில்லையா? பிரேக்குகளைப் பயன்படுத்துவது காரின் பாதுகாப்பிற்கு அத்தியாவசியமானதாகும். கார் ஓடுவதற்குத் தான் தயாரிக்கப்பட்டுள்ளது. அது பிறருடன் மோதாமலிருப்பதற்காக உரிய நேரத்தில் நிறுத்த பிரேக் உதவுகின்றது. தன்னை வணங்குவதற்காகவும், எமக்கு அருள் புரிந்து எம்மை மகிழ்விப்பதற்காகவும் அல்லாஹ் எம்மைப் படைத்திருப்பது போன்று, படைக்கப்பட்ட நோக்கத்தை மறந்து வாழும் மனிதனை உணர்வூட்டுவதற்காக அவன் சோதனைகளைப் படைத்துள்ளான். அப்போது அவன் வீண் வேடிக்கைகளைத் தவிர்த்து, இறைவனை நினைவுகூர்ந்து, பாவமன்னிப்புத் தேடுவதுடன் அச்சோதனைகளை பொறுமையுடன் ஏற்று, நன்மையை எதிர்பார்ப்பான்.

## தீங்கு விளைவிக்கும் பூச்சிகள், விலங்குகளையும் அல்லாஹ் தானா படைத்தான்?

அல்லாஹ்தான் அனைத்தையும் படைத்தவன். அவனே அனைத்தினதும் இரட்சகன். அவன் இப்படைப்புகளை தனது வல்லமையால் படைத்ததைப் போல் அவற்றை தனது மதிநுட்பத்தினாலும் சேர்த்தே படைத்துள்ளான். அவன் ஞானமுள்ளவன், அறிந்தவன். படைப்பினங்களின் விடயங்களில் நாம் அறியாதவற்றையெல்லாம் அவன் அறிகின்றான். ஏனெனில் அல்லாஹ்வின் அறிவு, மதிநுட்பத்துடன் ஒப்பிடும் போது அவன் எமக்குக் கற்றுத் தந்த கல்வியறிவு மிகவும் சிறியது. அதனால்தான் அல்லாஹ் பின்வருமாறு கூறுகின்றான் : “சொற்ப அறிவே நீங்கள் வழங்கப்பட்டுள்ளீர்கள்” (அல்குர்ஆன் - 17:85). அல்லாஹ் படைப்பினங்களைப் படைத்ததற்கான அனைத்து உள்ளார்ந்த காரணங்களையும் எம்மால் அறிய முடியாது.



அல்லாஹ்வின் படைப்பினங்களில் அவனது பணித்திறன் தேர்ச்சி, அவற்றிலுள்ள அவனது நிர்வாகத் திறமை போன்றன வெளிப்படுதல் இப்படைப்பினங்களைப்

படைப்பதற்கான மதிநுட்பங்களில் உள்ளதாகவும். படைப்பினங்கள் எவ்வளவு அதிகமாக இருந்தாலும் அவ்வனைத்திற்கும் அவனே வாழ்வாதாரம் அளிக்கின்றான். அதேபோன்று தான் தீங்கு விளைவிக்கக் கூடிய உயிரினங்கள் மூலம் அவன் சோதிக்கின்றான். அதனால் பாதிக்கப்பட்டவருக்குக் கூலி வழங்குகின்றான். அவற்றைத் துணிவுடன் கொன்றவரது வீரம் வெளிப்படுகின்றது. அதேபோன்று தான் தன்னைவிட மிகச் சிறிய ஒரு படைப்பினத்தினால் நோவினை ஏற்பட்டு, நோய் வாய்ப்படும் போது மனிதனின் பலவீனம், இயலாமை வெளிப்படுகின்றன. அத்துடன் பயனுள்ள பல மருந்து வகைகள் பாம்பு போன்ற பிராணிகளின் விஷத்தினால் தான் எடுக்கப்படுகின்றன என்பது மருத்துவ ரீதியாகவும், அனுபவ ரீதியாகவும் நிரூபணமாகியுள்ளது. அதேபோன்று விவசாயப் பயிர்களை மாசுபடுத்தக் கூடிய எலிகளை உண்ணுவதும் பாம்புகள் தான். அத்துடன் இவ்வாறு தீங்கிழைக்கும் அதிகமான விலங்குகள் பயனுள்ள பல விலங்குகளுக்கு உணவாக அமைவதன் மூலம், அல்லாஹ் திறன்பட படைத்துள்ள இயற்கையிலும், சூழலிலும் காணப்படும் சமநிலையில் ஓர் இணைப்பை உருவாக்குகின்றது.

## தினமும் ஏன் ஐவேளை தொழ வேண்டும்?

அல்லாஹ் விதித்துள்ள வணக்க வழிபாடுகள் அனைத்தும் நல்லடியார்களின் உள்ளத்தைப் பரிசுத்தப்படுத்தவும், அவனது உயிரோட்டத்தை மேம்படுத்துவதற்குமான வழிமுறைகளாகும். அவற்றை நிறைவேற்ற மிகக் குறைந்தளவு நேரமே எடுக்கின்ற அதேவேளை அதிகமான நன்மைகளை ஈட்டித் தருகின்றன. தொழுகையானது குர்ஆன் ஓதுதல், திக்ரு செய்தல், பிரார்த்தனை புரிதல் போன்ற அனைத்தையும் உள்ளடக்கியும், அடிமைத் தனத்தின் அனைத்துப் பகுதிகளையும் பரிபூரணமாக ஒன்று சேர்த்தும் இருப்பதால் ஒவ்வொன்றையும் தனித்தனியாக தனித்தனி உறுப்புக்களால் செய்வதை விட தொழுகை சிறப்பானதாக இருக்கின்றது.

நிச்சயமாக நல்லடியார்கள் தொழுகையின் மூலம் மகிழ்ச்சியடைகின்றனர். காரணம், அவர்கள் தொழுகையின் போது அல்லாஹ்வுடன் உரையாடுகிறார்கள். தாம் எதிர்பார்க்கும் அனைத்தையும் அவனிடம் கேட்கின்றார்கள். அவனும் அவர்களுக்கு பதிலளிக்கின்றான். நாம் தொழுகின்றோம். ஏன்? அல்லாஹ் தொழும்படி எமக்குப் பணித்துள்ளான். நாம் எப்போதும் அல்லாஹ் எமக்கு ஏவியவற்றை செய்ய விரும்புகின்றோம். எனவே நாம் அல்லாஹ்வை வணங்குகின்றோம். ஏனெனில் அவன்தான் எம்மைப் படைத்தவன். எமக்கு வாழ்வாதாரம் அளிப்பவன். மேலும் அவன் எமக்கு அளித்துள்ள மட்டிட முடியாதளவு அருட்கொடைகளுக்குப் பதிலாக வணங்கப்படுவதற்குத் தகுதியாகின்றான். அவன் கூறுகின்றான் : “அல்லாஹ்வின் அருட்கொடைகளை நீங்கள் கணக்கிட்டால் அதை உங்களால் மட்டிட முடியாது” (அல்குர்ஆன் - 16:18).

தொழுகை எனும் இந்த வணக்கமானது அல்லாஹ்வுடனான எமது நேசம், நன்றி செலுத்தல் ஆகியவற்றின் வெளிப்பாடாகவும், அவனின் பக்கம் நாம் தேவையுடையவர்கள் என்பதை ஏற்றுக் கொள்வதாகவும் உள்ளது. அவன் எமக்களித்துள்ள ஆரோக்கியத்தைத் தொடர்ந்து பாதுகாக்கவும், நலவுகளைப் பெறவும், கெடுதிகளை விட்டும் தூ ரமாகவும் நாம் அவன் பால் தேவையுடையவர்களாகும் என்பதை ஏற்றுக் கொள்வதே

தொழுகையாகும். அல்லாஹ்விற்கு இத்தொழுகை தேவையில்லை. அவன் எம்மை விட்டும், எமது செயல்களை விட்டும் தேவையற்றவன். அதன் மூலம் அவன் பயனடையப் போவதுமில்லை. வணக்கங்கள் அல்லாஹ்விடமிருந்து வந்த ஏவல்களாகும். நபி (ஸல்) அவர்கள் காட்டிய பிரகாரம் அதனை நிறைவேற்றுவதை அவன் எம்மிடமிருந்து எதிர்பார்க்கிறான். இதுதான் நாம் அவசியம் ஏற்றுக்கொள்ள வேண்டிய இரு பிரதான சாட்சியங்களின் அர்த்தமாகும். அதுதான் நபி (ஸல்) அவர்கள் காட்டிய பிரகாரம் அல்லாஹ்வை வணங்குவதாகும். அதேபோன்று இந்த வணக்கங்கள் சுவனத்தில் பிரவேசிப்பதற்கான காரணமாக அமையக் கூடிய மகத்தான கூலிகளைப் பெறுவதற்கான ஒரு வழிமுறையாக இருக்கின்றது. எந்த ஒரு மனிதனுக்கும் நற்செயல்களின்றி கூலி கொடுப்பதில்லை என்பதையே இறை ஞானம் வேண்டி நிற்கின்றது. இதனால் தான் சுவனம் என்பது அல்லாஹ்வின் விளைபொருளாகும். அது விலைமதிப்பற்றது. அதற்காக பாரிய விலை கொடுக்க வேண்டியுள்ளது. அதுதான் அவனுக்கு வழிப்படுதலாகும்.

## ❓ வேகமாக வளர நான் தொழுகையில் பிரார்த்தித்தேன். எனக்கு பதிலளிக்கவில்லையே?

பிரார்த்தனைக்கென பேண வேண்டிய சில ஒழுக்கங்கள் உள்ளன. இவ்வுலகம் இயங்குவதற்காக அல்லாஹ் ஏற்படுத்தி வைத்துள்ள விதிமுறைகள், வழிமுறைகளை மதிப்பதும் அவ்வாறான ஒழுக்கங்களில் உள்ளதாகும். நாம் அல்லாஹ்விடம் பிரார்த்திக்கின்றோம். அவன் எமக்கென தெரிவு செய்த நலவைச் செய்கின்றான். வாகனங்கள் வேகமாகச் செல்லும் பாதையில் மிதிவண்டியை வைத்து விளையாட தந்தையிடம் சிலவேளை நீ கேட்பாய். ஆனால் அவர் அதனை மறுப்பார். ஏனெனில் அவர் உன்னை நேசிக்கின்றார். உனது இந்த வேண்டுகோளுக்கு இணங்காமலிருப்பது தான் உனது பாதுகாப்பிற்கு உகந்தது என்பதால் தான் அவர் மறுக்கின்றார். நாம் அவனிடம் கேட்கும் பிரார்த்தனைகளுக்கு மூன்று நிலமைகளை வைத்திருப்பது அவன் எம்மீது கொண்டுள்ள தயாள குணத்திலுள்ளதாகும்.

01. நாம் கேட்டதையே நமக்குத் தருவான்.

02. எமக்கு நடக்கவிருந்த ஒரு தீங்கை இந்தப் பிரார்த்தனை மூலம் நீக்கிவிடுவான்.

03. சுவனத்தில் இதனை விட அழகானதொன்றை அடைவதற்காக இந்தப் பிரார்த்தனையை எமக்காக சேமித்து வைப்பான்.

## ❓ எனது தோழிகளைப் போல் நான் அழகாக இல்லை?

ஏனெனில் அல்லாஹ் ஒவ்வொருவரையும் அடுத்தவரை விட்டும் வேறு பிரித்துக் காட்டும் தோற்றத்துடனையே படைத்துள்ளான். அல்லாஹ்வின் படைப்பினங்கள் அனைத்தும் அழகானவையே. “திடமாக, நாம் மனிதனை மிகவும் அழகிய அமைப்பில் படைத்தோம்” அல்குர்ஆன் - 95:04). ஒவ்வொரு மனிதனும் தனது தனித்துவமான தோற்றத்தில் உள்ளனர். எனவே யாரை அல்லாஹ் மிக அழகாகப் படைத்துள்ளானோ அவர்

அல்லாஹ்விற்கு அதிகமாக நன்றி செலுத்த வேண்டியிருக்கும். அவ்வாறில்லாதோர் திருப்தியுடன் ஏற்றுக் கொள்ள வேண்டும். நன்றி செலுத்துபவர், பொறுமைகாப்பவர் அனைவருக்கும் அல்லாஹ்விடம் பல அந்தஸ்துக்களும் மகத்தான கூலியும் உண்டு.

## அல்லாஹ் எம்மை நேசிப்பதாயிருந்தால் எமக்கு ஏன் கெடுதிகள் ஏற்படுகின்றன?

நல்லவரையும் தீயவரையும் பிரித்தறிவதற்காக அல்லாஹ் எம்மை சோதிக்கின்றான். மனிதன் எப்போதும் அல்லாஹ்விடமே ஒதுங்கி அவனிடமே நெருக்கமாக இருப்பதற்காகவும் சில வேளை அவன் சோதிப்பான். அல்லாஹ் நல்லோர்களையும் சோதிக்கின்றான். அவர்களைப் பரிசுத்தப்படுத்தவும், அவர்களுடைய அந்தஸ்துக்களை உயர்த்தவும், பொறுமை காப்பதில் பிறருக்கு முன்மாதிரியாக இருக்கவும் அல்லாஹ் இவர்களை சோதிக்கின்றான். அப்போது இவர்களைப் போன்று பிறரும் பொறுமைகாத்து, இவர்களைப் பின்பற்றுவார்கள். இதனால் தான் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் : கடுமையாக சோதிக்கப்படுபவர்கள் நபிமார்கள். பின்னர் மார்க்கத்தைப் பின்பற்றுவதில் அடுத்தடுத்த தரங்களிலுள்ளவர்களாகும். (திர்மிதி – 2398). ஒவ்வொருவருடைய மார்க்கப்பற்றின் அளவிற்கேற்ப சோதிக்கப்படுவார்கள். மார்க்கத்தில் ஸ்திரத்தன்மை இருந்தால் சோதனைகளும் கடுமையாக்கப்படும். இதனால் தான் நபிமார்களை அல்லாஹ் கடுமையாக சோதித்தான். சிலர் கொலை செய்யப்பட்டனர். வேறு சிலர் நோவினை செய்யப்பட்டனர். அய்யூப் (அலை) போன்ற சிலர் கடுமையாக நீண்ட காலம் நோயினால் சோதிக்கப்பட்டார்கள். எமது நபி (ஸல்) அவர்களும் மக்கா, மதீனா இரு இடங்களிலும் நோவினைக்குள்ளானார்கள். அப்போதெல்லாம் அவர்கள் பொறுமையுடன் இருந்தார்கள். இதனைக் கூறுவதன் நோக்கம் என்னவெனில், விசுவாசிகள், இறையச்சமுள்ளவர்கள் அவர்களது விசுவாசம், இறையச்சம் ஆகியவற்றின் அளவிற்கேற்ப சோதிக்கப்படுவார்கள். அத்துடன் அல்லாஹ் தான் நாடியதைச் செய்வான், விரும்பியதைத் தீர்ப்பளிப்பான், உயர்ந்தவனாகிய பரக்கத் பொருந்திய அந்த அல்லாஹ் செய்பவற்றைப் பற்றி வினவப்பட்ட மாட்டான். ஏனெனில் அவன்தான் நீதி வழங்குவோர்களிலெல்லாம் மேலான நீதிபதியாக இருக்கின்றான்.





இவைதான் அதிகம் வினவப்படும் கேள்விகளாகும். இன்னும் வேறு பல கேள்விகளுக்கான விடைகளை அறியவோ, அல்லது பதில் கூறுவதற்கான இன்னும் சிறந்த முறைகளை முன்மொழியவோ எங்களுடன் பின்வரும் மின்னஞ்சல் மூலம் தொடர்பு கொள்வதை நாம் வரவேற்கிறோம். (jrakaf@gmail.com)

# முடிவுரை

இறுதியாக கல்வித்துறையில் நாம் முக்கியமாகக் கருதும் சில பரிந்துரைகள் வருமாறு:

01. துரிதமான பயிற்சிக் கருத்தரங்குகளை ஏற்பாடு செய்வதனூடாக பெற்றோரின் கல்வியில் முயற்சிகளைத் தீவிரப்படுத்துவது அவசியமாகும். ஏனெனில் அவ்விருவரும் தான் சிறந்த கல்வி மற்றும் விழிப்புணர்வுடனான ஒரு தலைமுறையை உருவாக்குவதற்கான முக்கிய தூண்களாகும்.

02. சுவாரஸ்யமான, மற்றும் பார்ப்பதற்கேற்ற வகையில் இஸ்லாமிய அடையாளத்துடன் ஊடக நிகழ்ச்சிகள் மற்றும் கார்ட்டூன்களை தயாரித்து வடிவமைத்தல். அதன் தொழில் நுட்பமும் தரமும் உலகளாவிய கலை மற்றும் இயக்கத்துடன் தேவையான அளவு புதுப்பிக்கப்பட்டதாக இருத்தல் வேண்டும்.

03. எமது சொந்த தயாரிப்புக்களையும், எங்கள் அடையாளத்தையும் அடைவதற்கும், பொழுதுபோக்கு மாற்றீட்டை வழங்குவதற்கும் பங்காற்றக் கூடிய வகையில் குழந்தைகளை இலக்காகக் கொண்ட ஊடகத்துறையில் மாநாடுகள் மற்றும் ஆராய்ச்சிகளை ஊக்குவித்து ஒழுங்கமைத்தல்.

04. குழந்தைகளின் அறிவியலுடன் தொடர்பான அரேபிய வெளியீடுகள் தொடர்ந்தும் மோசமாகவும் பலவீனமாகவும் தான் இருக்கின்றன. தற்போது இருப்பதெல்லாம் வெவ்வேறு சூழல்களின் வெவ்வேறான கலாச்சார விழுமியங்களைக் கொண்டு செல்லும் வெறும் மொழிபெயர்ப்புக்கள் மாத்திரமே. அரபு நூலகங்களில் இக்குறையை நிவர்த்தி செய்வதற்கான ஒருங்கிணைந்த முயற்சி அவசியமாகும்.

05. குழந்தையின் ஈமானியக் கல்வித்துறையில் பல பயிற்சித் திட்டங்களை வடிவமைத்து, இந்தக் குறிப்பிட்ட பகுதியில் பயிற்சியாளர்கள் மற்றும் ஆலோசகர்களை உருவாக்குதல். இந்நிகழ்ச்சிகள் குழந்தைகளின் வெவ்வேறு கல்வித் தரங்களில் பணிபுரியும் பயிற்றுவிப்பாளர்கள், ஆசிரியர்களை நோக்காகக் கொண்டதாக அமைய வேண்டும். அத்துடன் ஒவ்வொரு குழுவிலுமுள்ள கல்வி, மற்றும் செயன்முறையிலுள்ள வயது ஏற்றத்தாழ்வை இதன்போது கவனிக்க வேண்டும்.

06. சமகால கேள்விகளுக்கு போதுமானளவு தீர்வு காணும் கல்வி மற்றும் அறிவாற்றல் கூறுகள் அடங்கும் வகையில் முறையான கல்விப் பாடத்திட்டத்தை விருத்தி செய்தல்.

சாந்தியும், சமாதானமும் இறுதித்தூதர் முஹம்மது (ஸல்) அவர்களுக்கும், அவர்களது குடும்பத்தார், தோழர்கள், மறுமை வரை அவர்களை பின்துயரும் அனைவர் மீதும் உண்டாவதாக! அகிலத்தாரைப் படைத்துப் பரிபாலிக்கும் அல்லாஹ்வுக்கே எல்லாப் புகழும்.



مركز أصول
OsoulCenter
www.osoulcenter.com

osoulcenter
+966504442532
www.osoulcenter.com

عرض تعريفي عن مركز أصول
ومجالاته ووحداته.. مشاهدة ممتعة لك

9001
حاصل على شهادة
الاعتماد من الآيزو

حاصل على جائزة التميز
في العمل الخيري

பிரபஞ்சத்தைப் பற்றிய சரியான கண்ணோட்டத்தை குழந்தைகளிடம் உருவாக்குவதில் அவர்களின் ஆரம்பப் பருவத்திற்கு அதிக முக்கியத்துவம் உள்ளது. இப்பருவத்தில் குழந்தையின் மனதில் விதைக்கப்படும் கருத்துக்கள் தான் மனித ஆளுமையை அதன் அனைத்து அங்கங்களையும் உருவாக்கும் அடிப்படைத் தொகுதியாகக் கணிக்கப்படுகின்றன. அத்துடன் அவை குழந்தையின் உளவியல், சமூக, ஆன்மீகத் தேவைகளுக்கு ஏற்ற விதத்திலும் இருப்பது அவசியமாகும். வாழ்க்கை நடுவே உறுதியுடன் பயணிக்கவும், அதன் பாதைகளில் திடமான, உற்பத்தித்திறன், துணிவுமிக்க ஒரு மனிதனாகச் செல்லவும் உதவக்கூடிய வகையில் முழுமையான ஒரு குழந்தையாக உருவாக்க அக்கருத்துக்கள் தான் அவசியமாகின்றன. தான் கேட்பவற்றையும், பார்ப்பவற்றையும் வைத்துத் தான் ஒரு குழந்தை இவ்வுலகைப் பற்றி தனக்கென ஒரு மாதிரி வடிவத்தை உருவாக்கிக் கொள்கின்றது. அதற்குப் பின்னால், அவன் கடந்து செல்லும் நிலைகளுக்கேற்ப இந்த அடிப்படை (மாதிரி)க் கண்ணோட்டத்தை திருத்துவதும், மேம்படுத்துவதும் தான் அவனது வாழ்க்கையில் எஞ்சியுள்ளது.




ISO 9001
osoulcenter
www.osoulcenter.com
To Download This Book, please Visit:
OSOUL osoulstore.com